REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2021 நவம்பர் 29 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 89 இல. 283 | Monday 29, November, 2021 | 28பக்கங்கள் | 30/-

## நாட்டில் மேலும் 532 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம்



நாட்டில் மேலும் 532 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். இதற்கமைய, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட மொத்த தொற்று நபர்களின் எண்ணிக்கை 562,000 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, நாட்டில் கொவிட் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 14,305 ஆக அதிகரித்துள்ளது.

## மக்கள் நாட்டை விட்டு வெளியேறுவதாக எதிரணி பொய்ப் பிரசாரம்

### தடுப்பூசி ஏற்றிக் கொண்டு மீண்டும் செல்வதற்கு வந்தவர்களே அவர்கள்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயற்பாடுகள் காரணமாகத்தான் மக்கள் நாட்டை விட்டு வெளிநாடு செல்வதாக எதிரணி குற்றஞ்சாட்டியதில் எந்த உண்மையும் கிடையாது. அவரால் தான் வெளிநாடுகளில் பணிபுரிந்த மக்கள் நாட்டுக்கு வந்தனர். தடுப்பு மருந்துகளை ஏற்றிக் கொண்டு மீண்டும் வெளிநாடுகளுக்கு செல்ல வந்தவர்களே அவர்களென அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார். ஆயிரக்கணக்கான மக்கள் வேறு நாடுகளில் இறந்த போது, அந்த நாடுகளில் வாழும் எமது மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது நம்பிக்கை வைத்து அந்த நாடுகளை விட்டு வெளியேறி இங்கு வந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார். வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்புள்ள 06

## அரசிலிருந்து சு.க.விலகினாலும் அரசு ஒருபோதும் வீழ்ந்து விடாது

### சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை விட்டு விலகினாலும் அரசாங்கம் ஒருபோதும் வீழ்ச்சியடையாதென சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தேவையற்ற விமர்சனங்களை முன்னெடுப்பதற்கு முன் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட சுதந்திரக் கட்சியினர் கடந்த பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் தாமரை சின்னத்தில் தான் போட்டியிட்டார்கள் என்பதை மறந்து செயற்படக்கூடதெனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்றுள்ள நிகழ்வொன்றின் 06

## தென்னாபிரிக்க நாடுகளிலிருந்து:

## கடந்த 14 நாட்களுக்குள் சுற்றுலா பயணிகள் எவரும் வரவில்லை

### சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தென்னாபிரிக்காவில் மோசமான புதிய வகை திரிபு வைரஸ் பரவும் நிலையில் கடந்த 14 நாட்களுக்குள் தென்னாபிரிக்கா, நமீபியா, பொய்ஸ்வானா, சிம்பாப்வே, லெஷனோ மற்றும் சுவாசிலாந்து ஆகிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு எந்த சுற்றுலாப் பயணிகளும் வருகை தரவில்லையென சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 06

# ஒமிக்ரான் புதிய 'கொவிட்19' பிறழ்வு இலங்கைக்குள் வரக்கூடிய அபாயம்



### தொற்றாளர்களை அடையாளம் காண மரபணு சோதனைகளை துரிதப்படுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை

### மிகவும் பயங்கரமான பிறழ்வு இதுவென விஞ்ஞானிகள் தெரிவிப்பு

தென்னாபிரிக்க வலயத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள ஒமிக்ரான் புதிய கோவிட்19 பிறழ்வு தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்காக மரபணு பரிசோதனைகளை துரிதப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கான அனைத்து அளவுகோல்களையும் சுகாதார அமைச்சு முன்வைத்துள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூற்று மருத்துவபீடத்தின் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

புதிய பிறழ்வு எந்த நேரத்திலும் 06

## நாவலர் கலாசார மண்டப புனரமைப்பு; யாழ் மாநகரசபையில் கலந்துரையாடல்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 142 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் செயற்றிட்டங்களில் ஒன்றான நாவலர் கலாசார மண்டபத்தைப் புனரமைத்தலும் நாவலர் பெருமானின் பணிகளை அதன் மூலமாக முன்னெடுத்தல் என்ற செயற்றிட்டத்துக்கமைவாக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்குச் சொந்தமான நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலர் பணிகளை யாழ். மாநகர சபையோடு இணைந்து 06

## இந்திய தூதுவரின் தமிழக விஜயம்: நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற வழிவகுக்கும்



03

## தென்னாபிரிக்காவில் பரவும் ஒமிக்ரான் திரிபு வைரஸ் நாட்டுக்குள் வரும் அபாயம்

நாட்டின் எல்லைகளில் தடுப்பு நடவடிக்கைகள் அவசியம் 03

## கொழும்பு பாதுகாப்பு கூட்டுக்குழும வழிகாட்டலில் இந்தியா - இலங்கை - மாலைதீவு முத்தரப்பு கூட்டுப் பயிற்சி நிறைவு



03

## கனமழை காரணமாக நீர்மின் உற்பத்தி 75 வீதமாக அதிகரிப்பு

அண்மையில் பெய்த கனமழை காரணமாக நாட்டின் நாளாந்த மின்சாரத் தேவையில் சுமார் 75 சதவீதமாக நீர்மின் உற்பத்தி அதிகரித்துள்ளது. தற்பொழுது தினமும் சுமார் 44 ஜிகாவோட் நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நீர் மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பிரதான நீர்த்தேக்கங்களின் மொத்த நீர் கொள்ளளவு 94 வீதத்தை அண்மித்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். சில நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் 100 வீதத்தை எட்டியுள்ளது. விக்டோரியா, ரந்தெனிகல மற்றும் கொத்மலை நீர்மட்டமே இவ்வாறு உயர்ந்துள்ளது.

நீர் மின் உற்பத்தியில் இத்தகைய அதிகரிப்பு தற்போதைய டொலர் நெருக்கடி நிலையில் சற்று ஆறுதலை அளிப்பதாக அறிவிக்கப்படுகிறது. நீர்மின் உற்பத்தி குறைவாக இருந்தால் அனல் மின் 06

## நாட்டில் கொரோனா தொற்று தினமும் 700 பேர் வரையில் பதிவு



நாட்டில் கடந்த இரண்டு தினங்களாக தினமும் 700 கொவிட்19 தொற்றாளர்கள் பதிவாவதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

திருகோணமலையில் இராணுவத்தின் 22ஆவது படைப்பிரிவில் (27) நடைபெற்ற சேதனப் பசளை உற்பத்திகளை உத்தியோகபூர்வமாக இலங்கை லக்பொஹர நிறுவனத்திற்கு கையளித்தார். இதன் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அத்துடன் தற்போது நாளொன்றுக்கு 15 தொடக்கம் 30 வரையிலான மரணங்கள் பதிவாகுவதாகவும் இதற்குள் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் அதிகமாக காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 06

## உருமாற்றமடைந்த 'ஒமிக்ரோன்'

## தென்கிழக்காசிய நாடுகள் மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டும்

### WHO எச்சரிக்கை




உருமாற்றமடைந்த ஒமிக்ரோன் என பெயரிடப்பட்ட புதிய வகை கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டிருப்பதையடுத்து, கொரோனா பாதிப்பும் அதிகரித்து வருவதால், தென்கிழக்கு ஆசிய நாடுகள் மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டுமென்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளத. 06

## மழையுடனான காலநிலை மேலும் சில தினங்களுக்கு



### நாட்டின் சில பகுதிகளில் 100 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி எதிர்பார்ப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலை மேலும் மூன்று தினங்களுக்கு தொடரும் என்ன வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க நாட்டின் சில பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகலாம் என எதிர்பார்க்கப்படுவதாகம் திணைக்களம் தெரிவிக்கிறது.

கடும் மழை காரணமாக சில நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் அதிகரித்து காணப்பட்டுள்ளதாகவும் அதற்கிணங்க இரண்டு நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்றும் 06

## குறிஞ்சாக்கேணி படகு விபத்து;


## சிகிச்சை பெற்று வந்த 06 வயது சிறுமி உயிரிழப்பு

**றொட்டவெவ குறூப் நிருபர் அப்துல் ஸலாம் யாஸீன்**



திருகோணமலை, கிண்ணியா குறிஞ்சாக்கேணி இழுவைப் படகு விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த சிறுமியொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர். கடந்த (23) கிண்ணியா குறிஞ்சாக்கேணி இழுவைப்படகு விபத்தில் 06

## மகாவலி கங்கைக்குள் கார் கவிழ்ந்து ஒருவர் பலி



கண்டி – இலுக்மோதர பகுதியில் மகாவலி கங்கைக்குள் காரொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், காணாமற் போன நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 06

## தேயிலை, ஆடை உற்பத்தி ஏற்றுமதி:

## இரு வருடங்களில் 10 பில். டொலர் வருமானம் பெற்றுக்கொள்வதே இலக்கு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

### அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு



ஆடைத் தொழில் துறை மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் உற்பத்தி ஏற்றுமதி மூலம் எதிர்வரும் இரண்டு வருடங்களில் 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக பெற்றுக்கொள்ள முடியுமென பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண (27) பாராளுமன்றத்தில் தெரிவித்தார். நாட்டிற்கு ஆடைத் தொழில் உற்பத்தி ஏற்றுமதி மூலம் இவ்வருடத்தில் 4.8 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியுமென குறிப்பிட்ட அமைச்சர் எதிர்வரும் இரண்டு வருடங்களில் ஆடைத் தொழில் உற்பத்தி ஏற்றுமதி மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் துறை ஏற்றுமதி மூலம் 10 பில்லியன் டொலர்களை பெற்றுக்கொள்வதே அரசாங்கத்தின் இலக்காகும் என்றும் அவர் தெரிவித்தார். 06

## அரசாங்கத்திலிருந்து விலகமாட்டோம்; சு.க செயலாளர் தயாசிறி தெரிவிப்பு



அரசாங்கத்தில் இருந்து விலகுவதற்கான எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தொடர்பில் சில விமர்சனங்கள் இருந்தாலும் தொடர்ந்தும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குருணாகலில் நடைபெற்ற நிகழ்வொன்றி ன் பின்னர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

"அரசிலிருந்து விலக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான பிரசாரங்கள் செய்கிறார்கள். அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. நாங்கள் இன்னும் அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுகிறோம்." என்றார். அரசாங்கத்தின் மீது உங்களுக்கு ஏமாற்றம் இல்லையா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்துள்ள அவர், 06

### விக்கல் வீராச்சாமி



சும்மா நிண்ட ராணுவத்தை வம்புக்கிழுத்து மாவீரர் தினத்த ஒரு மாதிரி மல்லுக்கட்டி அனுஷ்டிச்சு முடிஞ்சுது, அடுத்தது என்னடா தம்பி....

அடுத்து பெப்ரவரி வரைக்கும் ஓய்வு எடுத்துட்டு மார்ச்சில ஜநா கூட்டத்தொடர் ஆரம்பிக்க ஆர்ப்பாட்டத்த நடத்த வேண்டியதுதான்...!!!

# சர்வதேச செய்திகள்

## ஒமிக்ரோன் திரிபுக்கு எதிராக மருந்து நிறுவனங்கள் ஆய்வு



புதிய ஒமிக்ரோன் வகை கொரோனா வைரஸ் திரிபை சமாளிக்கும் ஆற்றல் இருப்பதாக முன்னணி மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

தேவைப்பட்டால், 100 நாளுக்குள் புதிய தடுப்பு மருந்தைத் தயாரித்து விநியோகிக்க முடியும் என்று பைசர் பயோஎன்டெக் உறுதியளித்துள்ளது.

புதுவகை கொவிட்19 வைரஸுக்கு எதிராகத் தனது தடுப்பு மருந்து எப்படி வேலை செய்கிறது என்பது குறித்த தரவுகளை 2 வாரத்தில் திரட்ட நிறுவனம் திட்டமிட்டுள்ளது. தரவுகள் கிடைப்பதன் மூலம் தடுப்பு மருந்தில் ஏதேனும் மாற்றங்கள் செய்ய வேண்டுமா என்பது தெரியவரும் என்று பைசர் பயோஎன்டெக் கூறியது.

ஒமிக்ரோன் வைரஸ் வகைக்கு ஏற்ற கூடுதல் பூஸ்டர் தடுப்பூசியை உருவாக்கவுள்ளதாக மொடர்னா நிறுவனம் தெரிவித்துள்ளது. நொவாவக்ஸ் மருந்துத் தயாரிப்பு நிறுவனம், புதிய தடுப்புமருந்தை உருவாக்குவதில் மும்முரம் காட்டிவருகிறது. தடுப்புமருந்து அடுத்த சில வாரங்களில் சோதனைநிலைக்கு தயாராக்கப்படும் என்றும் அது நம்பிக்கை தெரிவித்துள்ளது.

ஒமிக்ரோன் திரிபுக்கு எதிராக தமது தடுப்பூசி சோதனையை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டதாக ஜோன்சன் அன்ட் ஜோன்சன் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## கொரோனா புது திரிபுக்கு இரு பெயர்கள் தவிர்ப்பு



தென்னாபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் புதிய கொரோனா திரிபுக்கு கிரேக்க அகர வரிசையின் இரண்டு எழுத்துகளை தவிர்த்து உலக சுகாதார அமைப்பு பெயர் சூட்டியுள்ளது.

புதிய கொரோனா திரிபுகளின் நீண்ட விஞ்ஞான பெயர்களுக்கு மாற்றாகவே கிரேக்க எழுத்துகள் பெயராக சூட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு ஏற்கனவே 12 கிரேக்க எழுத்துகளின் பெயர் சூட்டப்பட்டுள்ளன.

இந்நிலையில் கடந்த வாரம் தென்னாபிரிக்காவில் அதிக மரபணு பிறழ்வுகளுடனான புதிய வைரஸ் திரிபுக்கு அகர வரிசையில் அடுத்து உள்ள நூ அல்லது ஷி என்ற பெயர்களை தவிர்த்திருக்கும் உலக சுகாதார அமைப்பு அதற்கு ஒமிக்ரோன் என்று பெயர் சூட்டியுள்ளது.

இதில் நூ என்ற பெயர் 'நியூ' என்ற ஆங்கிலச் சொல்லுடன் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடும் என்று குறிப்பிட்டிருக்கும் உலக சுகாதார அமைப்பு ஷி என்ற பெயர் சீனா ஜனாதிபதியின் பெயர் என்பதோடு அது பொதுவான குடும்பப் பெயராக பயன்படுத்தப்படுவதால் அந்தப் பெயர் தவிர்க்கப்பட்டுள்ளது. எந்த ஒரு கலாசார, சமூக, தேசிய, பிராந்திய, தொழில் முறை அல்லது இனக் குழுக்களையும் தாக்குவதை தவிர்க்கும் வகையில் பெயர் சூட்டப்படுவதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

## வைரஸ் திரிபை கண்டுபிடித்ததற்கு தண்டனை: தென்னாபிரிக்கா கவலை



புதிய கொரோனா வைரஸ் வகையைக் கண்டறிந்ததற்காகத் தான் தண்டிக்கப்படுவதாக தென்னாபிரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவில் ஒமிக்ரோன் வகை கொரோனா வைரஸ் முதலில் கண்டறியப்பட்டதை அடுத்து, அதற்கும் அதை ஒட்டிய மற்ற சில நாடுகளுக்கும், பல உலக நாடுகள் பயணத் தடை விதித்தன.

மரபணுக் கூறுகளைத் திறம்பட ஆராய்ந்து, புதிய வகை வைரஸை விரைவில் கண்டறிந்ததற்குத் தான் இப்படித் தண்டிக்கப்படலாமா? என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சு வினவியுள்ளது.

திறன்மிக்க அறிவியல் ஞானம் பாராட்டப்பட வேண்டுமே தவிர, இப்படி தண்டிக்கப்படக்கூடாது என்று அது கூறியது.

புதிய வகை வைரஸ் உலகின் மற்ற பல நாடுகளிலும் தென்பட்டுள்ளதாக தென்னாபிரிக்கா கூறியது. இஸ்ரேலும், பெல்ஜியமும் தங்கள் நாடுகளில் வைரஸ் வகை கண்டறியப்பட்டதை உறுதி செய்துள்ளன.

உலக சுகாதார அமைப்பு, 'கவலைக்குரிய' வைரஸ் வகைகளின் பட்டியலில் ஒமிக்ரோனைச் சேர்த்துள்ளது. அது டெல்டாவைக் காட்டிலும், அதிவேகத்தில் பரவக்கூடியதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய வைரஸ் திரிபு கிட்டத்தட்ட தென்னாபிரிக்காவின் அனைத்து மாகாணங்களிலும் அதிகரித்து வருவதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

# புதிய கொரோனா திரிபு பல நாடுகளிலும் அடையாளம்: விழிப்பு நிலை அதிகரிப்பு



புதிதாக அடையாளம் காணப்பட்டிருக்கும் ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் திருபு பற்றிய அச்சம் உலகெங்கும் பரவி உள்ளது. இந்த தொற்றுக்கு எதிராக தமது மக்களை பாதுகாப்பதற்கு உலக நாடுகள் போராடி வருகின்றன.

இந்த புதிய மரபணு பிறழ்வு, வேகமாக பரவக்கூடியது என்று கூறப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவில் கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்ட இந்த திரிபு அவுஸ்திரேலியா, பிரிட்டன், ஜெர்மனி, இஸ்ரேல், இத்தாலி, செக் குடியரவு மற்றும் ஹொங்கொங் என பல நாடுகளிலும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஒமிக்ரோன் அச்சம் காரணமாக அனைத்து வெளிநாட்டவர்களும் இஸ்ரேலுக்குள் நுழைய இஸ்ரேல் தடை விதித்துள்ளது. இந்தத் தடை இரண்டு வாரங்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்கா உட்பட சிவப்புப் பட்டியலில் உள்ள நாடுகளில் இருந்து திரும்பும் இஸ்ரேலியர்கள் நிர்ணயிக்கப்பட்ட ஹோட்டல்களில் ஏழு நாட்கள் தனிமைப்படுத்த விதிக்கப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலில் புதிய திரிபு என்று சந்தேகிக்கப்படும் ஏழு சம்பவங்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதோடு மாலாவியில் இருந்து வந்த ஒருவருக்கு ஒமிக்ரோன் திரிபு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் இருந்து வந்த இருவரிடம் புதிய வைரஸ் திரிபு இருப்பதை அவுஸ்திரேலியா உறுதி செய்துள்ளது. இந்த இருவரும் முழுமையாக தடுப்பூசி பெற்றவர்கள் என்பதோடு அவர்களிடம் நோய் அறிகுறிகள் அடையாளம் காணப்படவில்லை என்று அந்நாட்டு சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் அவுஸ்திரேலியா, தென் கொரியா, பங்களாதேஷ், மாலைதீவு என பல நாடுகளும் தெற்கு ஆபிரிக்காவில் இருந்து வரும் வெளிநாட்டவர்களுக்கு தடை விதித்துள்ளன.

### ஐரோப்பாவில் நெருக்கடி

ஐரோப்பாவின் பல நாடுகளிலும் ஒமிக்ரோன் திரிபு என சந்தேகிக்கப்படும் தொற்றுச் சம்பவங்கள் அடையாளம் காணப்பட்டிருக்கும் நிலையில் அந்த பிராந்தியத்தில் தீவிர பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருவதோடு வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதில் போராடி வருகிறது.

மேற்கு ஆஸ்திரியாவின் அன்பிரக்கில், தென்னாபிரிக்காவில் இருந்து அண்மையில் வந்த ஒரு பயணியிடம் புதிய வைரஸ் திரிபு என சந்தேகிக்கப்படும் நோய்த் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

மறுபுறம் நமீபியாவில் இருந்து வந்த ஒருவரிடம் ஒமிக்ரோன் திரிபு அடையாளம் காணப்பட்டதாக செக் குடியரசு தெரிவித்துள்ளது. இந்தத் தொற்றுக்கு உள்ளானவருடன் பயணித்த ஏழு பேர் மீது வைரஸ் சோதனை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை பிரிட்டன், ஜெர்மனியில் இரு சம்பவங்கள் மற்றும் இத்தாலியில் ஒன்று என புதிய வைரஸ் திரிபு அடையாளம் காணப்பட்டுள்ளது. நெதர்லாந்து மற்றும் செக் குடியரசில் இந்த புதிய திரிபு என சந்தேகிக்கப்படும் பல சம்பவங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதில் தென்னாபிரிக்காவில் இருந்து வந்த 61 பேரிடம் கொவிட்19 இருப்பது அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இவர்களுக்கு புதிய திரிபு ஏற்பட்டுள்ளதா என்று நெதர்லாந்து நிர்வாகம் ஆராய்ந்து வருகிறது.

இந்த புதிய திரிபு ஏற்கனவே தமது நாட்டில் இருக்கக் கூடும் என்று அமெரிக்காவின் முன்னணி தொற்றுநோய் நிபுணர் டொக்டர் அன்தனி பவுச்சி தெரிவித்துள்ளார். எனினும் அந்த நாட்டில் இதுவரை இந்த தொற்றுச் சம்பவங்கள் அடையாளம் காணப்படவில்லை.

ஒமிக்ரோன் வைரஸ் திரிபு மீண்டும் நோய்த் தொற்று ஏற்படும் அச்சுறுத்தல் உள்ளது என்றும் அதில் கவலை அளிக்கக்கூடிய சில மரபணு பிறழ்வுகள் அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

பல உலக நாடுகள் இந்த வைரஸுக்கு எதிரான கடும் நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையில் இதனை ஒரு "கவலையளிக்கும் வைரஸ் திரிபாகவே" உலக சுகாதார அமைப்பு அடையாளப்படுத்தியுள்ளது. இந்த திரிபு அதிக தொற்றுத் தன்மை கொண்டது, உயிராபத்துக் கொண்டது மற்றும் தடுப்பூசியை தவிர்க்கக் கூடிய தன்மை கொண்டது என்பது பற்றி மேலும் ஆய்வு மேற்கொள்ள வேண்டி இருப்பதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

"இந்தத் திரிபு பெரும் எண்ணிக்கையான மரபணு பிறழ்வுகளைக் கொண்டிருப்பதோடு இந்த பிறழ்வுகளில் சில கவலை அளிக்கும் பண்புகளைக் கொண்டுள்ளன" என்று உலக சுகாதார அமைப்பு கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தது.

ஐரோப்பாவில் ஏற்கனவே நோய்த் தொற்று அதிகரித்து சில நாடுகளில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட நிலையிலேயே ஒமிக்ரோன் புதிய திரிபு அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆஸ்திரியா மற்றும் ஸ்லோவாக்கியாவில் ஏற்கனவே முடக்க நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த புதிய திரிபு குறித்து முதலீட்டாளர்களிடையே கவலையை அதிகரித்திருக்கும் நிலையில் நிதிச் சந்தைகளிலும் இது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் திரிபில் உள்ள அனைத்து மரபணு பிறழ்வுகளும் ஆபத்தானவை இல்லை என்றாலும், சில பிறழ்வுகள் காரணமாக இதற்கு பரவும் தன்மை, தொற்றும் தன்மை, உடலில் அதிகமான பாதிப்பை உண்டாக்கும் தன்மை ஆகியவற்றின் இருப்பதால் இது கவலைக்குரிய திரிபு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திரிபின் இயல்பு காரணமாக ஏற்கனவே கொரோனா தொற்று உண்டானவர்களுக்கும் மீண்டும் நோய் தொற்றுவதற்கான அபாயம் உண்டாகியுள்ளது.

இதேவேளை தென்னாபிரிக்கா, புதிய வைரஸ் திரிபு குறித்து உலகை எச்சரித்ததற்காகத் தான் தண்டிக்கப்படுவதாகவும் நியாயமற்ற வகையில் நடத்தப்படுவதாகவும் குறைகூறியுள்ளது.

இதற்கிடையே, தென்னாபிரிக்காவை விட்டு வெளியேற விரும்பும் பயணிகளால் அங்குள்ள விமான நிலையங்களில் நெரிசல் நிலவுகிறது. திடீரெனப் பல நாடுகள் தென்னாபிரிக்காவிலிருந்து புறப்படும் விமானங்களுக்குத் தடை விதித்ததால், பயணிகள் செய்வதறியாமல் திகைத்துப் போயுள்ளனர்.

## பெரு நாட்டில் 1200 ஆண்டுகள் பழமையான மம்மி கண்டுபிடிப்பு



இன்கா நாகரிக காலத்துக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த மம்மி ஒன்றை பெருவில் உள்ள அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

தலைநகர் லிமாவின் கிழக்கே உள்ள கஹமர்கீலா எனுமிடத்தில் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இறுதிச் சடங்கு நடத்தப் பயன்படுத்தப்பட்ட ஓரிடத்தில் அகழ்வாராய்ச்சி செய்ததில் பதப்படுத்தப்பட்ட இந்த பழங்கால மனித உடல் கிடைத்துள்ளது.

இன்கா நாகரிகத்தை ஆட்சி செய்த இன்கா பேரரசு 12ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. இந்த மம்மி அதற்கும் முந்தையது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மம்மி மண்ணுக்குள் புதைக்கப்பட்டு 800 ஆண்டுகள் முதல் 1200 ஆண்டுகள் வரை இருக்கலாம் என்று அகழ்வாராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

புதைக்கப்பட்ட இந்த உடலுடன் சேர்த்து இறந்த நபர் விண்ணுலக வாழ்வில் பயன்படுத்துவதற்கான படையல்களாக பல பொருட்களும், உணவுப் பொருட்களும் புதைக்கப்பட்டு இருந்தன என்று அகழ்வாராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

இந்த மம்மியுடன் சேர்த்து அத்துடன் புதைக்கப்பட்டிருந்த பொருட்களையும் அகழ்வாராய்ச்சியாளர்கள் தோண்டி எடுத்துள்ளனர்.

இந்த மம்மியின் காலத்தை இன்னும் துல்லியமாகக் கண்டறிவதற்காக ரேடியோ கார்பன் டேட்டிங் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று அகழ்வாராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## மெக்சிகோவில் பஸ் வண்டி வீட்டில் மோதி 19 பேர் பலி



மெக்சிகோ சிட்டியில் நேர்ந்த பஸ் விபத்தில் குறைந்தது 19 பேர் பலியானதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பயணிகளுக்கான அந்த பஸ் நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்தபோது, ஒரு வீட்டின் மீது மோதியது. அதில் மேலும் 20 பேர் காயமுற்றனர்.

மெக்சிகோவில் உள்ள சமயத் தளம் ஒன்றை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, அந்தப் பஸ்ஸின் நிறுத்தும் விசை செயல் இழந்ததாக மெக்சிகோ ஊடக அறிக்கைகள் குறிப்பிட்டன.

இருப்பினும், அதிகாரிகள் விபத்துக்கான மற்ற காரணங்களை வெளியிடவில்லை.

விபத்து நேர்ந்தவுடன், அந்த இடத்துக்கு 10 அவசர மருத்துவ வாகனங்கள் அனுப்பப்பட்டதாக அந்த வட்டாரத்தின் செஞ்சிலுவைச் சங்கம் கூறியது.

சிலர் வான்வழியாக மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

மெக்சியோவில் அதிக உயிர்ச்சேதங்கள் கொண்ட வீதி விபத்துகள் இடம்பெறுவது வழக்கமானதாக மாறியுள்ளது. கடந்த செப்டெம்பரில் வடக்கு மாநிலமான சொனோராவில் பஸ் மற்றும் டிரக் வண்டிகள் மோதி 16 பேர் கொல்லப்பட்டு மேலும் 22 பேர் காயமடைந்தனர்.

கடந்த ஏப்ரலில் சொனோராவில் சுரங்கத் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற இரு பஸ்கள் விபத்துக்குள்ளானதில் 16 பேர் கொல்லப்பட்டனர்.

## கொவிட் நிதியத்துக்கு நிதியுதவி



கொவிட்19 நிதியத்துக்கு அரச ஈட்டு, முதலீட்டு வங்கி 05 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

அரச ஈட்டு, முதலீட்டு வங்கியினால், "செய்கடமை" ( இட்டுகம) COVID 19 சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்துக்கே, இந் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான காசோலை, அரச ஈட்டு, முதலீட்டு வங்கியின் பதில் பொது முகாமையாளரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான லுஷாந்த ரணசிங்கவினால், ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளர் சுகீஸ்வர பண்டாரவிடமிருந்து (26) கையளிக்கப்பட்டது.

அரச ஈட்டு, முதலீட்டு வங்கியின் அதிகாரிகள் சிலரும் இதன் போது கலந்துகொண்டனர்.

# தென்னாபிரிக்காவில் பரவும் ஒமிக்ரான் திரிபு வைரஸ் நாட்டுக்குள் வரும் அபாயம்

## நாட்டின் எல்லைகளில் உடனடியாக தடுப்பு நடவடிக்கைகள் அவசியம்

### அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்திடம் வேண்டுகோள்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்டு ஐரோப்பிய நாடுகளெங்கும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வரும் புதிய கொரோனா திரிபு வைரஸ் இலங்கைக்குள் பிரவேசிக்கும் அபாயம் காணப்படுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் நபர்களின் ஊடாக இந்த புதிய திரிபு வைரஸ் தொற்று நாட்டில் பரவ வாய்ப்புகள் உள்ளதாகவும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது. அதனைக் கவனத்திற் கொண்டு நாட்டின் எல்லைகளில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் மேற்படி திரிபு வைரஸ் நாட்டிற்குள் பரவும் அபாயம் காணப்படுவதாகவும் மக்கள் சுகாதார வழிகாட்டல்

களை முறையாக பின்பற்றுவது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள சங்கத்தின் முக்கியஸ்தரான டாக்டர் பிரசாத் கொழம்பகே,

தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா திரிபு வைரஸ் மிக பயங்கரமான வைரஸாகும். அந்த வைரஸ் தற்போது ஐரோப்பிய நாடுகளெங்கும் பரவ ஆரம்பித்துள்ளது.

அதனால் பல்வேறு நாடுகள் தமது நாட்டு எல்லைகளை பாதுகாப்பதற்கான பாரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அரசாங்கம் கடந்த காலங்களில் பெற்றுக் கொண்டுள்ள அனுபவத்துடன் உடனடியாக நாட்டின் எல்லைகள் மற்றும் நாட்டிலுள்ள அனைத்து விமான நிலையங்கள் துறைமுகங்கள் உள்ளிட்ட பகுதிகளில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம்.

அத்துடன் நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பிசிஆர் பரிசோதனை மற்றும் என்டிஜன் பரிசோதனைகளை அதிகரிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பாதுகாப்பு கூட்டுக்குழும வழிகாட்டலில்

# இந்தியா-இலங்கை-மாலைதீவு முத்தரப்பு கூட்டுப் பயிற்சி நிறைவு



இந்தியா – இலங்கை – மாலைதீவுகள் இடையிலான முத்தரப்பு கூட்டு கடற் பயிற்சிகள் கடந்த 27, 28 ஆகிய திகதிகளில் நடைபெற்றன. கொழும்பு பாதுகாப்பு கூட்டுக் குழுமத்தின் வழிகாட்டலின் அடிப்படையில் இந்தப் பயிற்சிகள் நடைபெறுவதுடன் கடற்பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளுக்கான ஒத்துழைப்பை ஒருங்கிணைப்பதற்கான முக்கிய செயற்பாடாகவும் இது அமைகின்றது.கொழும்பு பாதுகாப்பு கூட்டுக் குழுமத்தின் அவதானத்துடனான இந்த நடவடிக்கைகள் நிலையான செயற்பாட்டு நடைமுறைகளை தழுவியதாகவும் மூன்று கடற்படையினரதும் இயங்கு திறனை மேம்படுத்துவதாகவும்

06

# வீதி விபத்துகள், சமூக விரோத செயல்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் கிளிநொச்சியில் தெரிவிப்பு



மக்களுக்கு பாதிப்புக்களையும் அசௌகரியங்களையும் ஏற்படுத்தும் அனைத்துச் செயற்பாடுகளுக்குமெதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் மீளாய்வுக் கூட்டத்தின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் (27) கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் ,

"கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற வீதி விபத்துக்களை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கவேண்டும்.

இடம்பெறும் வீதி விபத்துக்களில் பெரும்பாலானவை சாரதிகளின் கவனயீனம் காரணமாகவே இடம்பெறுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எனவே,பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாகவே வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த முடியும்.

அதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறுகின்ற வாள் வெட்டு போன்ற சமூக விரோதச் செயற்பாடுகளும் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு தேவையான வகையில் பொலிஸாரையும் இராணுவத்தினரையும் பயன்படுத்துவது தொடர்பாக யாரும் அலட்டிக் கொள்ளத்தேவையில்லை.

எமது மக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களை களைவதற்கு எமது படையினரையும் எமது இராணுவத்தினரையும் பயன்படுத்துவதில் எந்தவிதமான

06



வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்புள்ள மக நெகும நிர்மாண இயந்திர நிறுவனத்தினால் கட்டுகம்பொல ஆடிகமவத்தையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அஸ்போல்ட் முழுமையான கலவை இயந்திர தொழிற்சாலையின் உற்பத்தி பணிகளை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆரம்பித்து வைத்து பார்வையிடுவதைப்படத்தில் காணலாம்.

இந்திய தூதுவரின் தமிழக விஜயம்:

# நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற வழிவகுக்கும்

### இராதாகிருஷ்ணன் எம்பி சபையில் நம்பிக்கை தெரிவிப்பு



இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே அண்மையில் தமிழகத்திற்கு விஜயம் செய்து தமிழக முதல்வர் மற்றும் ஆளுநர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் மேற்கொண்ட சந்திப்புகள் இலங்கையின் நீண்டகால பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர் வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் (27) அது தொடர்பில் குறிப்பிட்ட இராதாகிருஷ்ணன் எம்பி:

இலங்கையில் நீண்ட காலமாக தொடரும் இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை மற்றும் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும்

06

பலஸ்தீன விவகாரத்திற்கு தீர்வு காண வேண்டும்

# நாம் பலஸ்தீன நாட்டு மக்களுடனே இருக்கிறோம்

### ஆளும் தரப்பு எதிர்த்தரப்பு எம்.பிகள் சபையில் கருத்து

பலஸ்தீன பிரச்சினையை மேலும் ஒரு தசாப்தம் நீடிக்காது தீர்வு காண்பதற்கு உலக தலைவர்கள் முன்வர வேண்டும். இலங்கை அரசாங்கம் பலஸ்தீன மக்களுடனே இருக்கிறது.சர்வதேச அரங்கில் பல சந்தர்ப்பங்களில் பலஸ்தீனுக்கு ஆதரவாக இலங்கை செயலாற்றியுள்ளது என வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

பலஸ்தீனம் தொடர்பாக சுரேன் ராகவன் எம்.பி முன்வைத்த ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் பதில் அளித்து உரையாற்றிய அவர்,

இலங்கையும் பலஸ்தீன ஒத்துழைப்பு தினத்தில் கைகோர்க்கிறது. இலங்கை தொடர்ச்சியாக பலஸ்தீன மக்களின் உரிமைக்காக குரல்கொடுத்து வருகிறது. அதன் இறைமை மற்றும் சுதந்திரத்திற்காக ஆதரவு தெரிவித்து வருகிறது. ஐ.நாவில் பலஸ்தீனத்திற்கு நிரந்தர அங்கத்துவம் கிடைக்கவும் ஆதரவு வழங்கி வருகிறது. இஸ்ரேல்-பலஸ்தீன் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே எமது நாடு உள்ளது.

06

மதுபோதையில் குழப்பம்;

# தந்தையின் தாக்குதலில் இளைஞன் உயிரிழப்பு

குளியாப்பிட்டி – கடவளகெதர பகுதியில் வீடொன்றில் மதுபோதையில் அமைதியின்மையை ஏற்படுத்திய இளைஞர் ஒருவர் தந்தையால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மதுபோதையில் இருந்த குறித்த இளைஞர் தனது தந்தையை தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்பின்னர் தந்தையினால் பொல்லால் தாக்கப்பட்டு காயமடைந்த குறித்த இளைஞர், குளியாப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். முனமல்தெ னியவைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொலைச் சம்பவம் தொடர்பில் 46 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.





இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை இளைஞர் சமூக சம்மேளனம் ஆகியன இணைந்து நடத்திய தேசிய இளைஞர் விருது வழங்கும் நிகழ்வு கொழும்பில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் இளைஞர் ஒருவர் விருது பெறுவதையும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் காண்க.

படங்கள்: சுதத் மலவீர

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 143.01 | 149.30 |
| கனடியன் டொலர் | 156.79 | 162.96 |
| யூரோ | 223.85 | 232.26 |
| ஜப்பான் யென் | 1.7169 | 1.7858 |
| சிங்கப்பூர் டொலர் | 145.77 | 150.65 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.16 | 273.85 |
| சுவிஸ் பிராங்க் | 211.85 | 219.78 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 534.00 | கட்டார் ரியால் | 55.29 |
| குவைத் டினார் | 665.86 | சவூதி ரியால் | 53.68 |
| ஓமான் ரியால் | 522.98 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.81 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் கார்த்திகை மாதம் 13ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரபீஉனில் ஆகிர் பிறை 23

## குறள் தரும் சிந்தனை



தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்

*கல்லாதவர்களைக் களர்நிலத்துக்கு ஒப்பிடுவதே பொருத்தமானது. காரணம் அவர்கள் வெறும் நடைப்பிணங்களாகவே கருதப்படுவார்கள்.*

# கொவிட் 19 வைரஸின் மற்றொரு ஆபத்து மிக்க புதிய பிறழ்வு

உலகுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் கொவிட் 19 தொற்று 2019 ஆண்டின் இறுதியில் தோற்றம் பெற்று குறுகிய காலப்பகுதியில் உலகம் முழுவதும் பரவியதோடு பெரும் பாதிப்புக்களையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. இத்தொற்றின் தாக்கமும் பரவுதலும் கடந்த இரண்டொரு மாதங்களாக குறைவடைந்து வருகின்றன. இதற்கு இத்தொற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசிகள் பெரிதும் உதவியுள்ளன. தற்போது இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான மாத்திரையும் கண்டுபிடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

இம்மாத்திரையைப் பயன்படுத்த அங்கீகரித்த உலகின் முதல் நாடாக பிரித்தானியா விளங்குகின்ற அதேநேரம் இலங்கையும் அம்மாத்திரைப் பயன்படுத்த அங்கீகரித்துள்ளது. இந்தச் சூழலில் இத்தொற்றின் அச்சுறுத்தலும் சவாலும் உலகில் முடிவுக்கு வந்து கொண்டிருக்கின்றன என்ற புதிய நம்பிக்கை தோற்றும் பெற்று நாளுக்காள் வளர்ச்சியும் பெற்று வந்தது.

இந்த நிலையில்தான் இத்தொற்றின் புதியதொரு பிறழ்வு தென்னாபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. இது 50 பிறழ்வுகளைக் கொண்டதொரு திரிபாகக் காணப்படுவதாக மருத்துவ விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கின்றனர். இப்பிறழ்வானது கொவிட் 19 தொற்று இற்றை வரையும் அடைந்துள்ள பிறழ்வுகளை விடவும் அதிக வேகமாகப் பரவக் கூடியதாக இருப்பதாகவும், அதிக தாக்கம் கொண்டதாக விளங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. இத்தொற்று தென்னாபிரிக்காவில் வேகமாகப் பரவுவதாகக் கூறப்படுகின்றது.

கொவிட் 19 தொற்றானது, 2020 ஆண்டு மே மாதமளவிலும் தென்னாபிரிக்காவில் ஏற்கனவே திரிபொன்றைக் கண்டது. அதுவே பீட்டா திரிபாகும். அத்திரிபினாலும் உலகின் பல நாடுகளும் பெரிதும் பாதிப்புக்களை எதிர்கொண்டன. தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள பி 1.1.529 என்ற இத்திரிபும் அதிக அச்சுறுத்தல் மிக்கதாக உள்ளதாக மருத்துவ விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இவ்வாறான நிலையில் உலக சுகாதார ஸ்தாபனம் இத்திரிபுக்கு 'கவலைக்குரிய திரிபு' என்றும் 'ஒமிக்ரோன்' என்றும் பெயரிட்டுள்ளது.

இத்திரிபு தென்னாபிரிக்காவில் முதலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதிலும், அயல் நாடுகளிலும் பதிவாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறான நிலையில் தென்னாபிரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு பிரித்தானியா போன்ற நாடுகள் பயணத்தடை விதித்துள்ளன. அந்த வகையில் இலங்கையும் தென்னாபிரிக்கா, நமிபியா, சிம்பாபே, பெட்சுவானா, லெஸ்தோ, சுவாசிலாந்து ஆகிய ஆறு நாடுகளின் பயணிகளுக்கு 14 நாட்களுக்கு தடைவித்திருக்கின்றது. இந்த நாடுகளுக்கு பயணம் செய்து அண்மையில் நாடு திரும்பியவர்கள் இருப்பின் அவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திக் கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

அதேநேரம், இலங்கையைச் சேர்ந்தவர்கள் அண்மைக் காலமாக ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள சில நாடுகளுக்கு மாணிக்கல் வர்த்தக நோக்கில் சென்று வருகின்றனர். தற்போது சிலர் அந்நாடுகளில் தங்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதனால் அவர்களது நலன்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

இதேவேளை பிரித்தானியா, ஜேர்மனி, இத்தாலி, இஸ்ரேல், ஹொங்கொங் போன்ற நாடுகளிலும் இத்தொற்று பதிவாகி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் இப்பிறழ்வு தொடர்பில் உலகம் முழுவதும் விஷேட கவனம் செலுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இப்பிறழ்வு உலகிற்கே அச்சுறுத்தலாக அமைந்து விடுமோ என்ற அச்சமும் மக்கள் மத்தியில் துளிர்க்கத் தொடங்கியுள்ளது. இந்தியாவில் தோற்றம் பெற்று உலகில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்திய டெல்டா திரிபின் தாக்கம் குறைவடைந்துள்ள இந்தச் சூழலில் ஒமிக்ரோன் திரிபு தோற்றம் பெற்று இருப்பது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள புதிய நம்பிக்கையைப் பாதிக்கக் கூடியதாக அமைந்து விடுமோ என்ற அச்சமும் நிலவவே செய்கின்றது.

2019 இறுதிப் பகுதியில் சீனாவின் வூஹான் நகரில் தோற்றம் பெற்ற இத்தொற்று இற்றை வரையும் பல திரிபுகளைக் கண்டுள்ளது. அவற்றில் சில திரிபுகள் உலகிற்கே பெரும் அச்சுறுத்தலாகவும் பாதிப்பாகவும் அமைந்திருந்தன. அவையும் தாக்கம் இழந்து வரும் சூழலில் தான் இத்திரிபு கண்டறியப்பட்டிருக்கின்றது. அதன் விளைவாக இப்பிறழ்வு தங்கள் தங்கள் நாடுகளுக்குள் வந்து சேர்வதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஒவ்வொரு நாடும் ஈடுபட்டுள்ளது. அந்த வகையில் இலங்கையும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அதற்கு தேவையான அறிவுறுத்தல்களும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே இத்திரிபு இந்நாட்டுக்குள் வந்து சேர்வதற்கு துணை போகாத வகையில் ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். ஏனெனில் ஏற்கனவே இத்தொற்றின் திரிபுகளால் இந்நாடு தனிமைப்படுத்தல் ஊடரங்கு மற்றும் முடக்கங்களை சந்தித்தது. அவ்வறான நிலைமை நாட்டில் மீண்டும் ஏற்பட இடமளிக்கலாகாது. அதனால் இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்தும் வகையில் அடிப்படை சுகாதார வழிகாட்டல்களை ஒவ்வொருவரும் உச்சளவில் கடைபிடித்தொழுக வேண்டும். இவ்விடயத்தில் கவயீனமாகவோ அசிரத்தையுடனோ நடந்து கொள்ளக் கூடாது. அவையே இன்றைய அவசரத் தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# சர்வதேசத்தை மீண்டும் கலக்கமடைய வைத்துள்ள omicron திரிபு வைரஸ்!


டெல்டா வைரஸ் திரிபை விட வீரியம் மிக்க கொரோனா வைரஸ் திரிபு தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்டுள்ளதை அடுத்து உலகளாவிய கொவிட் அச்சுறுத்தல் மீளவும் அதிகரித்துள்ளது. வேகமாக பரவும் தன்மை வாய்ந்த உருமாறிய புதிய வகை கொரோனா தொற்று தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டிருப்பதாக அந்நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் ஜோ பாஹ்லா கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

ஏற்கனவே பி.1.1.529 என வகைப்படுத்தப்பட்ட புதிய வகை உருமாறிய கொரோனா வைரஸ் தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டதாக தேசிய தொற்றுநோய் நிறுவனம் உறுதிப்படுத்திய நிலையில், அமைச்சரின் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இதனால் உலகின் அனைத்து நாடுகளும் தற்போது உஷாரடைந்துள்ளன. உருமாறிய கொரோனா வைரஸ் குறித்து தென்னாபிரிக்க சுகாதாரத் துறை அமைச்சர் ஜோ பாஹ்லா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

"நாட்டில் கொரோனா 4 ஆம் அலை எதிர்வரும் டிசம்பர் அல்லது ஜனவரியில் தாக்கலாம். மக்கள்தொகை நெருக்கம் மிகுந்த மாகாணங்களில் தொற்றுப் பரவல் அதிகரித்தாலும், அது டெல்டா வைரஸின் பிரிவுதான் என்பதால் அதை கட்டுப்படுத்தி விடலாம் என ஆரம்பத்தில் நாங்கள் நம்பிக்கையோடு இருந்தோம். ஆனால் இப்போது



## டெல்டாவை விட வீரியமானதா? இன்றேல் முறியடிக்கப்படக் கூடியதா? மருத்துவ விஞ்ஞானிகள் என்ன கூறுகின்றார்கள்?

உருமாறிய புதிய வகை வைரஸ் பரவுவதை தெளிவாக அடையாளம் கண்டு விட்டோம். நாம் எதிர்கொள்ளும் கண்ணுக்குப் புலனாகாத எதிரியை முன்கூட்டியே கணிப்பது மிகவும் சிரமம்.

ஆகையால் அடுத்த சில நாள்களில் நோய்த்தொற்றுப் பரவலின் வீதம் அதிகரிக்கத் தொடங்கலாம்".

இதேவேளை ஏற்கனவே கடந்த வாரம் லண்டனின் இம்பீரியல் கல்லூரியை சேர்ந்த தீநுண்மியியல் நிபுணர் டாம் பீகாக் என்பவர், உருமாறிய புதிய வகை வைரஸ் குறித்து விளக்கமாக ட்விட்டரில் குறிப்பிட்டிருந்தார். பிரிட்டனில் இந்த வைரஸ் கண்டறியப்படவில்லை என்றாலும், இதன் மீது விஞ்ஞானிகள் ஆலோசனை மேற்கொண்டனர்.

இந்நிலையில், தென்னாபிரிக்காவில் உருமாறிய வைரஸ் கண்டறியப்பட்டதை மேற்கோள்காட்டி, பிரிட்டனுக்கு அவர் ட்விட்டரில் மீண்டும் எச்சரிக்கை விடுத்தார்.

தென்னாபிரிக்காவில் உருமாறிய கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதால்தென்னாபிரிக்கா, ஹொங்கொங், போட்ஸ்வனா ஆகிய நாடுகளில் இருந்து அல்லது அந்த நாடுகளின் வழியாக வரும் பயணிகளை விமான நிலையத்தில் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்துமாறு அனைத்து மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் இந்திய மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுஒருபுறமிருக்க புதிய வகை கொரோனா வைரஸ் திரிபு பேரழிவை ஏற்படுத்தாதென இங்கிலாந்து விஞ்ஞானி பேராசிரியர் காலம் செம்பிள் தெரிவித்துள்ளார். புதிய வகை கொரோனா ஒமிக்ரான் குறித்து உலக நாடுகள் அச்சம் அடைந்துள்ள நிலையில் அவர்

## தென்னாபிரிக்காவிலிருந்து வருவோருக்கு உலகின் பல நாடுகள் கதவடைப்பு!

இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

"இது பேரழிவை ஏற்படுத்தாது. மேலும் எனது சகாக்கள் இந்த வைரஸ் பயங்கரமானது என கூறி இருக்கின்றனர். ஆனால் அவர்கள், நிலைமையை மிகைப்படுத்தி உள்ளதாகவே நான் கருதுகிறேன். இதேவேளை தடுப்பூசியால் கிடைக்கின்ற நோய் எதிர்ப்புச்சக்தி, இன்னும் கடுமையான நோயில் இருந்தும் மக்களை பாதுகாக்கும்" என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உலக நாடுகளை அச்சத்துக்கு உள்ளாக்கியுள்ள ஒமிக்ரான் வைரஸின் புகைப்படத்தை, முதன் முறையாக ரோமிலுள்ள *Bambino Ges* குழந்தைகள் வைத்திய சாலையின் விஞ்ஞானிகளே வெளியிட்டுள்ளனர்.

இவை டெல்டா வகை வைரஸை விட அதிக ஆபத்தானவை என கருத முடியாது எனவும் விஞ்ஞானிகள் சிலர் குறிப்பிடுகின்றனர்.

தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்டுள்ள 'ஒமிக்ரோன்' கொவிட் திரிபு உலக நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள நிலையில் பல்வேறு நாடுகள் பயணத் தடையினை அறிவித்துள்ளன. தென்னாபிரிக்க வகை கொரோனா சர்வதேச நாடுகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தென்னாபிரிக்கா மற்றும் அதன் 5 அண்டை நாடுகளிருந்து வரும் விமானங்களுக்கு பிரிட்டன் தடை விதித்தது.

தென்னாபிரிக்கா மற்றும் அதன் 7 அண்டை நாடுகளிலிருந்து அமெரிக்கர்கள் அல்லாதோர் அமெரிக்கா வருவதற்கு நவ. 29 முதல் அந்நாடு தடை விதித்துள்ளது.

தென்னாபிரிக்கா வழியாக கடந்த 15 நாள்களில் பயணம் செய்த வெளிநாட்டவர்கள் கனடா வருவதற்கு அந்நாடு தடை விதித்துள்ளது. கனடாவை சோ்ந்தவர்கள் அவ்வாறு வந்தால் 14 நாள்கள் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெர்மனியும், வெள்ளிக்கிழமை இரவு முதல் தென்னாபிரிக்காவிலிருந்து பயணிகள் வருவதற்குத் தடை விதிக்கப்படுவதாக அறிவித்தது.

ஐரோப்பிய யூனியன் நாடுகளும் தென்னாபிரிக்காவிலிருந்து தங்கள் நாடுகளுக்கு வருவதற்கு தடை விதிக்க ஒப்புக்கொண்டுள்ளன.

பிரிட்டன் சுகாதாரத் துறை அமைச்சர் சஜித் ஜாவித் கூறுகையில், டெல்டா வகை கொரோனாவை விட தென்னாபிரிக்க வகை கொரோனா அதிக வேகமாக பரவும். மேலும், தற்போது புழக்கத்தில் உள்ள கொரோனா தடுப்பூசிகள் அந்த வகை கொரோனாவை முழுத் திறனுடன் தடுத்து நிறுத்த முடியாது என்பது முதல் கட்ட ஆய்வில் தெரியவந்ததாகத் தெரிவித்தார்.

இதனால் புதிய வகை கொரோனா பரவலைத் தடுத்து நிறுத்துவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். இதேபோன்ற கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவது குறித்து நெதர்லாந்தும் பரிசீலித்து வருகிறது.

புதிய வகை கொரோனா மக்களிடையே பரவி பாதிப்பை ஏற்படுத்தி வரும் நிலையில், அதுதொடர்பான தகவல் உலகெங்கிலும் உள்ள முதலீட்டாளர்களிடையே பரவி பங்குச் சந்தைகளை பாதித்துள்ளது.

புதிய வகை கொரோனா குறித்த அச்சத்தால், ஐரோப்பா மற்றும் ஆசியாவில் முக்கிய பங்குச் சந்தை குறியீடுகள் வீழ்ச்சியடைந்தன.

அமெரிக்காவிலும் அந்த நாட்டுப் பங்குச் சந்தை குறியீடான டோ ஜோன்ஸ் 800 புள்ளிகள் சரிந்தது.

புதிய கொவிட் வைரஸ் திரிபுக்கு 'ஒமிக்ரோன் omicron' என உலக சுகாதார ஸ்தாபனத்தினால் பெயரிடப்பட்டுள்ளது. இந்நிலையில், அந்தப் புதிய வகை கொரோனா கவலைக்குரிய வகையைச் சேர்ந்தது என உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனைக் குழு வெள்ளிக்கிழமை வகைப்படுத்தியது.

கிரேக்க எழுத்து முறைப்படி அதற்கு 'ஒமிக்ரோன்' எனபெயரிட்டது. இந்த வகையானது உலக சுகாதர நிறுவனத்தின் கவலைக்குரிய கொரோனா வகைகளில் முதன்மையானது ஆகும்.

கொரோனா வைரஸ் பல வகைகளில் ஊடுருவி வரும் நிலையில், தற்போது புதிய வகை கொரொனா வைரஸான ஒமிக்ரோன் (omicron) பெரும் பீதியை உலக நாட்டு மக்களிடையே ஏற்படுத்தியிருக்கிறது.

இதனால், பல நாடுகளில் சோதனையை தீவிரப்படுத்த உள்ளன. இதனிடையே புதிய வகை வைரஸ் அச்சுறுத்தல் எதிரொலியாக தென்னாபிரிக்காவில்விளையாட்டு போட்டிகள் வெகுவாக பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது.

# சர்வதேச கப்பல்கள் நங்கூரமிடுவதால் உள்ளூர் மீனவர்களின் வலைகள் சேதம்

திருகோணமலை கடற்பரப்பில் நங்கூரமிடும் சர்வதேச கப்பல்களினால் சிறுமீன்பிடி தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக சம்பந்தப்பட்ட மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். திருகோணமலை கடற்பரப்பில் நங்கூரமிடப்படும் சர்வதேச கப்பல்கள் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் நங்கூரமிடாமல் கடற்பரப்பில் விரும்பியவாறு நங்கூரமிடுவதனால் சிறுமீன்பிடி தொழிலாளிகள் மீன்பிடிக்க முடியாமல் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

## சல்லி பிரதேச மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு





திருகோணமலை சாம்பல்தீவு, சல்லி பிரதேச மீனவர்களே இவ்வாறு பாதிப்படைவதாக தெரிவிக்கின்றனர்

மேலும் தாங்கள் மீன் பிடிப்பதற்காக கடலுக்கு செல்லும் போது நங்கூரமிடப்பட்டிருக்கும் கப்பலை அண்டிய கடற்பரப்பில் மீன்பிடிக்க விடாமல் தாங்கள் விரட்டப்படுவதாகவும், அதையும் மீறி மீன்பிடியில் ஈடுபட்டால் இலங்கை கடற்படைக்கு அறிவித்து அவர்கள் மூலம் மீன் பிடிக்க தடை விதிக்கப்படுவதாகவும் மீனவர்கள் கூறுகின்றனர். மேலும் இவ்வாறு வருகை தரும் சர்வதேச கப்பல்கள் நேரகாலம் இல்லாமல், பயணிப்பதற்கான எல்லை ஒன்று இல்லாமல் தாங்கள் மீன் பிடிக்கும் பிரதேச எல்லையினுடாக பயணிப்பதனால் மீன்பிடி வலைகள் வெட்டப்பட்டு நாசம் அடைவதாக மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இவ்வாறு திருகோணமலைக்கு வரும் சர்வதேச கப்பல்கள் திருகோணமலை கடற்பரப்பில் விரும்பிய இடத்தில் நக்க்கூரமிடுவதனாலும் இவ்வாறு மீன்பிடி வலைகள் நாசம் அடைவதை தவிர்க்க முடியாமல் உள்ளதாக சல்லி பிரதேச மீனவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு வருகை தரும் கப்பல்களில் பல கழிவுப்பொருட்கள் மற்றும் பாதுகாப்பு கம்பிகள் போன்றவை கடலில் வீசப்படுவதனால் மீனவர்களின் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் நாசம் அடைகின்றன. இவ்வாறு சல்லி கடற்பரப்பில் தமது வலைகளில் சிக்குண்ட பாதுகாப்பு வேலி கம்பிகளை பலமணி நேர போராட்டத்திற்கு பின்னர் தாம் கரைக்கு இழுத்து வருவதாகவும், சில சந்தர்ப்பங்களில் தாம் மீன் பிடிக்க பயன்படுத்தும் வலையை கடலிலேயே விட்டுச் செல்வதாகவும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் நங்கூரமிடுவதற்கு பல கடற்பரப்புக்கள் இருந்த போதிலும், இவ்வாறு சிறுமீன்பிடித் தொழிலாளர்கள் மீன்பிடிக்கின்ற கடற்பரப்பில் இவ்வாறு கப்பல்கள் நங்கூரமிட்டு தமது வாழ்வாதாரத்தினை அழிப்பது மனவேதனை தருவதாக சல்லி, சாம்பல்தீவு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் திருகோணமலை கடற்பரப்பில் பழைய போக்குவரத்து வாகனங்கள் மீன்களின் இனப்பெருக்கத்திற்காக கடலில் போடப்பட்டன. அவ்வாறு போடப்பட்ட வாகனங்களினால் நீரோட்ட காலப்பகுதியில் மீனவர்கள் அசௌகரியங்களுக்குள்ளாகியிருந்தனர். அவ்வாறான சிரமங்களுக்கு மத்தியில் தங்களது தொழிலை முன்னெடுத்து வருகின்ற நிலையில், தற்போது சர்வதேச கப்பல்கள் நங்கூரமிடுவதனால் தாங்கள் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்குவதாக சல்லி, சாம்பல்தீவு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் தாங்கள் மீனவ சங்கங்கள் ஊடாக உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதிலும் எவரும் அக்கறை கொள்ளவில்லையென அவர்கள் கூறுகின்றனர்.

இப்பிரச்சினைக்கு அரசியல்வாதிகள் மற்றும் உரிய அதிகாரிகள் தீர்வினை பெற்றுத் தருமாறு மீனவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



அப்துல் சலாம் யாசீம்
(ரொட்டவெவ குரூப் நிருபர்

# நாட்டுக்காக அயராது உழைக்கும் தனது புதல்வர்கள்,புதல்வியர், பேரன்மார் உருவில் டீ.ஏ.ராஜபக்ஷ எம்மத்தியில் வாழ்கின்றார்

## அமரர் டீ.ஏ.ராஜபக்ஷ நினைவுப் பேருரையில் சிரேஷ்ட விரிவுரையாளர் மகேந்திர குணவர்தன

நாட்டின் எதிர்காலத்திற்காகவும் மக்களுக்காகவும் அயராது உழைக்கும் அவரது புதல்வர்கள், புதல்வியர்கள் மற்றும் பேரக்குழந்தைகளின் உருவில் டீ.ஏ.ராஜபக்ஷ அவர்கள் எம்மத்தியில் வாழ்கின்றார் என களனிப் பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிரியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் மகேந்திர குணவர்தன அவர்கள் தெரிவித்தார்.

அலரி மாளிகையில் கடந்த 25 ஆம் திகதி பிற்பகல் 'நமது கண்களுக்கு புலப்படாத நுண்ணுயிர்களின் வாழ்க்கை' எனும் தலைப்பில் களனி பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிரியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் மகேந்திர குணவர்தன அவர்கள் டீ.ஏ.ராஜபக்ஷ நினைவுரை 2021 ஆற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

சியாமோபாலி வங்ஷிக மஹா நிகாயவின் மல்வத்து விகாரை பீடத்தின் அனுநாயக்கர் கலாநிதி நியங்கொட தர்மகீர்த்தி ஸ்ரீசங்கரக்கித விஜிதசிறி தேரர் தலைமையிலான மஹா சங்கத்தினர் உள்ளிட்ட பிற மதத் தலைவர்கள் நினைவுரையை செவிமடுப்பதற்காக கலந்து கொண்டிருந்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் பாரியார் திருமதி அயோமா ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி விக்ரமசிங்க ராஜபக்ஷ, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, தினேஷ் குணவர்தன, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா, ரோஹித அபேகுணவர்தன, மஹிந்த அமரவீர, டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர்களான ரொஷான் குணதிலக, விலீ கமகே, ராஜா கொள்ளுரே, மொஹமட் முஸம்மில் மற்றும் தூதுவர்கள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டனர்.

முதலில் டீ.ஏ.ராஜபக்ஷ அவர்கள் மற்றும் அவரது பாரியார் மற்றும் நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த இராணுவத்தினரை நினைவுகூர்ந்து ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து டீ.ஏ.ராஜபக்ஷ அவர்களின் உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன டீ.ஏ. ராஜபக்ஷ அவர்களின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்ததுடன், முன்னாள் வலய கல்விப் பணிப்பாளர் ஏ.வீரரத்னவும் மலரஞ்சலி செலுத்தினார்.

இதன் போது பெலிஅத்த புவக்தண்டாவ தம்மபால மகளிர் கல்லூரியின் மாணவிகள் டீ.ஏ.ராஜபக்ஷ நினைவு கீதம் இசைத்தனர்.

டி.ஏ.ராஜபக்ஷ நினைவு கல்வி, கலாசார மற்றும் சமூக சேவைகள் அறக்கட்டளையின் தலைவர் அமைச்சர் சமல் ராஜபக்ஷ சிரேஷ்ட விரிவுரையாளர் மகேந்திர குணவர்தன அவர்களுக்கு நினைவு விரிவுரை பதக்கம் அணிவிக்கப்பட்டு நினைவுரை நிகழ்த்துவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

'நமது கண்களுக்கு புலப்படாத நுண்ணுயிர்களின் வாழ்க்கை' எனும் தலைப்பில் களனி பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிரியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் மகேந்திர குணவர்தன அவர்கள் டீ.ஏ.ராஜபக்ஷ நினைவுரை 2021 ஆற்றுகையில் தெரிவித்ததாவது:

சமூக – பொருளாதார காரணிகளை பொறுத்தே ஒரு தேசத்தின் விதி அமையுமே தவிர, தனிப்பட்ட நபர்களின் செயற்பாட்டின் மூலம் அல்ல என அடிக்கடி கூறப்படும். அது எவ்வாறாயினும் தேசத்தின் தலைவிதியில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திய தனிப்பட்ட செயல்களை வரலாற்றில் நாம் பார்த்திருக்கிறோம். விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எதிராக போர் புரிவதற்காக மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் எடுத்த வரலாற்று தீர்மானம் அதற்கு சிறந்த மற்றும் அனைவரும் அறிந்த உதாரணமாகும்.

நாம் தலைப்பிற்குள் செல்வோமாயின், தாவர ஊட்டச்சத்துக்கும் நுண்ணுயிரிகளுக்கும் இடையே வலுவான நேரடி தொடர்பு காணப்படுவதால், தாவர ஊட்டச்சத்தில் நுண்ணுயிரிகளின் பங்கு பற்றியே இன்று நான் அதிகம் பேச விரும்புகிறேன். இன்று நமது கவனம் பக்டீரியா மற்றும் பூஞ்சைகள் மீது உள்ளது. தாவரங்கள், விலங்குகள் மற்றும் பிற அனைத்து உயிரினங்களும் மரணத்தின் பின்னர் முலப் பொருட்களாக உக்கிப்போகும்.

பக்டீரியாக்கள் என்பது ஒரு மில்லி லீட்டரில் பத்தில் ஒரு பங்கு அளவை கொண்ட நுண்ணுயிராகும். ஒவ்வொரு கிராம் மண்ணிலும் பில்லியன் கணக்கான பக்டீரியாக்கள் வாழ்கின்றன. பூமியில் தோன்றிய முதல் உயிரினம் பக்டீரியாவாகும். அன்றிலிருந்து கடந்த மூன்றரை பில்லியன் ஆண்டுகளாக மாறிவரும் அனைத்து சுற்றுச்சூழல் நிலைமைகளுக்கும் இணங்கி பக்டீரியாக்கள் பாதுகாப்பாக காணப்படுகின்றன.

தாவரங்களுக்கு மிகவும் அத்தியாவசியமான ஊட்டச்சத்துக்கள் நைட்ரஜன், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் ஆகும். அதற்கு மேலதிகமாக கல்சியம், மெக்னீசியம் மற்றும் சல்பர் ஆகியன கனிசமான அளவு தேவைப்படுகிறது.

இந்த தாவர ஊட்டச்சத்துக்கள் ஒவ்வொன்றும் ஒரு கனிம ஊட்டச்சத்து என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். பெரும்பாலான சேதனப் பொருட்களில் இந்த அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் காணப்படுவதால் விவசாயத்தில் சேதனப் பசளையின் பயன்பாடு வெற்றியளித்துள்ளது.

சேதனப் பசளையின் ஊடாக தாவரங்களுக்கு ஊட்டச்சத்து கிடைக்கின்றதா இல்லையா என்பது தொடர்பில் தொடர்ந்து விவாதங்கள் எழுந்து வருகின்றன. பல நூற்றாண்டுகளாக சேதனப் பசளையே விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்டன. எமது வீட்டுத் தோட்டத்தில் நாட்டிய மிளகாய்ச் செடிக்கு சாணி உரம் அல்லது மக்கிப்போகும் குப்பைகளின் ஊடாக போதிய ஊட்டச்சத்து கிடைத்தது என்பதை நாம் அறிந்திருக்கவில்லையா?

இருப்பினும், போதுமான சேதனப் பொருட்கள் அற்றுப் போனமை தீவிர பிரச்சனையாகும். நைட்ரஜன், பொஸ்பரஸ் மற்றும் கந்தகம் போன்ற குறிப்பிடத்தக்க அளவு ஊட்டச்சத்துக்கள் அனைத்து இறைச்சி மற்றும் மீன் பதப்படுத்தும் ஆலைகளின் கழிவுநீரில் உள்ளன. கடற்பாசி சிறந்த நைட்ரஜன் மூலமாகும். சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நனோ நைட்ரஜன் மற்றும் ஹைட்ராக்ஸி அபடைட்யூரியாவின் பயன்பாடு, இலங்கை விஞ்ஞானிகளின் குழுவினால் உருவாக்கப்பட்டது. இந்த நவீன முறையின் ஊடாக சேதனப் பசளை பற்றாக்குறையை தீர்க்க முடியும்.

சேதனப் பசளை என்ற சொல்லுக்கு பொதுவான அர்த்தம் மக்கிப்போகும் தாவர மற்றும் விலங்கு பாகங்கள் என்பதால், யூரியா சேதனப் பசளையாக அறியப்படவில்லை என்றாலும், சமூகம் நம்பும் இந்த கருத்துக்கு எதிராக சென்று யூரியா என்பது முற்றிலும் சேதனப் பொருள் என கூறுவது முக்கியமானதாகும் என்று நினைக்கிறேன்.

டீ.ஏ.ராஜபக்ஷ அவர்கள் எங்களில் பெரும்பாலானோர் குழந்தைகளாக இருந்தபோது காலமானார். ஆனால் அவர் உண்மையில் இவ்வுலகை விட்டுச் சென்றாரா என்ற கேள்வி எழுகிறது.

எனது புரிதலுக்கமைய, அவர் இந்த நாட்டு மக்களின் எதிர்காலத்திற்காகவும், புதிய தலைமுறையின் எதிர்காலத்திற்காகவும் அயராது உழைக்கும் தனது புதல்வர்கள், புதல்வியர்கள் மற்றும் பேரக்குழந்தைகளின் உருவில் நம்மிடையே வாழ்கின்றார்".

இவ்வாறு சிரேஷ்ட விரிவுரையாளர் மகேந்திர குணவர்தன தெரிவித்தார்.

கலாநிதி நியங்கொட தர்மகீர்த்தி ஸ்ரீ சங்கரக்கித விஜிதசிறி தேரர்:

டீ.ஏ.ராஜபக்ஷ ஏற்றிய ஒளி இன்று பரவி வருவதை காணக் கூடியதாக உள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மூன்று தசாப்த கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தமை இந்த நாட்டில் புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. ஒரு புதிய வளர்ச்சிப் பாதை தொடங்கியது. உலகமே இலங்கை பற்றி பேச ஆரம்பித்தது. டீ.ஏ.ராஜபக்ஷவுக்கு இது தெரியாவிட்டாலும், அப்போது எடுக்கப்பட்ட சரியான முடிவுகளால் இந்த நாட்டை காப்பாற்ற முடிந்தது என்று நாங்கள் நம்புகிறோம். கடந்த கால நடப்புகளை நாம் சரியாக கற்க வேண்டும். இந்நாட்டை ஆண்ட மன்னர்கள் நாட்டின் படையெடுப்புகளை அடக்கினாலும், தமிழ் மக்கள் எமக்கு எதிரிகளாகக் கருதப் படவில்லை. கொரோனா தொற்று நோய் நிலைக்கு மத்தியில் நாம் ஒரு பேரழிவு காலத்தை கடந்து வருகிறோம். கொரோனா தொற்றுநோயால் எங்களால் பல விடயங்களைச் சாதிக்க முடியாது போனது.

சமூகவியல் கோட்பாடாக இருந்தாலும் சரி, அரசியல் ஆய்வுக் கோட்பாடாக இருந்தாலும் சரி அல்லது பொது அறிவால் நோக்கினாலும் சரி, இந்த வளர்ச்சிப் போக்கு தொடர்ந்தால், நம் நாட்டிற்கு சுபிட்சம் ஏற்படும் என்பது எமது நம்பிக்கை.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க:

"கிழக்கு கிருவாபத்துவ மக்களின் தண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக சந்திரிகா ஏரியை நிர்மாணித்த எமது டீ.ஏ.ராஜபக்ஷ அவர்களின் 54ஆவது நினைவு தினமே இன்று. 1935 இல் அவரது சகோதரர் டொன் மேத்யூ ராஜபக்ஷ பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது மறைவிற்கு பின்னர், டீ.ஏ.ராஜபக்ஷ அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார். ருஹுணுவின் மக்களின் வலுவான விருப்பத்தின் பேரிலேயே அவர் பாராளுமன்றம் தெரிவானார். டீ.ஏ. ராஜபக்ஷ அவர்களை கடந்த காலத்திலிருந்து நிகழ்காலம் மற்றும் நிகழ்காலத்திலிருந்து எதிர்காலம் வரை ஒரு வளமான சக்தியாக விவரிக்க முடியும். ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோர் இந்த நாட்டை சுதந்திரமான மற்றும் அபிவிருத்தியடைந்த நாடாக உயர்த்துவதற்கான அவரது தொலைநோக்குப் பார்வையை பின்பற்றுகின்றனர்".

குறித்த நிகழ்வில் பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமரின் மேலதிக செயலாளர் ஹர்ஷ விஜேவர்தன, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சட்டத்தரணி சுமித் விஜேசிங்க, இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் சட்டத்தரணி கிங்ஸ்லி ரணவக, தலைநகர் டீ.ஏ.ராஜபக்ஷ நினைவு குழுவின் தலைவர் ஜீ.எல்.டபிள்யூ.சமரசிங்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.















# தனது சமூகத்துக்காகவே வாழ்நாளை அர்ப்பணித்தவர் அஷ்ஷெய்க் ஏ.எல் இமாம் (பலாஹி)

நிந்தவூரில் மூத்த ஆலிம்களுள் ஒருவரான அஷ்ஷைக் ஏ. எல். இமாம் (பலாஹி) அவர்களின் மறைவு மக்களையும் உலமாச் சமூகத்தினையும் ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தியுள்ளது. சிறந்த மார்க்க அறிஞரும், நிந்தவூர் ஜம்இய்யத்துல் உலமா, நிந்தவூர் பெரிய ஜும்ஆப் பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபை, நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் தலைவருமான அவர் நிந்தவூர் முன்னால் காழியாராக கடமையாற்றியுள்ளார்.

தற்போதைய நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணியின் பிரதித் தலைவரான இவர் நிந்தவூரின் அனைத்து துறைகளிலும் சிறப்பான முறையில் தனது பணிகளை ஆற்றியிருக்கின்றார். அவர் கடந்த 14.11.2021 ஆம் திகதியன்று காலமானார்.

அவர் அல்பஷாயிர் என்ற சமூக சேவை அமைப்பு ஒன்றை நிறுவி அதனூடாக நிந்தவூர் மக்களுக்கு மாத்திரமல்ல ஏனைய வெளியூரினைச் சேர்ந்த மக்களுக்கும் பல சமூகப் பணிகளை மேற்கொண்டிருந்தார். அன்னார் காத்தான்குடி ஜாமியதுல் பலாஹ் அரபுக் கல்லூரியில் அல்ஆலிம் பட்டம் பெற்று வெளியேறியதோடு, இலங்கையில் ஷெய்ஹல் என்று அழைக்கப்படும் காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அரபுக்கலாசாலையின் அதிபராக கடமையாற்றிய சங்கைக்குரிய மர்ஹூம் அப்துல்லாஹ் ஹஸ்றத் அவர்களின் பாசறையில் வளர்ந்தவராவார்.

அவர் நிந்தவூர் ஜும்ஆப் பள்ளிவாயலில் இயங்கி வந்த தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் விரிவுரையாளராகவிருந்து பல மாணவர்களின் வாழ்வில் ஆன்மீக ஒளி ஏற்றியவர்.

அத்தோடு இறுதிக் காலங்களில் நிந்தவூர் ஜம்இய்யதுல் உலமா சபையின் தஃவாக் குழு தலைவராக செயற்பட்டு பல வினைத்திறன் மிக்க செயற்பாடுகளையும் ஆண்மீக ரீதியான பல கருத்தரங்குகளையும் முன்னெடுத்துச் சென்றார்.

ஆற்றல்மிகு கல்விஞானமும், ஆழமான புரிந்துணர்வு, இஸ்லாமியக் கற்கை துறைகளில் துறை சார்ந்த அறிவும் கொண்ட அவர், தனது வாழ்நாள் முழுவதையும் மார்க்க பணிக்காகவும், சமூகப்பணிக்காகவும் அர்ப்பணித்ததோடு, நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரியில் 2012 ஆம் ஆண்டு தனது தலைமையில் ஒரு பட்டமளிப்பு விழாவினையும் திறன்பட செய்து காட்டினார்.

கொரோனா தொற்று காரணமாக முழு நாடும் முடக்கப்பட்டிருந்த நிலையில் தனது அயராத முயற்சியால் அல் பஷாயிறுல் இஸ்லாமி என்ற அமைப்பினால், கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனது அமைப்பில் உள்ளவர்களோடு வீடு வீடாகச் சென்று பகல் போசனம் வழங்கினார். தனக்காக எந்த சொத்து செல்வத்தினையும் சேர்த்து வைக்காமல் தனது சமூகத்திற்காகவே தனது வாழ்நாளை அர்ப்பணித்த அவரை சமூகம் இழந்திருப்பது எவராலும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.



இவ்வேளையில் அன்னாருடைய குடும்பத்தினர்கள், உறவினர்கள், மாணவர்கள், நிந்தவூர் மக்கள் என அன்னாருடன் தொடர்புபட்ட அனைவருக்கும் நிந்தவூர் உலமாக்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் ஏ.பி.எம். சிம்லி (நஹ்ழி),
நிந்தவூர் பிர்தௌஸ் ஜும்ஆ பள்ளிவாயல் பேஷ் இமாம்,
அதிபர், மஃஹதுல் ஹக் அல்குர்ஆன் மனனக் கலாபீடம், நிந்தவூர்

# பத்து ரூபாவினால் பாண் விலை அதிகரிப்பு

450 கிராம் பாண் ஒன்றின் விலை 10 ரூபாவினால் அதிகரிக்கப்படுவதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. கோதுமை மா உள்ளிட்ட பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதையடுத்து நேற்று நள்ளிரவு முதல் பாண் விலை அதிகரிக்கப்படுவதாகவும் அப்பம் ஒன்றின் விலையை அதிகரிக்கவும் தீர்மானித்ததாக சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார். கோதுமை மா மாத்திரமன்றி கேஸ் , மாஜரின் உட்பட மூலப்பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன.கோதுமை மாவின் விலை அதிகரிப்பு காரணமாக இன்று முதல் கொத்துரொட்டியின் விலை 10 ரூபாவினாலும் சிற்றுண்டியின் விலை 05 ரூபாவினாலும் அதிகரிக்கப்படும் எனவும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத் தலைவர் குறிப்பிட்டார். சிற்றுண்டிகளின் விலைகளை 05 அல்லது 10 ரூபாவினால் தேவைக்கு ஏற்ப உயர்த்த இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளது.

## வீதி விபத்துகள், சமூக... (03 ஆம் பக்கத் தொடர்)

தவறும் கிடையாது.

எனவே வீதி விபத்துக்களையும் சமூக விரோதச் செயற்பாடுகளையும் களைவதற்கு எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் சிறப்பு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதுதொடர்பான மேலதிக அனுமதிகள் எவையும் கொழும்பிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமாயின், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்று தெரிவித்தார்.

அத்துடன், கொறோனா பரவல், தொடர்ச்சியான மழை மற்றும் வெள்ள நிலைவரம், அனர்த்த முகாமைத்துவம், விவசாயம் மற்றும் நீர்வேளாண்மைக்கு பொருத்தமான காணிகளில் வேளாண்மைகளை மேற்கொள்ளுதல், உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

இக்கூட்டத்தில், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மாவட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர், மாவட்டத்திற்கு பொறுப்பான இராணுவ ஆதிகாரி, பிரதேச செயலாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

## இந்தியா-இலங்கை... (03 ஆம் பக்கத் தொடர்)

அமைகின்றன. இந்திய கடற்படைக்கு சொந்தமான ஐ.என்.எஸ். சுபத்ரா ரோந்துக் கப்பல் மற்றும் P8I நீண்ட தூர கடல் ரோந்து விமானம், அதேபோல இலங்கை கடற்படைக்குச் சொந்தமான எஸ்.எல்.என்.எஸ். சமுதுர ஆகியவை இப் பயிற்சிகளில் இணைந்திருக்கும் நிலையில் மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படைக்குச் சொந்தமான MNDF கடல்மார்க்க வேவு விமானமும் இவற்றுடன் இணைந்துள்ளன. இந்த இருநாள் பயிற்சிகள், அந்தந்த பிரத்தியேக பொருளாதார வலயங்களில் (EEZ) போதைப் பொருள் கடத்தல் தடுப்பு, தேடுதல் நடவடிக்கைகள் மற்றும் கடலில் மீட்பு நடவடிக்கைகள், வான் மார்க்கமான மீட்புப் பணிகள் மற்றும் வினைத்திறன் மிக்க தொடர்பை ஸ்தாபித்தல் ஆகிய விடயங்களில் கள ரீதியான ஈடுபாட்டினைப்பெற்றுக்கொள்வதற்குவழிவகுத்துள்ளது.

கொழும்பு பாதுகாப்பு கூட்டுக் குழுமமானது கடந்த வருடம் நவம்பர் மாதம் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மட்டத்திலான நான்காவது முத்தரப்பு மாநாட்டில் நிறுவப்பட்டதுடன் அதற்கான செயலகம் 2021 மார்ச் கொழும்பில் நிறுவப்பட்டது.

2021 ஆகஸ்ட்டில் நடைபெற்ற கொழும்பு பாதுகாப்பு கூட்டுக் குழுமத்தின் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மட்ட மாநாடு பிராந்தியத்தில் பொதுவான பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ளுதல் தொடர்பான புரிதல் மற்றும் சிறந்த இயங்குதிறனை அடைவதற்கான சிறந்த வாய்ப்புக்களை வழங்கியது.

## மழையுடனான...

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் பொறியியலாளர் எஸ். பி. சி. சுகீஸ்வர தெரிவித்துள்ளார்.

அதேபோன்று ஆறுகளினதும் நீர் மட்டங்கள் அதிகரித்து வரும் நிலையில் சில மாவட்டங்களில் வாழும் மக்கள் பாதுகாப்பாகவும் அவதானத்துடனும் செயற்படுமாறும் நீர்ப்பாசனத் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

கடும் மழை காரணமாக சில பிரதேசங்களில் வீடுகளின் மேல் மண்சரிவுகள் ஏற்பட்டு வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் கொழும்பு, களுத்துறை, கண்டி,கேகாலை, குருணாகல், இரத்தினபுரி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.(ஸ)

## சிகிச்சை பெற்று வந்த...

பாடசாலை மாணவர்கள் உள்ளடங்களாக 6பேர் உயிரிழந்த நிலையில் 18பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் 12 பேர் வீடு திரும்பினர்.

மேலதிக சிகிச்சைக்காக ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலையிலும் மேலுமொரு சிறுமி திருகோணமலை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த நிலையில் முஹம்மது றபீஸ் பாத்திமா நிபா (06வயது) என்ற சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்

இவ்வாறு உயிரிழந்த சிறுமியின் உடல் திருகோணமலை தள வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் நேற்றைய தினம் பெற்றோர்களிடம் கையளிக்கவுள்ளதாக வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்

மேலும் உயிரிழந்த சிறுமியின் தாயாரும் விபத்துக்குள்ளான இழுவை படகில் பயணித்ததாகவும் அவர் கிண்ணியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பியவர் என்பதுடன் இவ் படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 07 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கார் கவிழ்ந்து...

நேற்று முன்தினம் (27) இரவு இலுக்மோதர பகுதியில் காரொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து மகாவலி கங்கைக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது.இதன்போது காரிலிருந்த மூவரில் மீட்கப்பட்ட இருவர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காணாமல் போன நபரை தேடும் பணி நேற்றும் முன்னெடுக்கப்பட்டது. அவரின் சடலம் பிற்பகல் கண்டுபிடிக்கப்பட்டது.

## நீண்டகால பிரச்சினைகளுக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

பிரச்சினைகளுக்கும் மேற்படி சந்திப்புகள் சிறந்த தீர்வை பெற்றுக் கொடுக்கும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்:

இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் அண்மையில் தமிழகத்திற்கு விஜயம்

செய்து அங்கு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தமிழக ஆளுநர் ரவி ஆகியோருடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

அதன்போது இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து இந்தியாவில் அகதிகளாக வாழும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவர்களது மீள் குடியேற்றம் மற்றும் நாடளாவிய ரீதியில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் ஆகியோரின் பிரச்சினைகள் தொடர்பிலும் தமிழக முதலைமைச்சரிடம் கலந்துரையாடியுள்ளார். அந்த சந்திப்பு ஒரு சாதகமான சந்திப்பாக அமைந்துள்ளதைக் குறிப்பிட வேண்டும். அத்துடன் அவர் இலங்கை இந்திய மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அங்குள்ள மீனவ சமூகத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அந்த பேச்சுவார்த்தையானது மீனவர் பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வு பெற்றுக் கொடுக்கும் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது. அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்திற்கு அமைய மாகாண சபை தேர்தல் நடத்தப்படுவது மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பிலும் அங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

இரு நாடுகளினதும் இருதரப்பு கலாசார மற்றும் வரலாற்று ரீதியான உறவுகளை வலுப்படுத்துதல் மற்றும் இந்திய அரசாங்கத்தின் பங்களிப்புடன் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையும் இந்த சந்திப்பின் மூலம் உருவாகியுள்ளது என்றும் இராதாகிருஷ்ணன் எம்.பி மேலும் தெரிவித்தார்.

## கனமழை காரணமாக...

நிலையங்களுக்கு எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு அதிக டொலர்கள் செலவாகும் என்பதால், டொலர் நெருக்கடி மேலும் அதிகரித்திருக்கும் எனவும் அமைச்சு தெரிவித்தது.கடந்த சில வாரங்களாக நாட்டின் பல பகுதிகளிலும் கடும் மழை பெய்து வருவதோடு இன்றும் சில தினங்கள் இந்த நிலை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (பா)

## ஓமிக்ரான் புதிய 'கொவிட்19'...

எமது நாட்டுக்கு வரக்கூடிய அபாயம் காணப்படுவதாகவும், இந்த மரபணு பரிசோதனைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பிசிஆர் சோதனையின் மூலம் புதிய வைரஸ் பிறழ்வை கண்டறிய முடியமென்றும், ஒமிக்ரான் கோவிட்19 பிறழ்வின் "எஸ்" மரபணுவை அண்டிய சுமார் 30 பிறழ்வுகள் இருப்பதாகவும் அவர் கூறினார். இதன் காரணமாக மக்கள் உரிய சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றி அவதானமாக இருக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெளிநாட்டு ஊடக அறிக்கைகளின்படி, இந்த புதிய கோவிட்19 வகை பல பிறழ்வுகளை கொண்டதெனவும் மீண்டும், மீண்டும் தொற்றக் கூடிதென்றும் விஞ்ஞானிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பிரிட்டன், ஜெர்மனி, இத்தாலி, இஸ்ரேல் மற்றும் பெல்ஜியம், செக் குடியரசு, போட்ஸ்வானா மற்றும் ஹாங்காங் ஆகிய நாடுகளில் புதிய விகாரங்கள் பதிவாகியுள்ளன. தாம் இதுவரை சந்தித்த மிகவும் பயங்கரமான பிறழ்வு இது என்றும் விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

## கடந்த 14 நாட்களுக்குள்...

பதிவின்படி அவ்வாறான எந்த நாடுகளிலிருந்தும் சுற்றுலா பயணிகள் வருகை தந்ததற்கான பதிவுகள் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை சுற்றுலாப்பயணிகள் தவிர்ந்த வேறு நபர்கள் இக்காலங்களில் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்களா? என்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ள அமைச்சு, அது தொடர்பான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

ஓம்க்ரோன் புதிய திரிபு கொரோனா வைரஸ் எச்சரிக்கை நிலை காரணமாக மேற்படி நாடுகளில் இருந்து கடந்த 14 நாட்களுக்குள் பயணித்துள்ள விமான பயணிகளுக்கு நாட்டுக்குள் வருவதற்கு நேற்றிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் சுற்றுலாத்துறை அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.(ஸ)

## நாவலர் கலாசார மண்டப

செயற்படுத்தும் வகையில் சுமுகமான முறையிலே சந்திப்பு யாழ். மாநகர சபையில் நடைபெற்றது.

இந்த சந்திப்பு நிகழ்வில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன், நாவலர் கலாசார மண்டபம் இந்து சமய, கலாசார அலுவல்கள் தினைக்கத்திற்குச் சொந்தமானது என்பதற்கான ஆவணங்களை யாழ். மாநகர சபை முதல்வர் வி. மணிவண்ணனிடம் கையளித்தார். பிரதமரின் இணைப்புச் செயலாளர் கீதநாத் காசிலிங்கம், பிரதமரின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர் சிவஸ்ரீ இராமச்சந்திரக்குருக்கள் பாபு சர்மா, யாழ்.மாநகர சபை ஆணையாளர் ஜெயசீலன். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர், விடைக்கொடிச் செல்வர் திரு. சின்னத்துரை தனபாலா ஆகியோரும் கலந்த கொண்டனர்.. நாவலரின் பணிகளை நாவலர் கலாசார மண்டபத்தில் இருதரப்பினரும் இணைந்து முன்னெடுப்பது தொடர்பாக விசேட கலந்துரையாடலும் நடைபெற்றது.

## தென்கிழக்காசிய நாடுகள் மிகுந்த...

கொரோனா பாதிப்பைக் கண்டறிதல், பொதுச் சுகாதாரத்தை பலப்படுத்துதல் மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வது, கொரோனா தடுப்பூசி செலுத்துவதை தீவிரப்படுத்துவது உள்ளிட்ட பணிகளை விரைவுபடுத்துமாறு உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

விழாக்கள், கொண்டாட்டங்கள் அனைத்தும், கொரோனா பரவல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுடன் நடத்தப்படவேண்டும், அதிகமானோர் ஓரிடத்தில் கூடுவது, பெரிய அளவில் கூட்டங்கள் நடத்துவதை நிச்சயம் தவிர்க்க வேண்டுமென்றும் உலக சுகாதார அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

நாம் எந்த நிலையிலும் நமது பாதுகாப்பை தகர்க்க விடக்கூடாதென்று உலக சுகாதார நிறுவனத்தின் தென் – கிழக்காசிய மண்டல பணிப்பாளர் டாக்டர் பூணம் கேத்ராபால் சிங் தெரிவித்துள்ளார்.

புதிய வகை வைரஸ் என்றாலும், அதிலிருந்து மக்கள் தங்களை தற்காத்துக் கொள்ளும் வழிமுறை பழையதுதான். முகக்கவசம் அணியுங்கள், சமூக இடைவெளியைக் கடைப்பிடியுங்கள், கூட்டமான இடங்களைத் தவிர்த்துவிடுங்கள், கைகளை சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள், கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளுங்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

## நாம் பலஸ்தீன நாட்டு... (03 ஆம் பக்கத் தொடர்)

நாம் பலஸ்தீனுக்கு யுனெஸ்கோவில் அங்கத்துவம் கிடைக்க இலங்கை ஆதரவாக வாக்களித்தது. இலங்கை பலஸ்தீன நட்புறவு சங்க தலைவராக பிரதமர் நீண்டகாலம் பணியாற்றினார். நாம் பலஸ்தீன மக்களுடன் இருக்கிறோம்.இந்தப்பிரச்சினையை மேலும் நீடிக்காது தீர்வு காண உலகத் தலைவர்கள் முன்வர வேண்டும் என்றார்.

**பிரேரணையை முன்வைத்த சுரேன் ராகவன் எம்.பி (பொ.ஜ.பெ)**

பலஸ்தீன ஒருமைப்பாட்டு தினத்தையொட்டி இந்த ஒத்திவைப்பு பிரேரணையை முன்வைக்கிறேன்.அது சுயாதீனமான நாடு. இறைமையுள்ள பலஸ்தீன நாடொன்றை உருவாக்க இலங்கை ஒத்துழைத்து வருகிறது என்றார்.

**இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பி (ஐ.ம.ச) உரையாற்றுகையில்**

மனித குல நோக்கில் எமது வெளிநாட்டு கொள்கை இருக்க வேண்டும்.தென் ஆபிரிக்கவின் தைரியத்தால் அந்தநாடு மீண்டது.சிறிய நாடாக இருந்தாலும் எமக்கு அடக்கப்படும் நாடுகள் தொடர்பில் குரல் கொடுக்கும் பொறுப்புள்ளது.

அநீதிகளை கண்டும் காணமல் இருக்க முடியாது. 7 தசாப்தங்களாக உரிமைக்காக பலஸ்தீனமக்கள் போராடுகின்றனர்.

நாமும் தைரியமாக எமது பொறுப்பை முன்வைக்க வேண்டும். பலஸ்தீன மக்களின் நியாயத்திற்காக குரல் கொடுக்கையில் பலம் வாய்ந்த நாடுகளின் அழுத்தம் வரும் என்றார்.

**முஜீபுர் ரஹ்மான் எம்.பி (ஐ.ம.ச) குறிப்பிடுகையில்**

பலஸ்தீன் மக்கள் தமது சொந்த நாட்டில் அகதிகளாக உள்ளனர். திறந்த சிறைக்கூடங்களாக அந்த நாடு மாறியுள்ளது. பொருளாதாரத் தடை, இராணுவ நடவடிக்கைகளால் அந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். உலக வல்லரசுகளின் ஒத்துழைப்புடன் பலஸ்தீன மக்களை விரட்டும் சவாலை அவர்கள் எதிர்கொண்டுள்ளனர்.இஸ்ரேன் மேற்கொள்ளும் மனிதகுலத்திற்கு எதிராக முன்னெடுப்புகளை முழுநாடும் எதிர்க்க வேண்டும். அவர்களுக்காக எமது நாடும் குரல் கொடுக்க வேண்டும் என்றார்.

**எம்.முஷாரப் எம்.பி (ம.கா) பேசுகையில்**

ஒரு தேசம் இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒரு பகுதி நாடாக அங்கீகரிக்கப்பட்டு மறு பகுதி ஏற்றுக் கொள்ளப்படவில்லை. முஸ்லிங்கள் வாழும் பகுதிகளில் தொடர்ந்து வன்முறைகள் தூண்டப்பட்டு வருகிறது. பலஸ்தீன் பற்றி எரிவதை மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. வல்லாதிக்க நாடுகள் இரண்டாகப் பிரிந்து ஒருபகுதி இஸ்ரேலை பாதுகாக்கின்றன.பிரதமர் பலஸ்தீனுக்காக குரல் கொடுத்து வருகிறார் என்று தெரிவித்தார்.

**இஷாக் ரஹ்மான் எம்.பி(ஐ.ம.ச) கருத்துத் தெரிவிக்கையில்**

ஜனாதிபதியாக இருந்த போது மஹிந்த ராஜபக்ஷ,பலஸ்தீனத்திற்கு பாரிய ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கினார். உலகில் முக்கியமான மூன்றாவது பள்ளிவாசலில் வழிபட இடமளிக்காது இஸ்ரேல் தாக்குதல் நடத்துகிறது. அப்பாவி பலஸ்தீன மக்களின் உரிமையை வழங்க வேண்டும். கட்சி ,இன மத பேதமின்றி பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்றார்.

**எச்.எம்.எம்.ஹரீஸ் எம்.பி (பொ.ஜ.பெ) பேசுகையில்**

பலஸ்தீன் தனிநாடாக இஸ்லாமிய ஆட்சியில் இருந்தது. உலக மகா யுத்தத்தின் பின்னர் மேற்குலக நாடுகள் அந்த நாட்டில் இஸ்ரேலியர்களை குடியேற்றி பூர்வேக குடிமக்களை அகதிகளாக்கினார்கள்.பலஸ்தீனில் இரண்டு ஆட்சிகள் நடக்கின்றன. ஹமாஸ் ஆட்சியிலுள்ள பகுதியில் உணவுப் பற்றாக்குறையை ஏற்படுத்த புதிய இஸ்ரேல் அரசும் அமெரிக்காவும் இணைந்து பொருளாதாரத் தடை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளன என்றார். அமைச்சர் வாசுதேவநாணயக்காரவும் கருத்துத் தெரிவித்ததோடு பலஸ்தீனத்தின் அயலவர் அந்நாட்டின் பிரதான எதிரியாக உள்ளது. இதற்கு அமெரிக்கா உதவுகிறது. மேலைத்தேயத்தின் பின்னடைவிலே பலஸ்தீனத்தின் சுதந்திரம் தங்கியுள்ளது. ஈராக்,லிபியா,போன்ற நாடுகள் அழிந்தன. மேலைத்தேயத்திற்கு எதிராக அனைவரும் ஒன்று பட வேண்டும் என்று தெரிவித்தார்.

## அரசாங்கத்திலிருந்து...

"இல்லை, இல்லை, அரசாங்கம் தொடர்பில் எந்த ஏமாற்றமும் இல்லை. அந்தந்த சமயங்களில் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறோம். எனவே நாங்கள் உருவாக்கிய அரசாங்கம் இது. நாங்கள் உருவாக்கிய ஜனாதிபதி . எனவே, அரசாங்கத்திலுள்ள பலவீனங்களை சரிசெய்து முன்னோக்கி செல்ல முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## அரசிலிருந்து சு.க....

பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளுக்கிடையே இக்காலங்களில் நிலவி வரும் கருத்துமோதல்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர். அந்த கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை என்ற அவசியம் கிடையாது.

புதிய அரசியலமைப்பு திருத்தத்தை முன்வைத்தல் போன்ற அரசியலமைப்பு தொடர்பான விசேட விடயங்களுக்கு மட்டுமே பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படலாம்.ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டுள்ளமைக்கு காரணமாக அமைந்துள்ளதாக பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் இருந்து வெளியேறினாலும் அரசாங்கம் ஒருபோதும் வீழ்ச்சியடையாது.

ஊடகங்களிலும் பல்வேறு இடங்களிலும் பிரசாரங்களை கடுமையாக முன்னெடுத்து வருவதை விடுத்து தேவையானால் எவரும் அரசாங்கத்திலிருந்து வெளியேற முடியும்.

எவ்வாறெனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் நாடும் நாட்டின் தேசிய பாதுகாப்பும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மோசமான செயற்பாடுகளினாலேயே சீரழிந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## நாட்டில் கொரோனா...

நாட்டின் மொத்த சனத்தொகையில் கோவிட்19 தடுப்பூசி ஏற்றுவதற்கு தகுதியான மக்கள் தொகையில் 84 வீத மானவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. ஏனைய நாடுகளில் தடுப்பூசி ஏற்றப்பட்ட விகிதாசார விட இந்த விகிதாசாரம் கூடிய அளவாக பதிவாகியுள்ளதாகவும் தற்போது பூஸ்டர் தடுப்பூசி 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டதுடன் ஜனாதிபதியின் விஷேட அறிவுரையின் பேரில் 60 வயது மேற்பட்ட தடுப்பூசி பெற சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு வர முடியாதவர்களுக்கு நடமாடும் சேவை மற்றும் வீடுகளுக்குச் சென்று தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும் 20 வயதுக்கு மேற்பட்ட புற்றுநோய் உட்பட தீராத நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இந்த பூஸ்டர் தடுப்பு ஊசி இன்று முதல் ஏற்றப்பட்டு வருவதாகவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய சுகாதார அமைச்சின் திணைக்களங்கள் இதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் இதன்போது அவர் மேலும் தெரிவித்தார்.

## மக்கள் நாட்டை விட்டு...

மக நெகும நிர்மாண இயந்திர நிறுவனத்தினால் கட்டுகம்பொல ஆடிகமவத்தையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அஸ்போல்ட் முழுமையான கலவை இயந்திர தொழிற்சாலையின் உற்பத்தி பணிகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவின் தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உரையாற்றுகையில்,

கடந்த அரசாங்கம் இன்று இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும். பலப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தை முன்னைய அரசாங்கம் நாசமாக்கியது. நாட்டை அபிவிருத்தி செய்ய போதுமான பணம் இருந்தது. ஆனால் எங்களிடம் டொலர்கள் இல்லை, அதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தந்த சுமார் ஒன்றரை இலட்சம் அப்பாவிகள் மீண்டும் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டனர். அவர்களை வாக்களிக்க வரவழைத்ததாக எம்மீது குற்றம் சுமத்தினர். அவர்களை அழைத்து வந்து அவர்களுக்கு தேவையான தடுப்பூசியை ஏற்றினோம். சில நாடுகளுக்கு நுழைவதற்கு ஒரே ஒரு தடுப்பூசியை ஏற்றினால் மாத்திரமே அனுமதி வழங்கப்படுகிறது. நாங்கள் அதனை வழங்கினோம். வந்தவர்கள் கடவுச்சீட்டை தயார் செய்து கொண்டு வெளிநாடு சென்று விடுகின்றனர். ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காரணமாகவே மக்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள் என்ற கருத்தை எதிர்க்கட்சிகள் பரப்பின.

எமது கட்சி மாநாட்டில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதை பற்றி ஆராயுமாறு சொன்னார். நாம் தேடிப் பார்த்த போது தடுப்பு மருந்துகளை ஏற்றிக் கொண்டு மீண்டும் வெளி நாடுகளுக்கு செல்ல வந்தவர்களே அவர்கள் என்பது தெரிந்தது. இலங்கையை விட்டு வெளியேற வேண்டுமானால் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல வேண்டும். ஆனால் இவர்கள் ஐரோப்பாவுக்குச் செல்லும் மக்கள் அல்ல. கோட்டாபய ராஜபக்ஷவின் காரணமாகவே அவர் நாட்டை விட்டு வெளியேறுவதாக கூறப்படுகிறது. ஆனால் அவரால் தான் அந்த மக்கள் நாட்டிற்கு வந்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் வேறு நாடுகளில் இறந்த போது, அந்த நாடுகளில் வாழும் எமது மக்கள் கோட்டாபய ராஜபக்ஷ மீது நம்பிக்கை வைத்து அந்த நாடுகளை விட்டு வெளியேறி இங்கு வந்தனர். வெளிநாடு செல்லும் மனிதர்களை நாம் வணங்க வேண்டும். அவர்களிடமிருந்து வரும்டொலர்களால் தான் இந்த நாட்டிற்கு எண்ணெய் கூட இறக்குமதி செய்யப்படுகிறது. அந்த மக்களைத் தான் நாட்டை விட்டு வெளியேறுபவர்கள் என்று அவமானப்படுத்தியுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## இரு வருடங்களில் 10 பில்....

பாராளுமன்றத்தில் (27) பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு உள்ளிட்ட 04 அமைச்சுக்களின் வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் ரமேஷ் பத்திரண இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்;

இந்த வருடம் நாட்டின் பொருளாதாரத் துறையில் மிகவும் முக்கியமான ஒரு வருடம் என்பது குறிப்பிடத்தக்கது.

இறப்பர் உற்பத்தி ஏற்றுமதி மூலம் இந்த வருடத்தில் ஒரு பில்லியனுக்கு மேற்பட்ட வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

அதேபோன்று தேங்காய் ஏற்றுமதி மூலம் 900 மில்லியன் டொலரையும் கறுவா உள்ளிட்ட வாசனைத் திரவியங்கள் மூலம் 450 மில்லியன் அமெரிக்கன் டொலர் வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கிணங்க இந்த வருடத்தில் பெருந்தோட்ட கைத்தொழில் துறை மூலம் 3.8 பில்லியன் டொலர்களை பெற்றுக்கொள்வதே அரசாங்கத்தின் இலக்காகும்.

அதே போன்று இந்த வருடத்தில் ஆடைத் தொழில் ஏற்றுமதி மூலம் 4.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக் கொள்ளமுடியும் என்பதோடு எதிர்வரும் இரண்டு வருடங்களில் ஆடை தொழில் துறை உற்பத்தி ஏற்றுமதி மூலம் 5 பில்லியன் அமெரிக்க டொலர்களையும் அதே போன்று பெருந்தோட்ட கைத்தொழில் உற்பத்தி ஏற்றுமதி மூலம் மேலும் ஐந்து பில்லியன் டொலர்களையும் வருமான இலக்காகக் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் 2010ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை தேயிலை ஏற்றுமதி மூலம்1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும் இந்த வருடம் தேயிலை ஏற்றுமதி மூலமாக 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

உலக சந்தையில் இலங்கை தேயிலைக்கு அதிக விலை காணப்படுகிறது. அந்த வகையில் இலங்கைத் தேயிலை 03 டொலராகவும் இந்தியாவின் தேயிலை இரண்டு டொலராகவும் கென்யாவின் தேயிலை 1.5 டொலராகவும் காணப்படுகிறது.

அந்த வகையில் தேயிலை உற்பத்தி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் தேயிலை உற்பத்தியாளர்களுக்கு கடன்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க தேயிலை நடுகைக்காக 4.75

வட்டியில் கடன் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.




சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பரிய சேவையாற்றிய ஆறுமுக நாவலரின் குருபூசைத்தை முன்னிட்டி லேக்ஹவுஸ் இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் தினகரன் ஆசிரியர் செந்தில் வேலவரின் தலைமையில் நேற்று முன்தினம் தினகரன் ஆசிரிய பீடத்தில் பூஜை நிகழ்வுகளின் போது பிடிக்கப்பட்ட படங்கள்... (படங்கள்: ருக்மல் கமகே)

# மக்களின் காலடிக்கு சென்று குறைகளை தீர்த்து வைத்த ஜனாதிபதி சட்டத்தரணி மர்ஹூம் ஏ.எல்.எம்.ஹாசிம்

ஜனாதிபதி சட்டத்தரணி ஹாசிம் குறித்து எனது சிறுபராயம் முதலே எனக்குத் தெரியும். அவருக்கும் எனது தந்தைக்கும் மிகவும் நெருங்கிய தொடர்புகள் இருந்தன. எனது தந்தையைப் போன்று அவரும் சட்டத் துறையில் சட்டத்தரணியாக இருந்தார். வார இறுதி நாட்களில் கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் பழைய மாணவர் கூட்டங்கள் இடம்பெறும். அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் கூட்டங்கள் மற்றும் எனது தந்தையின் அரசியல் கலந்துரையாடல்கள் என்பவற்றுக்காக கொள்ளுப்பிட்டி சிறிகொத நிலையம் என்பவற்றில் ஒன்றுகூடுவார்கள்.

எனக்கு விடுமுறை கிடைக்கின்ற போது எனது தந்தை என்னை கொழும்புக்கு அழைத்துச்செல்வார். கொழும்பில் இடம்பெறும் தந்தையின் கூட்டங்களுக்கு செல்கின்ற சந்தர்ப்பத்தில்தான் ஏ.எல்.எம் ஹாசிம் அவர்களை நான் தெரிந்து கொண்டேன். எனது சிறு பராயத்தில் கொழும்பு வைத்தியசாலை வீதியில் உள்ள அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் தலைமை அலுவலகத்தில் நான் அவரை அடிக்கடி சந்தித்திருக்கின்றேன். எனது தந்தையோடு முஸ்லிம் லீக் அலுவலகத்திற்கு செல்லும் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் லீக்கின் தலைவராக எம்.சி.எம் கலீல் இருந்தார். இணைச் செயலாளராக சட்டத்தரணி ஹாசிம் செயற்பட்டமை எனக்கு நினைவு இருக்கின்றது.

அவ்வாறான கலந்துரையாடல்களில் ஹாசிம் மிகவும் முக்கியமானவராக இருந்தார். நாம் சிறுவர்களாக இருந்தாலும் புன்சிரிப்புடன் எம்முடன் கதைத்து விட்டு செல்கின்ற அந்த தன்மை சிறந்தது. எனது தந்தையும் அவரும் சட்டத்தரணிகள். அவர்கள் சட்டத்தரணிகளாக தொழிலை கொண்ட சந்தர்ப்பத்தில் அந்தப் பிரதேசங்களில் இருந்த சட்டத்தரணிகள் சங்கத்தில் அவர்கள் இருவரும் தலைவர்களாக இருந்திருக்கின்றார்கள். பெரும்பாலான சிங்கள சட்டத்தரணிகள் உள்ள நீதிமன்ற வளாகங்களில் அவர்கள் இருவரையும் சங்கத்தின் தலைவர்களாக நியமித்திருந்ததை வைத்து அன்றைய சமூகத்தில் காணப்பட்ட ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு என்பவற்றை சரியாக புரிந்துகொள்ள முடியும்.



சட்டத்தரணி ஹாசிம் கேகாலை மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தில் தலைவராக 30 வருடங்கள் சேவையாற்றியுள்ளமை விசேடமான ஒரு விடயமாகும். சட்டத்தரணி ஹாசிம் தமது ஊரான கிருங்கதெனிய பள்ளிவாயலின் நிருவாக சபைத் தலைவராக தொடர்ந்தும் செயற்பட்டு வந்துள்ளார். எனது தந்தையும் அவரும் தமது பள்ளிவாயல்களின் நிருவாக சபையின் தலைவர்களாக இறுதி மூச்சு வரை செயற்பட்டுள்ளார்கள்.

அன்றை காலத்தில் ஸஹிராக் கல்லூரியை அரசாங்கம் கையகப்படுத்திய சந்தர்ப்பத்தில் ஸாஹிராக் கல்லூரியின் பழைய மாணராக இருந்த சட்டத்தரணி ஏ.சி.எம் அமீர் அவர்களும் சட்டத்தரணி ஹாசிம் அவர்களும் எனது தந்தையும் சட்டத்தரணி செயட் அஹமட் அவர்களுடன் இணைந்து ஸாஹிராவின் பழைய மாணவர்களை இணைத்துக் கொண்டு ஸாஹிராக் கல்லூரியை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு முன்னெடுத்த போராட்டம் எனக்கு நினைவுக்கு வருகின்றது.

**ஜனாதிபதி சட்டத்தரணி மர்ஹூம் ஏ.எல்.எம்.ஹாசிம் நினைவு தினம் இன்றாகும் (29.11.2021). இதனை முன்னிட்டு இவ்வாண்டிற்கான நினைவுரையை பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் நிகழ்த்தினார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சிங்கள அலைவரிசையில் நிகழ்த்தப்பட்ட உரையின் தமிழாக்கம்**

டொக்டர் எம்.சி.எம் கலீல் அவர்களுக்குப் பின் முஸ்லீம் லீக்கிற்கு சட்டத்தரணி ஹாசிம் தலைமைத்துவத்தை வழங்கினார். அதன் ஊடாக நாடு முழுவதும் உள்ள முஸ்லிம் மக்களின் தேவைகள், பிரச்சினைகள், என்பன தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கின்ற போது தமது காலத்தையும் நேரத்தையும் நிதியையும் செலவிட்டு அந்தப் பகுதிகளுக்கு நேரடியாக சென்று ஆராய்ந்து பிரச்சினைகளை தீர்த்து வைத்தார்.



அதே போன்று கேகாலை மாவட்டத்தில் உள்ள பௌத்த விகாரைகளின் வளர்ச்சிக்காகவும் அங்குள்ள பௌத்த பாடசாலைகளின் அபிவிருத்திக்காகவும் மயானங்களின் அபிவிருத்தி போன்ற பொதுச் சேவைகளுக்காகவும் அவர் தனக்கு சொந்தமான காணிகள் மற்றும் நிதியை வழங்கினார். அவர் மேற்கொண்ட சேவை தொடர்பில் அந்தப் பிரதேசத்தில் உள்ள பெரியோர்கள் இன்று நினைவுபடுத்துகின்றார்கள். அவருடைய வாழ்க்கைக்கு பெரிதும் உறுதுணையான இருந்த அவர்களின் மனைவி எமது மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் களுத்தறை மாவட்டத்ததைச் சேர்ந்த வெயாங்கல்ல கிராமத்தைச் சேர்ந்தவர்.

அவர் அரசியல் ரீதியில் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ளாவிட்டாலும் தமது அரசியல் கொள்கை மக்கள் நலன் என்பவற்றை கருத்திற் கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்.

# அரை நூற்றாண்டு நிறைவு காணும் வாழைச்சேனை பொதுசன நூலகம்

கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே 32 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது வாழைச்சேனை பொதுசன நூலகம். பாசிக்குடா செல்லும் பிரதான பாதையில் பிரதேச சபை அலுவலகம் மற்றும் தபால் நிலையம் ஆகிய இரண்டுக்கும் மத்தியில் இந்நூலகம் அமைந்துள்ளது.

அதற்கு முன்னர், வாழைச்சேனை பிரதேசம் கோறளைப்பற்று கிராம சபையாக இருந்த காலத்தில் 1972 .07.01 அன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட வாழைச்சேனை பொதுசன நூலகமானது படிப்படியாக வளர்ச்சியடைந்தது. வாசகர்கள் அதிகரித்து வளர்ச்சியடைந்ததன் காரணமாக, வாழைச்சேனை பொது மைதானத்தினுள் வீதியோரமாக புதிய கட்டடம் அமைக்கப்பட்டு அங்கு மாற்றப்பட்டது.

1978 இல் ஏற்பட்ட சூறாவளியின் போது நூலகக் கட்டடமும், ஏராளமான நூல் ஆவணங்களும் சேதமடைந்தன. பின்னர் மீண்டும் புனரமைக்கப்பட்ட நூலகம், 1990களில் இடம்பெற்ற இனவன்செயல்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டது. அதன் பின்னர் மீண்டும் பிரதேச சபை கட்டடத்திலேயே நூலகம் இயங்கத் தொடங்கியது. 1994இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் கோறளைப்பற்று பிரதேச சபைக்கு தவிசாளராக தெரிவான ம.இராமச்சந்திரன், உப தவிசாளர் அ.சண்முகநாதன் ஆகியோரின் முயற்சியினால் 1994இல் தற்போதுள்ள கட்டடம் உருவாக்கப்பட்டது. அதுவும் கட்டப்பட்டு நீண்ட காலங்கள் திறக்கப்படாமல் இருந்தது. 1999.03.20இல்தான் திறக்கப்பட்டு நூலகம் தனியாக இயங்கத் தொடங்கியது.

இவ்வாறாக பல சவால்கள், இடர்களுக்கு மத்தியிலேயே தன்னையும் வளர்த்து, தன் சமூகத்தின் வளர்ச்சிக்கும் கால்கோளாய் நின்றது வாழைச்சேனை நூலகம். எதிர்வரும் 2022 .07.01இல் ஐம்பது வருடங்களை பூர்த்தி செய்யவுள்ள எமது நூலகத்தில் மிக நீண்ட காலமாக சிறுவர் பகுதியொன்றினை உருவாக்க வேண்டும் என்னும் அவாவில் இங்கு பணிபுரிந்த பலரும் காலத்துக்குக் காலம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும் அது இன்றுவரை சாத்தியப்படாமலே போய் விட்டது.

வாழைச்சேனை நூலகத்தில் சிறுவர் பகுதியொன்றினை உருவாக்கும் முயற்சியின் ஓர் அங்கமாக தற்போது தினகரனில் இக்கட்டுரையைப் பிரசுரிக்கின்றோம். வாழைச்சேனை நூலகத்தின் தேவையை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்கு தினகரன் பத்திரிகை எமக்கு உதவுவது குறித்து நாம் நன்றி கூறுகின்றோம். நாட்டிலுள்ள நல்லுள்ளங்களிடம் இருந்து இந்தப் பணிக்கு உதவி கோரும் முகமாக இந்தக் கட்டுரையினை பிரசுரிக்கின்றோம். கடந்த 50 வருடங்களில் வாழைச்சேனையின் மத்தியில் அமைந்திருந்து தமிழ், முஸ்லிம் மக்களதும், ஏராளமான மாணவர்களதும் அறிவுத் தேடலுக்கும், இலக்கிய இரசனைக்கும் தன்னாலான பணிகளை ஆற்றியுள்ளது எமது நூலகம்.




பிரதேச சபையின் கீழ் தற்பொழுது 08 பொது நூலகங்களும், 07 வாசிக சாலைகளும் இயங்கி வருவதனால் பிரத்தியேகமாக தனித்தனியே நிதி ஒதுக்கீடுகள் வழங்கி, நூலகங்களின் அபிவிருத்திக்கு வலுச்சேர்ப்பதில் பல்வேறு சிரமங்கள் நிலவுகின்றன. இருப்பினும் பல இடங்களில் நன்கொடையாளர்கள், சமூக நலன் விரும்பிகளின் உதவியுடன் நூலகத்திற்கான பௌதீக வளங்கள், மற்றும் நூல், ஆவணங்களைப் பெறுகின்ற நடவடிக்கையானது தொடர்ந்து நடந்த வண்ணம்தான் உள்ளது.

## சிறுவர் நூலகம் அமைப்பதற்கு நன்கொடை திரட்டும் பணி ஆரம்பம்

நமது நாட்டினைப் பொறுத்தவரையில் எல்லோராலும் எல்லாப் புத்தகங்களையும் விலை கொடுத்து வாங்கிப் படிக்க முடியாது. அவ்வாறான மாணவர்களுக்கும் வாசகர்களுக்கும் அபயம் அளிக்கின்ற ஒரே இடமாக பொதுநூலகங்களே உள்ளன. பொதுநூலகங்களில் நூல் இரவல் பெற்று படித்தவர்களே இன்று பல உயர் பதவிகளிலும், இலக்கியப் படைப்பாளிகளாகவும், தொழில்வல்லுனர்களாகவும், சமூகத்தின் முன்னோடிகளாகவும் விளங்குகின்றனர்.

நண்பர்கள், உறவினர்கள், குடும்பம், பணம் தராத நம்பிக்கையினையும் கௌரவத்தினையும் புத்தகங்கள் வழங்கும்.

புத்தகத்தின் மேன்மை உணர்ந்த உலக அறிஞர்கள் எல்லோரும் நூலினதும், நூலகத்தினதும் முக்கியத்துவத்தினை நமக்கு பறைசாற்றிய வண்ணமே உள்ளனர்.

நமது குழந்தைகளை அதிகமாய் புத்தகங்களை நோக்கி நகர்த்த வேண்டி உள்ளது. கைத்தொலைபேசியும் கையுமாய் மாறிப் போன நமது குழந்தைகள் உடல் மற்றும் உளநலன்கள் கெட்டு சிறுவயதிலேயே வெறுமையடைந்து நீர்த்துப் போகாவண்ணம் புதுப்பித்து, அவர்களை சாதனையாளர்களாக மாற்றும் வல்லமை புத்தகங்களுக்கே உண்டு.

அதனை தங்கள் வாழ்நாளில் உணர்ந்திருப்பீர்கள். எனவே, எமது பொதுநூலகத்தின் 50ஆவது வருட நிறைவினை முன்னிட்டு உருவாக்கப் படவுள்ள சிறுவர் நூலகப் பிரிவுக்கு நூல்கள் மற்றும் புத்தக அலுமாரிகள், தளபாடங்கள் போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்காக தங்களால் முடிந்த நிதி உதவி அல்லது சிறுவர்களுக்கான புத்தகங்களைப் பெற்று

(உதவ விரும்பும் அன்பர்கள் எஸ்.ஏ.ஶ்ரீதர், பொதுசன நூலகம், வாழைச்சேனை (0652258505, 075 1314540), sasridhar@ymail.com போன்ற வழிகளில் எம்மைத் தொடர்பு கொள்ளலாம்)

அன்பளிப்பாக வழங்கி எமது நூலகத்தின் வளர்ச்சிக்கும், அதன் வழியே நமது குழந்தைகளின் எதிர்கால வளர்ச்சிக்கும் எங்களுக்கு கரம் கொடுத்து உதவுமாறு தங்களை பேரன்பாய் வேண்டிக் கொள்கின்றோம்.



**எஸ்.ஏ.ஶ்ரீதர்**
நூலக சேவகர்,
பொதுநூலகம், வாழைச்சேனை

# இதுவரை 633 ஜனாசாக்களை அடக்கம் செய்வதற்கு உதவியுள்ள காத்தான்குடி ஜனாசா நலன்புரி அமைப்பு

காத்தான்குடி ஜனாசா நலன்புரி அமைப்பு காத்தான்குடியிலும் காத்தான்குடியை அன்மித்துள்ள பிரதேசங்களிலும் மரணிப்பவர்களின் ஜனாசாக்களை அடக்கம் செய்வதற்கு பல்வேறு வகையிலும் உதவி வரும் ஒரு அமைப்பாகும். 63 உறுப்பினர்களையும் 31 நிருவாக உறுப்பினர்களையும் கொண்ட ஒரு சமூக சேவை நிறுவனமாக காத்தான்குடி ஜனாசா நலன்புரி அமைப்பு செயற்பட்டு வருகின்றது.

மரணித்தவர்களுகளை அடக்கம் செய்ய குழி (கப்ர்) தோண்டிக் கொடுப்பது, மரணித்தவர்களுக்கான வெள்ளை ஆடை (கபன்) வழங்குவது அடக்கம் செய்யும் பெட்டி (மஞ்சு) வழங்குவது, தூர இடங்களில் இருக்கும் காத்தான்குடியைச் சேர்ந்த மரணித்தவர்களின் ஜனாசாக்களை காத்தான்குடிக்கும் காத்தான்குடியை அன்மித்துள்ள பிரதேசங்களுக்கும் கொண்டு போய் கொடுப்பது, அதே போன்று காத்தான்குடியில் மரணிப்பவர்களின் ஜனாசாக்களை வெளி மாவட்டத்துக்கு இவர்களின் வாகனத்தில் கொண்டு போய் கொடுக்கும் சேவைகளை பிரதான சேவைகளாக இந்த நிறுவனம் செய்து வருகின்றது. இவைகள் அனைத்தையுமே இலவசமாக செய்து வருகின்றது.

காத்தான்குடியிலும் அதனை அன்மித்த பிரதேசங்களிலும் மரணிக்கின்ற மரண வீடுகளுக்கு தேவையேற்படின் கதிரைகள், பாய்கள், ஃபோகஸ் வெளிச்ச மின் குமிழ்களை வழங்குவதுடன் ஆண் ஜனாசாக்களை குளிப்பாட்டி கபன் செய்து கொடுக்கின்ற சேவைகளையும் இந்த நிறுவனம் செய்து வருகின்றது.




இதேபோன்று ஆண்டுதோறும் பாடசாலையில் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் புத்தக பைகளையும் வழங்கி வருகின்றனர். இதனை 300 மாணவர்களுக்கு வழங்கி வருவதும் இவர்களின் சிறப்பான வேலைத்திட்டமாகும்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை சிரமதானம் செய்து கொடுத்ததுடன் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சமைத்த உணவுகளையும் உலர் உணவுப் பொருட்களையும் இவர்கள் வழங்கி தமது வேலைத்திட்டத்தினை விரிவுபடுத்தியுள்ளனர்.

இந்த அமைப்புக்கு மரணித்தவர்களின் உடல்களை ஏற்றுவதற்கான வாகனம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கான முயற்களை மேற்கொண்டு காத்தான்குடியிலுள்ள தனவந்தர்களின் உதவியுடன் 19 இலட்சம் ரூபா பெறுமதியான வாகனம் ஒன்றை வாங்கியுள்ளதுடன் இந்த நிறுவனத்தின் மிக நீண்ட நாள் தேவையாக இருந்த இந்த வாகனத் தேவை இதன் மூலம் நிறைவேறியுள்ளது.

இதுவரை இந்த நிறுவனத்தினர் 633 ஜனாசாக்களை அடக்கம் செய்வதற்கு உதவியுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். கொரோனா வைரசினால் மரணிப்பவர்களின் ஜனாசாக்களையும் வைத்தியசாலையிலிருந்து ஓட்டமாவடி மஜ்மா நகருக்கு கொண்டு சென்று அடக்கம் செய்வதற்காகவும் இவர்கள் உதவி செய்துள்ளனர்.

இந்த அமைப்பின் தலைவராக யு.எல்.ரபீக், செயலாளராக ஏ.எம். நாசர், பொருளாளராக ஏ.எம்.ஹாறூன் ஆகியோருடன் 31 பேர் கொண்ட நிருவாக சபை செயற்பட்டு வருகின்றது. இதற்கான ஒரு ஆலோசனைக் குழுவும் உள்ளது. அதில் டொக்டர் யு.எல்.நசிர்தீன, சட்டத்தரணி ஏ.உவைஸ், அஷ்ஷெய்க் எம்.சி.ரிஸ்வான் மதனீ, நிருவாக உத்தியோகத்தர் எம்.எம்.ஜரூப், வர்த்தக பிரமுகர் ஏ.ஜே. அஜ்வத் ஆகியோர் அடங்குகின்றனர்.

**எம்.எஸ்.எம்.நூர்தீன்**
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)




# எதிர்காலத்தில் நாம் வெளிநாட்டில் கையேந்துவதை தவிர்க்கவே வரவு செலவு திட்டம்

-மருதபாண்டி ரமேஸ்வரன் எம்.பி

ஹற்றன் விசேட நிருபர்

நாட்டினுடைய பொருளாதாரத்தினை உயர்த்த வேண்டும் என்பதற்காக இந்த வருட வரவு செலவு திட்டத்திலும் பாரிய அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக நிதி அமைச்சர் பல மில்லியன் ரூபாய்களை ஒவ்வொரு அமைச்சுக்கும் ஒதுக்கீடு செய்துள்ளார். நாட்டின் பொருளாதாரம் கிராம மட்டத்திலிருந்து கட்டியெழுப்பட வேண்டும்.ஏன்னென்றால் எதிர்காலத்தில் நாம் வெளிநாட்டினை நம்பியிருக்க கூடாது என்பதற்காகத்தான் அவ்வாறான ஒரு திட்டத்தினை முன்னெடுத்துள்ளார் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்ஸின் நிதி ச்செயலாளருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்தார்.

சமுர்த்தி அருணலு திட்டத்தின் கீழ் சமுர்த்தி குடும்பங்களுக்கு வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கிணங்க 20 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள், இரண்டு குடும்பங்களுக்கு லொத்தர் சீட்டிலிப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற நிதி கையளிப்பு, இரு மாணவர்களுக்கு சிப்தொர புலமைப்பரிசில் நிதி கையளிப்பு, இரு குடும்பங்களுக்கு மலசலகூடம் கட்டுவதற்கான நிதி வழங்கல் மற்றும் பொருளாதார விருத்திக்காக கடன் வழங்கல் உள்ளிட்ட நிகழ்வுகள் பாராளுமன்ற உறுப்பினர் எம். ரமேஸ்வரன் தலைமையில் நேற்று ஹற்றன் டிக்கோயா நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பொருட்களை வழங்கி வைத்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர்,...



சுயதொழில் ஊடாக வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகவே பல இலட்சம் ரூபா நிதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உங்கள் வாழ்க்கை தரத்தினை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதே எமது அனைவரதும் எதிர்ப்பார்ப்பாகும். கொரோனா தொற்று பரவல் காரணமாக பல நாடுகள் அபிவிருத்தி திட்டங்களை நிறுத்தியிருக்கின்றார்கள்.

எமது நாட்டில் மாத்திரம் விலைவாசி உயரவில்லை.நுவரெலியா மாவட்டத்தில் கடந்த காலங்களில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையினால் மரக்கறி விலைகள் உயர்வடைந்துள்ளன. இது நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளன. நுவரெலியா மாவட்டத்தில் உரம் இல்லாத பிரச்சினைகள் காணப்பட்டன அதனை நாங்கள் ஜனாதிபதியிடம் பேசி இப்போது தீர்வுகளை பெற்றுக் கொடுத்துள்ளோம் என்றார்.

## 'ஒரே நாடு ஒரே சட்டம்' - செயலணியின் உறுப்பினர் கருணாகரன்- செந்தில் தொண்டமான் சந்திப்பு



ஒரே நாடு ஒரே சட்டம் தொடர்பிலான ஜனாதிபதி செயலணிக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தமிழ் உறுப்பினரான கருணாகரனை, பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமான் பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினார்.'ஒரே நாடு ஒரே சட்டத்தின்' ஊடாக

சிறுபான்மை மக்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக முன்னுரிமையளிப்பது குறித்து இதன்போது இருவரும் கலந்துரையாடினர்.

## கண்டியிலிருந்து மாத்தளை நோக்கி சென்ற ரயிலில் மரக்கிளை விழுந்து சேதம்

அக்குறணை குறூப் நிருபர்

கண்டி மாத்தளை புகையிரத வீதியில் வத்துகாமத்திற்கு அண்மிதத பிரதேசத்தில் புகையிரதம் மீது மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் பாதைக்கு நேற்று சேதம் ஏற்பட்டுள்ளது.

கண்டியிலிருந்து மாத்தளை நோக்கிச் சென்ற புகையிரதத்தில் அதிகாலையில் மரக்கிளை ஒன்று முறிந்து விழுந்துள்ளது. பின்னர் புகையிரதத்தின் வேகம் காரணமாக மரம் இழுக்கப்பட்டு சென்றதில் புகையிரதத்துக்கு சிறிதளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. சில மணித்தியாலங்களின் பின்னர் பாதை சீர் செய்யப்பட்டுள்ளது.



ஹற்றன் நகரில் இருந்து பண்மூர் செல்லும் பாதையில் எஞ்சியிருந்த 4 கிலோ மீட்டர் பகுதிக்கு மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையால் 40 மில்லியன் ரூபாய் செலவில் காப்பட் செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதை காணலாம்.
(படம்: மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

## இரசாயன பசளை இறக்குமதிக்கு அனுமதி வழங்கியமை வரவேற்கத்தக்கது

- திஸ்ஸ அத்தநாயக்கா எம்.பி.

அக்குறணை குறூப் நிருபர்

இரசாயன பசளை இறக்குமதிக்கு அனுமதி வழங்கியது வரவேற்கத் தக்கது. இல்லாவிட்டால் எதிர்காலத்தில் நாட்டில் காய்கறிவகைகள் மற்றும் பழங்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இருந்தது என்று ஐக்கிய மக்கள் சக்தி தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்தார்.

கண்டி, கெட்டம்பே விகாரையில் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,..

இயற்கைப் பசனைப் பயன்பாடு நல்ல விடயம். ஆனால் அதனை அமுல்படுத்திய முறையில் குறைபாடுகள் காணப்படுகின்றன. நீண்ட கால அடிப்படையில் அதனை அமுல்படுத்தி இருக்கலாம். அப்போது அதற்கேற்றவாறு நிலத்தை



பன்படுத்தல் மற்றும் விதைகளை தயார் செய்தல், இயற்கை பசளை குழிகளைத் சுயமாகத் தயாரித்தல் போன்ற பல விடயங்களை மேற்கொள்ள வசதி ஏற்பட்டிருக்கும்.

அத்துடன் இயற்கை பசளை கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுகளுக்கு தனியாக சந்தை வாய்புக்களையும் ஏற்படுத்த வேண்டும். அதற்கு போதிய கால அவசாசம் தேவை. அரசியல் கட்சிகள் தேர்தல் காலங்களில் கொள்கைப் பிரகடனங்களைச் செய்கின்றன. அவை அழகிய வசனங்களாக மட்டுமே உள்ளன. கடதாசிகளுக்கும் புத்தகங்களுக்கும் மட்டும் எல்லைப்படுத்தப்பட்ட அந்த கோட்பாடுகள் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை. இது தான் பிரச்சினையாகும் என்றார்.

நாட்டில் அரசியல் கட்சிகள் மாறிலாம்.ஆனால் நாட்டில் எப்போதும் ஒரே கொள்கை பின்பற்றப் பட வேண்டும்.

## கேகாலை – அவிசாவளை, கலிகமுவ – ருவன்வெல்ல பாதைகள் மூடப்பட்டுள்ளன

கேகாலை அவிசாவளை பிரதான வீதி, கலிகமுவ ருவன்வெல்ல ஆகிய இரண்டு வீதிகளும் மண்சரிவு காரணமாக மூடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூடப்படும் பகுதி 2வது கிலோ மீற்றர் கல்லிலிருந்து தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வாகன சாரதிகள் மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

இதேவேளை, ஏழு மாவட்டங்களுக்கு தேசிய கட்ட ஆராய்ச்சி நிறுவனத்தால் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, கண்டி, கேகாலை, மாத்தளை, குருநாகல், கொழும்பு, களுத்துறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## அறிவார்ந்த அரசியல் உரையாடலை மலையகத்தில் தோற்றுவிப்போம்

புதிய 'மலையக அரசியல் அரங்கம்' மயில்வாகனம் திலகராஜ்

ஹற்றன் சுழற்சி நிருபர்

அறிவார்ந்த அரசியல் உரையாடலை மலையக அரசியல் தளத்தில் உருவாக்கும் நோக்கில் 'மலையக அரசியல் அரங்கம்' எனும் அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது என்று அவ்வமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்தார்

குறித்த அமைப்பு கடந்த 30 ஆம் திகதி உதயமானாலும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் தலவாக்கலையில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே தெளிவுப்படுத்தப்பட்டது.

மலையக அரசியல் அரங்கின் பிரதான அமைப்பாளர் ராமன் திருச்செந்தூரன், செயற்குழுச் செயலாளர் நாகரட்ணம் கிருஷ்ணகுமார் ஆகியோரும் செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

அறிவார்ந்த அரசியல் உரையாடலை மலையக அரசியல் தளத்தில் உருவாக்குதல், அதனை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லுதல், மாவட்ட எல்லைகளைக் கடந்த மலையக அரசியலை முன்னெடுத்தல் ஆகியன அமைப்பின் பிரதான நோக்கமாகும். என்று திலகராஜ் தெரிவித்தார். புதிய அரசியமைப்பு மற்றும் தேர்தல் மறுசீரமைப்பு என்பன தயாரிக்கப்பட்டு வருகின்றன.பாராளுமன்றத்தில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, சமூகத்தில் அறிவார்ந்த கருத்தாடல்களை உருவாக்கி, சமூகத்தின் தேவை அறிந்து, அவர்களின் தேவைக்கேற்ப தேவையான யோசனைகளை இனி வரும் தேசிய மட்ட விடயங்களின் போது முன்வைப்போம். ஏனெனில் மக்களின் நிலைப்பாடுதான் பிரதிபலிக்க வேண்டும். மலையகம் சமூகம் நூற்றாண்டுகால அரசியல் சமூகம், அதற்கு அரசியல் அடையாளம் இருக்கின்றது. கூலி சமூகம் மட்டும் அல்ல. செனட் சபையில்கூட பிரதிநிதித்துவம் இருந்திருக்கின்றது. எனவேதான் அமைப்பின் சின்னமாக



நடேசய்யர் மற்றும் அவரின் பாரியாரின் படங்களை பயன்படுத்தியுள்ளோம்.

மலையக அரசியல் அரங்கமானது, அரசியல் கட்சியாகவோ அல்லது தொழிற்சங்கமாகவோ பதிவு செய்யப்படவில்லை. சமூக அரசியலை முன்னெடுப்பதற்கான அமைப்பு என்பதால் அதில் எவரும் இணையலாம் என்றார் திலகர்.

எல்ஜின் தோட்டத்திலுள்ள மாதா சிலை உடைப்பு:

## இந்து-கிறிஸ்தவ மக்களின் ஒற்றுமையை சீர்குலைப்பதற்கே



-மலையக இந்துகுருமார் ஒன்றியம் குற்றச்சாட்டு

ஹற்றன் விசேட நிருபர்

லிந்துலை நாகசேனை பகுதியிலும் எல்ஜின் தோட்ட பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ள மாதா திருச்சொரூப சிலை இனந்தெரியாத விசமிகளால் உடைக்கப்பட்டுள்ளது. இது இந்து மக்களுக்கும் கிறிஸ்தவ மக்களுக்கும் நல்லுறவினை சீர்குலைப்பதற்காகவே என அகில இலங்கை இந்து மகா சபாவின் தலைவரும் இலங்கை மலையக இந்து குருமார் ஒன்றிய பொதுச் செயலாளருமான சிவஸ்ரீ வேலு சுரேஸ்வர சர்மா தெரிவித்தார்.

சிலை உடைப்பு தொடர்பாக நேற்று கொட்டகலையில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,..

மலையகத்தில் நீண்டகாலமாக கிறிஸ்தவ மக்களும் இந்து மக்களும் சமாதானமாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கிடையில் எப்போதும் சமய ரீதியான பேதங்கள் இருக்கவில்லை.இவ்வாறான ஒரு நிலையில் நாகசேனை பகுதியில் அமைந்துள்ள மாதா சொரூபமும் எல்ஜின் பகுதியில் உள்ள மாதா சொரூபமும் உடைக்கப்பட்டுள்ளது. இதனை எவர் செய்தாலும் தாராதரமின்றி அவர்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்தோடு இந்த சிலை உடைப்பு தொடர்பாக எவருக்காவது தெரிந்திருந்தால் அது தொடர்பாக பொலிஸாருக்கு அல்லது மலையக இந்து குருமார் ஒன்றியத்துக்கோ அறிவிக்குமாறு நாங்கள் பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கிறோம். இந்த சிலை உடைப்பு காரணமாக கிறிஸ்தவ மக்களுக்கு ஏற்பட்ட துயரத்தில் நாங்களும் பங்கெடுக்கிறோம் என அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

## மொரகஹகந்த, சேருவில, வில்கமுவ சுற்றுலாத் தலமாக அபிவிருத்தி

மாத்தளை சுழற்சி நிருபர்

இயற்கை எழில் கொஞ்சும் வனப் பிரதேசங்கள் மற்றும் நீர் நிலைகள் கொண்ட மாத்தளை மாவட்டத்தில் மொரகஹகந்த, சேருவில, வில்கமுவ போன்ற பிரதேசங்கள் சுற்றுலாத் தளமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான நாளக கோட்ட கொட தெரிவித்தார்.

மாத்தளை மாவட்ட அபிவிருத்தி குழுக் காரியாலயத்தில் இடம் பெற்ற சுற்றுலா அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின் போதே பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார். மகாவலி அதிகாரசபை, மத்திய மாகாண சுற்றுலா அதிகாரசபை, பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்ட இக் கலந்துரையாடலின் போது அவர் மேலும் கூறுகையில்,..

இத்தகைய சுற்றுலா மையங்களை மாத்தளை மாவட்டத்தில் அமைப்பதன் மூலம் இப் பிரதேசங்களில் காணப்படும் பலருக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும், அத்தோடு இப்பகுதியில் பொருளாதார அபிவிருத்தியும் ஏற்படும். இதன் முதற் கட்டமாக சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் நீர்நிலைகளில் பாதுகாப்பான படகு சவாரி செய்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



## பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கே தோட்ட காணிகள் சொந்தம்

-வடிவேல் சுரேஷ் எம்.பி

ஊவா சுழற்சி நிருபர்

தோட்ட பகுதிகளில் உள்ள காணிகளின் உரிமை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கே இதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

லுணுகல சோலன்ஸ் தோட்ட காணி விவகாரம் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே,

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் பேசிய அவர்,.

லுணுகல சோலன்ஸ் தோட்டத்தில் தன்னுடைய வேண்டுகோளின் கீழ், தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த காணியை வெளியாட்களுக்கு சட்டவிரோதமாக பிரித்து கொடுப்பதற்கு, லுணுகல பிரதேசசபை தலைவரால் எடுக்கப்பட்ட நடவடிக்கை தன்னால் தடுத்து நிறுத்தப்பட்டது என்றார்.



விசேடமாக பதுளை மாவட்டத்திலுள்ள பெருந்தோட்ட காணிகளை வெளியாட்களுக்கு சட்டவிரோதமான முறையில் பிரித்து கொடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

எனவே, மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் மலையகப் பெருந்தோட்ட காணிகளை சட்டவிரோதமான முறையில் வெளியாட்கள் அபகரித்துக் கொள்வதற்கு எந்த சந்தர்ப்பத்திலும் இடமளிக்க மாட்டேன்.

இத்தகைய காணி அபகரிப்பு செயற்பாடுகளினால் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், தங்களுடைய தொழிலை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே இவ்வாறான பிரச்சினைகளுக்கு பெருந்தோட்டத் தொழிலாளர்கள் முகம்கொடுக்க நேரிட்டால் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

NSB

தேசிய சேமிப்பு வங்கி

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கேள்வி இல: NSB/PT/ITE/2021/32

தேசிய சேமிப்பு வங்கிக்கு மைக்ரோசொப்ட் உற்பத்திகளுக்கான மென்பொருள் உரிமத்தை வழங்குதல், நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.

அதிகமாகக் கிடைக்கக்கூடிய தொகுதிகள் மற்றும் பிரதிகளுடன் மைக்ரோ சொப்ட் உற்பத்திகளுக்கான மென்பொருள் உரிமத்தை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதன்மை உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் (Microsoft Fast Track Ready Partner) அல்லது அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| பெறுகையின் விளக்கம் | மைக்ரோ சொப்ட் உற்பத்திகளுக்கான மென்பொருள் உரிமம் (**Software Licenses for Microsoft Products)** |
| பெறுகை முறை | தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் (NCB) |
| தேவைப்படுத்தப்படும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் | ரூபா 19,300.00 |
| சமர்ப்பிக்கப்பட தேவைப்படும் விலைமனுப் பெறுமதி | ரூபா 950,000.00 |
| விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம் | 2021-12-21ஆம் திகதி பி.ப. 3.00 மணி |
| கேள்வி முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | 2021-12-22ஆம் திகதி மு.ப. 10.00 மணி |

1. எந்தவொரு கேள்விதாரர் சார்பாகவும் பிரதிநிதியொருவர் அல்லது உப பிரதிநிதியொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்படும் எந்தவொரு நபரும் கேள்விக்காக விண்ணப்பிப்பதற்கு முன், ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கு முன் தம்மை பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும்.
2. 2021-11-29ஆம் திகதியிலிருந்து 2021-12-21ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-03, காலி வீதி, 255ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல்கள் பிரிவு, வழங்கல்கள் முகாமையாளரிடமிருந்து எழுத்துருவிலான கோரிக்கையொன்றின் பேரில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறான தொகைக்கானதும், தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக்கொள்ளும் தன்மையிலுள்ளதும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து ஆகக் குறைந்த காலப்பகுதியான 120 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான வங்கி உத்தரவாதத்துடன்/விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் உரிய திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு அவைகளை மூடியதும் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன், மு.ப. 10.00 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதுடன், எவ்வித காரணங்களையும் முன்வைக்காமல் பாகமொன்றை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையை தேசிய சேமிப்பு வங்கி கொண்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை தேசிய சேமிப்பு வங்கியின் (வழங்கல்) சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டு வர்த்தக பெறுகைக்குழு – மேல் மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல. 255, காலி வீதி,**
**கொழும்பு-03.**



The easiest & convenient way to send your
Marriage Proposal Ads,
classified@lakehouse.lk
Sunday Observer Marriage Proposals
Decades of Trusted Service
for 15 Words - Rs. 560/- For each additional word Rs. 23/-
The convenient way to make your payment :- BOC - Acc.No. 000000377 LAKE HOUSE BRANCH
Green light for Online Transfer
For Inquiries - Piyumi - 011 2 429 383 | Ramani - 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343


## திகதி 26.11.2021 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

### மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4598
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,795,990.00
ஆங்கில எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 4 4 0 2 3 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,467,708.00

### கொவிசெத (Govisetha)
சீட்டிழுப்பு இலக்கம் : 2893
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,155,880.00
ஆங்கில எழுத்து: P
வெற்றி இலக்கங்கள்: 06 07 17 33
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 73,257,043.20

### Mega Power மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 946
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,877,120.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 155,537,207.60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: Y
சுப்பர் இலக்கம்: 10
வெற்றி இலக்கங்கள்: 09 17 52 66

### தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 628
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,719,220.00
ஆங்கில எழுத்து: I
வெற்றி இலக்கங்கள்: 40 44 53 72
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 85,415,037.60

### சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் :1638
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,203,920.00
சுப்பர் இலக்கம்: 03
வெற்றி இலக்கங்கள்: 13 16 18 41
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,058,655.20

26.11.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 581,216
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரு. 23,752,130.00
ரு. 2,000,000.00 பரிசு 01 ரு. 1,000,000.00 பரிசு 01
ரு. 100,000.00 பரிசு 22

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## திகதி 27.11.2021 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

### மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4599
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,250,420.00
ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கங்கள்: 0 1 5 4 0 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,125,678.00

### கொவிசெத (Govisetha)
சீட்டிழுப்பு இலக்கம் : 2894
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,636,400.00
ஆங்கில எழுத்து: D
வெற்றி இலக்கங்கள்: 21 43 51 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 73,662,344.80

### Mega Power மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 947
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,718,360.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 155,800,473.20
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: M
சுப்பர் இலக்கம்: 26
வெற்றி இலக்கங்கள்: 07 39 52 61

### தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 629
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,391,080.00
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 25 32 62 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 85,446,390.00

### ஜாதிக சம்பத (JATHIKA SAMPATHA)
சீட்டிழுப்பு இலக்கம் :1172
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,843,980.00
வெற்றி இலக்கினம்: மீனம்
வெற்றி இலக்கங்கள்: 1 4 4 6 8 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,579,712.00
இப்பொழுது ஜாதிக சம்பத புதன் மற்றும் சனி கிழமைகளில் மாத்திரமின்றி திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளிலும் உங்களுக்கு அதிர்ஷ்டத்தை கொண்டு வருகின்றது.

27.11.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 530,074
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரு. 22,840,240.00
ரு. 2,000,000.00 பரிசுகள 01 ரு. 1,000,000.00 பரிசுகள 02
ரு. 100,000.00 பரிசுகள 16

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


65 எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
1956 இல் இருந்து
சௌபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

# 30 செப்டம்பர் 2021 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான முக்கிய நிதியியல் தரவுகள்
# எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பீ.எல்.சீ

**செம்டம்பர் 30, முடிவடைந்த காலப்பகுதி க்கான முக்கிய நிதியில் தரவுகள் (கணக்காய்வு செய்யப்பட்டது)**

| ரூபா மில்லியனில் | நடைமுறைக் காலம்மூ 01/04/2020 முதல் 30/09/2021 | முன்னைய காலம 01/04/2019 முதல் 30/09/2020 |
|---|---|---|
| வட்டி வருமானம் | 3,442 | 3,425 |
| வட்டிச் செலவு | (1,191) | (1,562) |
| **தேறிய வட்டி வருமானம்** | **2,251** | **1,863** |
| வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகளிலிருந்தான இலாபம் / (நட்டம்) | (9) | (56) |
| ஏனைய வருமானம் | 171 | 186 |
| தொழிற்பாட்டு செலவினங்கள் (பெறுமதி இழப்பு நீங்கலாக) | (1,315) | (1,034) |
| பெறுமதி இழப்பு | (371) | (486) |
| **வரிக்குமுன்னரான இலாபம் / (நட்டம்)** | **727** | **473** |
| வரிகள் | (376) | (302) |
| **வரிக்குப் பின்னரான இலாபம் / (நட்டம்)** | **351** | **171** |

**30 செம்டம்பர உள்ளவாறு முக்கிய நிதியியல் தரவுகள் (கணக்காய்வு செய்யப்பட்டது)**

| **ரூபா மில்லியனில்** | 30, செப்டம்பர் 2021 வரை | 30, செப்டம்பர் 2020 வரை |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 1,213 | 692 |
| அரச பிணையங்கள் | 1,177 | 1,826 |
| | - | - |
| குத்தகை மற்றும் கடன (தொடர்பான தரப்பினரிடமிருந்து வரவேண்டியவை நீங்கலாக) | 31,206 | 27,141 |
| பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகள் | 254 | 197 |
| முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் மனைச் சொத்துக்கள் | 596 | 570 |
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் | 2,355 | 1,640 |
| ஏனைய சொத்துக்கள் | 2,050 | 2,830 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **38,851** | **34,896** |
| **பொறுப்புக்கள்** | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | 16,822 | 15,349 |
| தொடர்பான தரப்பினருக்கு செலுத்தவேண்டியவை | 42 | 44 |
| வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்புக்கள் | 13,901 | 12,856 |
| ஏனைய கடன்பாடுகள் | 2,107 | 1,803 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **32,872** | **30,052** |
| **பங்குரிமை மூலதனம்** | | |
| கூறப்பட்ட மூலதனம் | 614 | 614 |
| நியதி ஒதுக்கு நிதியம் | 904 | 876 |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் | 2,437 | 1,949 |
| ஏனைய ஒதுக்குகள் | 2,024 | 1,405 |
| **மொத்த பங்குரிமை மூலதனம்** | **5,979** | **4,844** |
| **மொத்த பொறுப்புக்கள் மற்றும் பங்குரிமை மூலதனங்கள்** | **38,851** | **34,896** |
| **பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமத (ரூ)** | **177** | **144** |

**தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள்**

| விடயம் | 30.09.2021 இல் வரை | | 30.09.2020 இல் வரை | |
|---|---|---|---|---|
| **ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமை (%)** | உண்மை | தேவையானது | உண்மை | தேவையானது |
| அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம் | 9.95% | 7.00% | 9.84% | 6.50% |
| மொத்த மூலதன போதுமை விகிதம் | 14.95% | 11.00% | 12.70% | 10.50% |
| வைப்பு பொறுப்புக்களுக்கான மூலதன நிதிய விகிதம | 36.40% | 10.00% | 30.77% | 10.00% |
| **கடன் சொத்துப்பட்டியலின் தரம் (%)** | | | | |
| மொத்தச் செயற்படாக் கடன்களின் விகிதம் | 7.12% | | 9.60% | |
| தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | 1.42% | | 3.18% | |
| மைய மூலதன விகிதத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | 12.68% | | 26.90% | |
| ஒதுக்கு பாதுகாப்பு விகிதம | 93.95% | | 78.10% | |
| **இலாபத்தன்மை (%)** | | | | |
| தேறிய வட்டி இலாபம் (வருடாந்த தேறிய வட்டி வருமானம் சராசரி வட்டி ஈட்டும் சொத்துகளின் சதவீதமாக) | 12.34% | | 10.82% | |
| சொத்துக்கள் மீதான வருவாய் (வரிக்கு முந்தைய வருடாந்த இலாபம்,சராசரி சொத்துக்களின் சதவீதமாக) | 3.13% | | 2.13% | |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் | 11.90% | | 7.22% | |
| வருமானத்திற்கான செலவு விகிதம் | 54.49% | | 51.79% | |
| **திரவத்தன்மை (%)** | | | | |
| தேவையான திரவச் சொத்துகளுக்கான கிடைக்கத்தக்க திரவச் சொத்து (குறைந்தபட்சம் 100%) | 167% | | 282% | |
| வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள் | 8.32% | | 13.96% | |
| **மெமோராண்டம் தகவல்** | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை மற்றும் ஏனைய மத்திய நிலையங்கள் | 92 | | 91 | |
| வெளிவாரி கொடுகடன் தரமிடல் (ICRA LANKA) | (SL)BBB- (Negative) | | (SL)BBB- (Negative) | |

உறுதிப்படுத்தல்:
கீழே கையொப்பமிட்டுள்ள (உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பெயர்) இன் பிரதான நிறைவேற்று அலுவலராக, நிதிக் கட்டுப்பாட்டாளராக மற்றும் இணங்குவிப்பு அலுவலராகவுள்ள நாங்கள் கூட்டாக பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றோம்.
(அ). மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.
(ஆ). இக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

றொமானி டி சில்வா
பிரதித் தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர்

குசல் ஜயவர்தன
நிர்வாக இயக்குனர் நிதி மற்றும் செயற்பாடுகள்

தமாரா ரத்னாயக
இணக்க உத்தியோகத்தர்

ISO 9001 REGISTERED
இலங்கை வங்கிகள் மற்றும் வங்கியல்லாத துறைகளின் தர முகாமைத்துவ செயன்முறையின் **ISO 9001:2015** சான்றிதழினால் மற்றும் வியாபார முகாமைத்துவ செயன்முறை தொடர்பான **ISO 22301:2012** சான்றிதழைச் சுவீகரித்துக் கொண்ட முதலாவது நிறுவனமாகும்.

**ICRA Lanka assigns issuer rating of [SL]BBB-**

தேதி: 29/11/2021

எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பீ.எல்.சி "எலாயன்ஸ் இல்லம்", 84 வோர்ட் பிளேஸ், கொழும்பு 7. தொலைபேசி : 0112 673 673, தொலைநகல் : 0112 697 205 மின்னஞ்சல் : info@alliancefinance.lk இணையத்தளம் : www.alliancefinance.lk

# விலைமனு அழைத்தல்

## இலங்கை தேசிய வைத்தியசாலை

சுகாதார அமைச்சு

## ஆய்வுகூட உபகரணங்களை வழங்கல்

01. 2021.12.29 மு.ப. 10.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிராந்தியப் பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| உருப்படி இலக்கம் | உருப்படி | குறியீட்டு இலக்கம் | உருப்படி எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | Fully Automated Urine Analyzer | SG-IV/2019/LAB/32 | 02 Nos. | 7,500.00 |
| 02 | 05 Part Haematology Analyzer | SG-IV/15/2021/02 | 01 No. | 2,500.00 |

02. இலங்கை வர்த்தக சந்தைக்கு உபகரணங்களை உற்பத்தி செய்து வழங்கும் உற்பத்தியாளர்களினால் நியமனம் பெற்ற அல்லது அதிகாரம் பெற்ற முகவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.

03. 2021.11.30 முதல் 2021.12.28 வரை மு.ப. 9.30 முதல் பி.ப. 2.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளரிடம் மேற்படி மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து இதற்கான விலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி இலக்கம்: 0112691111 நீடிப்பு 2722)

04. அனைத்து உருப்படிகளிற்குமான விலைமனு முன்னோடிக் கூட்டம் 2021.12.17 அன்று மு.ப. 11.00 இற்கு நடைபெறும்.

05. முத்திரையிடப்பட்ட அனைத்து விலைமனுக்களும் 2021.12.29 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அல்லது கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் முடியும். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும்.

06. மேலதிக விபரங்கள் தேவையெனின் இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதான கணக்காளரை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி இலக்கம்: 011-2694595)

**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை,**
**கொழும்பு 10**

**பொது அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(2)ஆம் பிரிவின் கீழும் 8ஆம் பிரிவின் பிரகாரமும் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்: **அர்பன் கிரீன் ஹவுசஸ் (பிரைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்: PV 00231229

பதிவு முகவரி: **இல. 67/4ஏ, பூர்வாராம மாவத்தை, கிருலப்பன, கொழும்பு 05**

கம்பனியின் புதிய பெயர்: **எக்வா இன்வெஸ்ட் மென்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**

**சபையின் கட்டளைப் பிரகாரம் Corporate Services (Private) Limted**

**செயலாளர்கள் - EKVA Investments (Private) Limited**

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

NLDB

# விலைமனு அழைத்தல்

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் பிரதான அலுவலகத்தில் பாதுகாப்புச் சேவைகளை நடைமுறைப்படுத்தல் – 2022

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் பிரதான அலுவலகத்திற்கு பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்காக தேசிய பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யப்பெற்றுள்ள பாதுகாப்புச் சேவை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன இதற்காகப் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் பின்வரும் முகவரிக்கு நேரில் சமுகமளித்து விலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

- தேசிய பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யப் பெற்றுள்ள பாதுகாப்புச் வேைகளை வழங்கும் நிறுவனமொன்றாக இருத்தல் வேண்டும்.
- தேசிய பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யப் பட்டதன் பின்னர் குறைந்த பட்சம் 10 வருட காலம் பாதுகாப்புச் சேவை வழங்களில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

மீளளிக்கப்படும் ரூபா 10,000/- இற்கான பிணை வைப்பு ஒன்று மற்றும் மீளளிக்கப்படாத ரூபா 500,00 இற்கான கட்டணமொன்று பிரதான அலுவலக முகாமையாளர் (நிதி) இடம் செலுத்தி 2021 நவம்பர் 29 முதல் 2021 டிசம்பர் 15 அன்று நன்பகல் 12.00 வரை மாத்திரம் விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்காக எழுத்துருவ விண்ணப்பக் கடிதமொன்று தேசிய பாதுகாப்பு அமைச்சின் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் நிருவாகம்) இடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2021 டிசம்பர் 15ஆம் திகதி பி.ப. 1.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கொழும்பு 05, நாரஹேன்பிட்ட நாவல வீதி. இல. 40 இலுள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் பொது முகாமையாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது அதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டுமென்பதுடன் அன்றைய தினம் பி.ப. 1.15 இற்கு விலைமனுத் திறக்கப்படும்

**பொது முகாமையாளர்,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,**
**இல. 40, நாவல வீதி,**
**நாரஹேன்பிட்ட, கொழும்பு -05.**
**தொலைபேசி இல: 011 2501701/2**

நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

# கேள்விகளுக்கான அழைப்பு

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளர் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழு (MPC) தலைவர் கோருகின்றார்.

**1ஆம் அட்டவணை**

| கேள்வி இல. | செயற்றிட்டத்தின் பெயர் | நிர்மாணத்திற்கான மதிப்பீட்டுக் கிரயம் VAT வரி இன்றி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணை முறித் தொகை (ரூபா) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | CIDA பதிவுத் தரத் தகுதி | கேள்விப் பிணை முறி செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | அக்குரஸ்ஸையில் உத்தேச பஸ் நிலைய நிர்மாணம் | 398,900,000.00 | 52,000.00 | 3,989,000.00 | 450 | C2 அல்லது அதற்கு மேல் கட்டிடங்கள் | 2022 மே 06ஆம் திகதி வரை |
| 2. | கராப்பிட்டியவில் கலப்பு அபிவிருத்தி செயற்றிட்டம் மற்றும் உத்தேச பஸ் முனையத்தின் நிர்மாணம் (படிநிலை-1 உப கட்டமைப்புகள்) | 86,300,000.00 | 18,700.00 | 863,000.00 | 270 | C4 அல்லது அதற்கு மேல் கட்டிடங்கள் | 2022 ஏப்ரல் 08ஆம் திகதி வரை |
| 3. | கண்டி ஸ்ரீ தலதா மாளிகையிலுள்ள மகமலுவ அபிவிருத்தித் திட்டம் - படிநிலை II | 17,583,875.00 | 4,500.00 | 180,000.00 | 120 | C6 அல்லது அதற்கு மேல் கட்டிடங்கள் | 2022 ஏப்ரல் 08ஆம் திகதி வரை |

1. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் செயற்படுத்தப்படும்.
2. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பத்தரமுல்லை, சுஹுருபாய, 17ஆம் மாடி, நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் பணிப்பாளர் (நகர அபிவிருத்தி) அவர்களிடம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பணிப்பாளர் (நகர அபிவிருத்தி) அலுவலகத்தில் வேலை நாட்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். தொலைபேசி: 0112869535.
4. மேற்படி 1ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணங்களை 2021 நவம்பர் 30ஆம் திகதி முதல் 2021 டிசம்பர் 14ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதிப் பிரிவு சிறாப்பருக்குச் செலுத்தியதன் பின் பத்தரமுல்லை, சுஹுருபாய, 17ஆம் மாடி, நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் பிரதான கணக்காளர் (செயற்றிட்டங்கள் மற்றும் பெறுகைகள்) அவர்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் வளமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
5. சகல கேள்விகளுடனும், மேலே 1ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணை முறியாக கேள்வி ஆவணங்களின் தரப்பட்டுள்ள விபரக்குறிப்புகளின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதுமான வங்கி உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பிணை முறியின் பெறுமதி 1ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள பெறுமதிக்கானதும், நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
6 கேள்விகள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக 2021 டிசம்பர் 15ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் செயலாளர், நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு, 17ஆம் மாடி, சுஹுருபாய, சுபுத்திபுர வீதி, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும். கேள்வியில் கலந்து கொள்வதற்கு கேள்விதாரர்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. பத்தரமுல்லை, சுஹுருபாய, சுபுத்திபுர வீதி, 17ஆம் மாடி, நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் கேட்போர் கூடத்தில் 2021-12-07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும். சகல கேள்விதாரர்களும் இதில் கலந்துகொள்ளுமாறு திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.
8. கேள்விதாரர்களின் முன்னைய செயற்றிறன்கள் மற்றும் பணப்புழக்க நிலை (அமைச்சு மற்றும் ஏனைய அரச அமைப்புகள்) கேள்விதாரர்களைத் தெரிவு செய்கையில் கண்டிப்பாக மதிப்பீடு செய்யப்படும். மோசமான செயற்றிறனுடைய கேள்விதாரர்களுக்கு எந்தவொரு கேள்வியையும் வழங்குவதற்கு கவனத்திற் கொள்ளப்பட மாட்டார்கள்.
9. கேள்விகளைத் தயாரித்தல் சம்பந்தமான எந்தவொரு செலவுகளுக்கும் அமைச்சு பொறுப்புகூற மாட்டாது. கிடைக்கப்பெற்றுள்ள கேள்விகளில் பொருத்தமான கேள்வியை ஏற்றுக்கொள்ளவோ அல்லது எல்லாக் கேள்விகளையும் நிராகரிக்கும் உரிமையை அமைச்சுப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது. அமைச்சுப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
10. தற்போதைய கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக இயைபுடைய கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் முன் உங்கள் வசதிக்காக 0112-869536 /0114-329822 தொலைபேசி இலக்கங்கள் மற்றும் 011-2861810 தொலைநகல் இலக்கத்தின் ஊடாக நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளரைத் தொடர்பு கொள்ளலாம் என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும்**
**சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு,**
**17ஆம் மாடி, சுஹுருபாய,**
**பத்தரமுல்ல.**

# பெறுகை அறிவித்தல்

அபேக்ஷா வைத்தியசாலை – மஹரகம இலங்கை

## 2022ஆம் வருடத்திற்கான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தற்கான அழைப்பு

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு இலங்கை நிர்மாணம் மற்றும் பயிற்சியளிக்கும் நிறுவனத்தில் பதிவைப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2021-12-14ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளர் அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

மேற்படி முகவரியிலுள்ள நிறுவனப் பிரிவில் 2021-12-13ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தினுள் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு கேள்விதாரர் தமது தகைமைகளை நிரூபிக்கக்கூடிய சாட்சிகள் மற்றும் கேள்விக் கட்டணத்தைச் செலுத்தியமைக்காக அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| தொ. இல. | விடயம் | தகுதி | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|
| 01 | 2022ஆம் வருடத்தில் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்தல் | C 09 அல்லது C 08 EM 05 அல்லது அதற்கு மேல், SP 05 அல்லது அதற்கு மேல் | ரூபா 2,000.00 |

மேலதிக விபரங்களை தயவு செய்து பணிப்பாளர், அபேக்ஷா வைத்தியசாலை, மஹரகம எனும் முகவரியில் விசாரித்தறியலாம். தொலைபேசி இல. 011-2840233. எவ்வித அறவீடுகளும் இன்றி கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தவிசாளர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**அபேக்ஷா வைத்தியசாலை,**
**மஹரகம.**

# கேள்வி அழைப்பு

## விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு சொந்தமான பிரதேச அலுவலகத்தில் குறித்த கீழ்க்காணும் வழங்கல்களுக்கு உள்ளூர் கேள்வி தாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | | E |
|---|---|---|---|---|---|---|
| தொடர் இல. | வேலை விபரம் | ஒப்பந்த இல. | வைப்புச் செய்ய வேண்டிய கேள்விப் பிணை மற்றும் கேள்வி செல்லுபடியாகும் காலம் | | | கேள்வி ஆவணக் கட்டணம் |
| | | | காசாக எனில் | வங்கிப் பிணை மூலம் எனில் | பிணை செல்லுபடியாக வேண்டிய காலம் | |
| 01 | டீசல் வலுவில் செயற்படும் நீர்ப் பம்பிகள் 04ஐ வழங்கி பொருத்துதல் | SPD/2/5/4/ 71(2021) | 115,700/- | 231,400/- | 2022.04.03 | ரூ. 8,000.00 |
| 02 | தூய நீர் வழங்கல் அமைப்பை உருவாக்குவதற்கு தேவையான துணைப்பாகங்களை கொள்வனவு செய்தல் | SPD/2/5/5/4/63 (2021) | 16700/- | 33,400/- | 2022.03.21 | ரூ. 2,000.00 |

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களால் ஒவ்வொரு விடயத்துடனும் சம்பந்தப்பட்ட பெற்றுக் கொண்ட கேள்விப் படிவங்களை பாவித்து கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன் விவசாயத் திணைக்களத்தின் காசாளரிடம் மீளளிக்கப்படாத மேற்படி E நிரலில் குறிப்பிடப்படும் கட்டணங்களை செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தில் நிர்வாக அதிகாரியிடம் சமர்ப்பித்து 2021.11.30 முதல் 2021.12.17ம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
மேற்படி இல. 01 இன் கீழ் கேள்விகளை சமர்ப்பிக்கும் கேள்வி தாரர்கள் மட்டும் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின்கீழான பிரிவாளரின் கீழ் பதிவு செய்ய பட்டிருப்பதுடன் அதனை பதிவுச் சான்றிதழின் உறுதி செய்த பிரதியொன்றை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
கேள்வி அறிவுருத்தல்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பொறியிடப்பட்ட சகல கேள்விகளும் தலைவர், பிரதேச பெறுகைக் குழு, விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம், விவசாயத் திணைக்களம் பேராதனை’ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் மேற்படி முகவரியில் அமைந்துள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். சகல கேள்விதாரர்களும் மேற்படி அட்டவணையில் D இன் கீழ் குறிப்பிடப்படுமாறு பிணை தொகையை வைப்புச் செய்தல் வேண்டும். அத்துடன் வங்கிப் பிணையின் மூலம் பிணை வைப்புச் செய்வதாயின் அதனை இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.
கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் 2021.12.20 முற்பகல் 10.30 இற்கு முடிவடைவதுடன் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்வி சமர்ப்பிப்போர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்ட பிரநிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம்,**
**விவசாயத் திணைக்களம்,**
**பேராதனை.**

2021.11.29

**081-2388122**

# கடந்த ஆட்சியில் அமைச்சர்களால் பாரியளவு காணி மோசடி; அவற்றை சுவீகரிக்கும் நடவடிக்கை ஆரம்பம்



கடந்த ஆட்சியில் அமைச்சர்களினால் பாரியளவு அரச காணிகள் மோசடி செய்யப்பட்டுள்ளன. அவற்றை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் எஸ்.எம்.சந்ரசேன தெரிவித்தார்.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, காணி அமைச்சு உள்ளிட்ட 3 ராஜாங்க அமைச்சுக்களின் வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் தெரிவித்த அவர்,

நில அளவை அதிகாரிகளின் குறைபாடு உள்ளன. அதனைத் தீர்ப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காணி சீர்திருத்த ஆணைக்குழு தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. நீர்கொழும்புப் பகுதி அமைச்சர் ஒருவர் அநுராதபுரம் பகுதி காட்டுப் பிரதேசத்திலுள்ள 50 ஏக்கரை தென்னந்தோட்டமாக மாற்றியுள்ளார். மற்றொரு அமைச்சர் ஹந்தானையில் பெருமளவு காணியை பெற்றுள்ளார். பாரியளவு காணி மோசடி செய்யப்பட்டுள்ளன. அவற்றை சுவீகரித்து வருகிறோம். அதனைப் பெற ஆணைக்குழுவும் எம்.பிகளும் முயன்று வருகின்றனர். வரி அதிகம் காரணமாக காணி பதிவு தடைப்பட்டது. வரியை குறைத்து வருகிறோம்.

அமைச்சுக்களுக்கு இலக்குத் தந்துள்ளார். அதற்கமைய செயற்படுகிறோம். காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் 600 தொன் சேதனப் பசளை உற்பத்தி செய்து வருகிறோம்.

### அமைச்சர் ரமேஷ் பத்திரண

எரிபொருளின் விலையைப் போன்றே உலக சந்தையில் இரசாயன உரத்துக்கான விலையும் வெகுவாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

இக்காலங்களில் உரத்துக்கான கேள்வி அதிகரித்துக் காணப்படுவதால் கேள்வி குறைவடையும் நிலையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் உரத்தின் விலை குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டில் தற்போது பெருமளவு சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. எதிர்வரும் ஜனவரி முதல் மானிய விலையில் அவற்றைப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். சேதனப் பசளையுடன் தேயிலை உற்பத்தி போன்ற துறைகளுக்கு உலக சந்தையின் விலைகளுக்கிணங்க இரசாயன உரத்தை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை பயிர்ச்செய்கைக்கான நீரைப் பெற்றுக் கொடுப்பதில் முக்கிய கவனம் செலுத்தப்படும். அதற்காக இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் தேயிலை உற்பத்தி குறைந்து காணப்பட்டாலும் இந்த வருடத்தில் 260 மில்லியன் கிலோ தேயிலையை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தில் மேலும் 300 மில்லியன் கிலோவால் அதனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கிணங்க தேயிலை உற்பத்தித் துறை தொடர்பில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. பெருமளவு அந்நிய செலாவணியை பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகளை அதன் மூலம் மேற்கொள்ளப்படும்.

### எம். வேலுகுமார் (ஐக்கிய மக்கள் சக்தி எம் பி.)

தோட்டத் தொழிலாளர்களுக்கும் தோட்ட நிர்வாகத்தினருக்குமிடையில் நிலவும் முரண்பாடுகளுக்கு தீர்வு காண அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை நல்லாட்சி அரசாங்க காலத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஏழு பேர்ச்சஸ் காணியில் அவர்கள் வீடுகளை கட்டிக் கொள்வதற்கான அனுமதியை அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அத்துடன் அந்த காணிகளுக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கவும் வேண்டும். அதேபோன்று மேலும் ஆயிரத்தி 14 குடும்பங்களுக்குக் காணி வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நாம் எடுத்திருந்தோம். அந்த மக்களுக்கு அந்த காணிகளை வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பெருந்தோட்டத்துறை தொடர்பில் கடந்த காலங்களில் பின்பற்றப்பட்ட தவறான தீர்மானங்களும் நாட்டில் டொலர் பிரச்சினைக்கு ஒரு காரணமாகும். 1970, 1980 காலப்பகுதிகளில் பெருந்தோட்டத் துறை மூலம் நாட்டுக்குப் பெருமளவு டொலர்கள் கிடைத்துள்ளன. ஆனால் 1980 காப்பகுதிக்கு பின்னர் பெருந்தோட்டத்துறை முன்னேற்றம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தவறான கொள்கை காரணமாக அத்துறையைக் கட்டியெழுப்ப முடியாமல் போனது. பெருந்தோட்டத்துறையில் தேயிலை உற்பத்தியே பிரதான இடத்தை வகிக்கின்றது. அதற்கு அடுத்தபடியாக இறப்பர் உற்பத்தியாகும். அந்தத் துறைகளை முன்னேற்றுவதற்கு அரசாங்கங்கள் முறையான திட்டங்களை மேற்கொள்ளவில்லை.

பெருந்தோட்டத்துறையில் சுமார் ஒரு இலட்சம் ஹெக்டயாரில் தேயிலை உற்பத்தி செய்யப்படாமல் உள்ளது. அதேநேரம் சிறுதோட்டங்களில் 80ஆயிரம் ஹெக்டயாரில் தேயிலை உற்பத்தி செய்யப்படுவதால் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடையாமல் இருந்து வருகின்றது. அதனால் பெருந்தோட்டத்துறையை கட்டியெழுப்புவதானால் உற்பத்தி செய்யப்படாமல் இருக்கும் பெருந்தோட்டக் காணிகளை சிறுதோட்ட திட்டத்துக்கமைய அந்தந்த தோட்ட மக்களுக்கு வழங்கவேண்டும்.

இது புதிய வேலைத்திட்டமாகும். இந்தத் திட்டத்தை எந்தவொரு அமைச்சரும் பின்பற்றவில்லை.

### காதர் மஸ்தான் எம்.பி (பொ.ஜ.பெ)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கை பலப்படுத்தும் வகையில் இந்த பட்ஜட் தயாரிக்கப்பட்டுள்ளது. கிராமிய அபிவிருத்திக்கான விடிவெள்ளியாக இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இறக்குமதி மீது தங்கியிருக்கும் பொருளாதாரத்திற்குப் பதிலாக விவசாய உற்பத்தி, பண்ணை உற்பத்தி, விவசாயக் கைத்தொழில்களின் மூலம் நாட்டை முன்னேற்றுவதே இதன் நோக்கமாக உள்ளது. நிலவளத்தையும் நீர்வளத்தையும் கொண்டுள்ள எமது நாடு பல உற்பத்தித் துறைகளில் தன்னிறைவு காண வேண்டும். இடம்பெயர்ந்த மக்களுக்குக் காணி உறுதி வழங்கும் திட்டம் துரிதப்படுத்தப்பட வேண்டும். காணி அமைச்சர் காணி அனுமதிப்பத்திரங்களை வழங்க வேண்டும். ஆளணி பற்றாக்குறை காரணமாக எமது பகுதிகளில் காலதாமதம் உள்ளது.

தேசிய விவசாய உற்பத்திகளை அதிகரிக்கும் வகையில் முசலி, மன்னார், முல்லைத்தீவு போன்ற பகுதிகளை உள்ளடக்கி புதிய விவசாய உற்பத்தி வலயம் உருவாக்க வேண்டும். இதன் ஊடாக உள்நாட்டு உற்பத்தியில் 20 வீத பங்களிப்பை செய்ய முடியும்.

வடமாகாணத்தில் காணி இல்லாத இளைஞர்களுக்கு காணி வழங்கி விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும். இன விகிதாசாரம் பாதிக்காத வகையில் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும். காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் மக்களின் தேவைகளை அடையாளம் கண்டு புதிதாக காணிகளை வழங்க வேண்டும். இதனைத் துரிதப்படுத்த வேண்டும். அந்தந்தப் பகுதி இளைஞர்களுக்கு அவற்றை வழங்க வேண்டும்.

காணி சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகமொன்று வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் மீள்குடியேறியவர்களுக்கு உறுதி வழங்கப்படவில்லை. அதனையும் விரைவுபடுத்த வேண்டும். எமது பகுதி இளைஞர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த உதவ வேண்டும்.

### வீரசுமன வீரசிங்க எம்.பி (பொ.ஜ.பெ)

விஞ்ஞான பூர்வமாக அமைச்சுகள் பகிரப்பட்டுள்ளன. பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பதிரன சிறப்பாக செயற்பட்டு வருகிறார். தெங்கு, தேயிலை, றப்பர் துறைகள் முன்னேற்றம் கண்டுள்ளன. கொவிட்டினால் சகல துறைகளும் பின்னடைந்தன. இந்த நிலையிலும் தேயிலை உற்பத்தி முன்னேற்றம் கண்டது. எமது நாட்டில் ஒன்லைனில் விற்பனை மேற்கொள்ளப்பட்டது. கடந்த காலத்தில் மீள்பயிரிட நிவாரணம் வழங்குவதாக அறிவிக்கப்பட்டாலும் வழங்கப்படவில்லை. பெறுமதி சேர் தேயிலை ஏற்றுமதி குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு தேயிலை மரம்கூட நடாத டுபாய் தேயிலை விற்பனையால் பெரும் இலாபம் பெறுகின்றது.

### எம். ஹலீம் எம்.பி (ஐ.ம.ச)

காணி உறுதி முறையாக வழங்காதால் அரச காணி பெற்ற மக்கள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். எமது பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு சட்டபூர்வ காணி உறுதி வழங்கப்படவில்லை. இதனால் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். சில பகுதிகளுக்கு எமது ஆட்சியில் காணி உறுதி வழங்கப்பட்டன.

### ரமேஸ்வரன் எம்.பி (பொ.ஜ.பெ)

ஜனாதிபதி பெருந்தோட்ட மக்களுக்கு 1000 ரூபா சம்பளம் வழங்குவதாக அளித்த வாக்குறுதிபடி வழங்க நடவடிக்கை எடுத்தார். ஆனால் முதலாளிமார் அதற்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளனர். பெருந்தோட்டக் கம்பனிகள் மரங்களை வெட்டி வருமானம் பெருகின்றன. பெருந்தோட்ட மக்கள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். அவர்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் அளிக்கப்படுகின்றன. ஆனால் கம்பனிகள் வருமானம் ஈட்டுவதில் தான் குறியாக உள்ளன. பல தரிசு நிலங்கள் உள்ளன. அங்கு சுயதொழில்களை மேற்கொள்ள வேண்டும். கம்பனிகள் இவற்றை உப குத்தகைக்கு வழங்குவதை நிறுத்த வேண்டும். அந்தத் தோட்டங்களில் உள்ளவர்களுக்கே அவற்றை குத்தகைக்கு வழங்கி சுயதொழிலுக்கு உதவ வேண்டும். அவர்களுக்கு எதிர்காலத்தில் சிறந்த செயற்திட்டம் அமைக்கப்பட வேண்டும்.

### செல்வம் அடைக்கலநாதன் எம்.பி (த.தே.கூ)

இந்திய தூதுவரைக் கொண்ட குழுவொன்று தமிழ்நாடு சென்று அங்குள்ள இலங்கையர்களைச் சந்தித்துள்ளது. இலங்கை மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் இராமேஸ்வர மீனவர்களை சந்தித்துள்ளது. முதலமைச்சர் ஸ்டாலினையும் சந்தித்துள்ளது. இன்றுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் நேரில் சென்று செயலாற்றி வருகிறார். உங்கள் முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு மீனவர்களின் பிரச்சினையும் அங்கு வாழும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையும் தீர்க்கப்பட வேண்டும். இந்த முயற்சிக்கு வாழ்த்துத் தெரிவிக்கிறோம்.

மலையக மக்கள் தொடர்பில் அமைச்சர் ரமேஷ் பதிரன, கனக ஹேரத், அருந்திக பெர்னாண்டோ ஆகியோர் இனப்பாகுபாடின்றி செயற்படக்கூடியவர்கள்.

சிங்கள மக்கள், தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் இந்த நாட்டில் தேசிய இனங்களாக உள்ளன. பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனம் என பிரித்துப் பார்க்கக் கூடாது. அமைச்சர்கள் நடுநிலைமையானவர்கள் என்பதால் அவர்களின் பிச்சினைகளைத் தீர்க்க வேண்டும். மலையக இனம் பல்வேறு துறைகளில் வளர்ந்துள்ளது. ஆனால் அந்த மக்களின் காணிப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

### ராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ

தென்னைத் தோட்டங்களை துண்டாடுவது நிறுத்தப்பட்டுள்ளது. பனை அபிவிருத்திச் சபையை கொழும்பிற்கு மாற்றப்போவதாகவும் சிங்கள அதிகாரிகளை நியமிக்க உள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. அதனை நிராகரிக்கிறோம். பனை சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்தவும் பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி போன்ற தமிழ் மக்கள் வாழும் நாடுகளுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு வருகிறது. பனை மற்றும் கித்துல் உற்பத்தியூடாக அதிக செலாவணியைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளோம். தெங்கிற்கான நிவாரணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. தென்னங்கன்றுகள் 40 இலட்சம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### எஸ்.எம். எம்.முஷாரப் எம்.பி (ம.கா)

காணி உரிமை என்பது மக்களின் அடிப்படை உரிமையாகும். பல தசாப்தங்களாக இழந்த காணிகளை பெற்றுத் தருமாறு மக்கள் கோருகின்றனர்.

யுத்தத்தின் பின்னர் தமது காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளதாகவும் வன ஜீவராசிகள் திணைக்களத்தால் சுவீகரிக்கப்பட்டதாகவும் முறையிடுகின்றனர். இந்த உரிமையை பெற்றுக் கொடுப்பது பிரதானமானது. காணி உரிமையை பெற்றுக்கொடுக்க உள்ள வழி குறித்து ஆராய்ந்துள்ளேன். கிராமத்துடன் கலந்துரையாடல் செயற்திட்டத்தின் போது காணி உரித்தாளர்களுக்கான காணியை வழங்க ஜனாதிபதி வழிமொழிந்துள்ளார். காணி உரிமைக்கான அறிவிப்பை ஜனாதிபதி அறவித்துள்ள நிலையில் கிழக்கில் சமூக அநீதிகள் தொடர்பான நிபுணத்துவ குழுவொன்றை நியமித்துள்ளார். பல ஆண்டுகளாக காணி இழந்த மக்களின் காணி குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ஜனாதிபதிக்கும் கிழக்கு ஆளுநருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

ஒரு இலட்சம் இளைஞர்களுக்கு ஒரு இலட்சம் காணிகளை வழங்கும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காணி அற்ற அரச ஊழியர்களுக்கும் காணி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. ஏழைகளுக்கும் காணி வழங்க வேண்டும். சில இடங்களில் ஒருபக்கம் காணி பயிரிட அனுமதி வழங்கப்பட்டு மறுபக்கம் உள்ள காணியில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

### எம். உதயகுமார் எம்.பி (ஐ.ம.ச)

பெருந்தோட்டத்துறையை வினைத்திறனுடன் முன்னேற்றிச் செல்ல நடவடிக்கை எடுக்காவிட்டால் தேயிலைத்துறை அழிவுப் பாதைக்குச் செல்வதை யாராலும் தடுக்க முடியாது.

தோட்டத்தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பாகவும் கூட்டு ஒப்பந்தம் ஊடாக ஒருசில தொழிற்சங்கங்கள் மாத்திரம் கூடி முடிவெடுத்து வந்த நிலையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயம், சம்பள நிர்ணய சபைக்கு சென்றது. தற்போது ஆயிரம் ரூபா சம்பளம் வழங்குவதாக அறிவிக்கப்பட்டு வர்த்தமானி அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

என்றாலும் ஆயிரம் ரூபா தொழிலாளர்களுக்கு முழுமையாக கிடைப்பதில்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கவேண்டும் என்ற வர்த்தமானி அறிவிப்பையும் மீள பெறப்போவதாக தெரியவருகின்றது. இதன் உண்மைத் தன்மையை அரசாங்கம் சபைக்கு வெளிப்படுத்தவேண்டும்.

மௌன்ஜின் தோட்டத்தில் தேயிலை செடிகள் பிடுங்கப்பட்டு, மரங்கள் வெட்டப்படு மாற்றுத் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டு தேயிலை தோட்டங்கள் அழிக்கப்பட்டுகின்றன. பெருந்தோட்டங்களில் வாழும் தொழிலாளர்களுக்கு அவர்களுக்கென சிறிய காணித்துண்டில் வீடு கட்டிக் கொள்ள கம்பனிகள் இடமளிப்பதில்லை. மேலும் கடந்த அரசாங்க காலத்தில் பெருந்தோட்ட மக்களுக்கு 7 பேர்ச் காணி, காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் உரித்துரிமையாக வழங்கப்பட்டதை அதிகாமானவர்கள் அதனை மறுத்து வருகின்றனர். அவ்வாறு வழங்கப்பட்ட காணி உரித்துகளின் உண்மைத்தன்மை என்ன என்பதை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும்.

### வடிவேல் சுரேஷ் எம்.பி (ஐ.ம.ச)

22 தோட்டக் கம்பனிகளுக்கு பெருந்தோட்டங்கள் வழங்கப்பட்டன. அன்று எத்தனை ஏக்கர் வழங்கப்பட்டன. இன்று எத்தனை ஏக்கர்கள் உள்ளன? அரசாங்கம் வழங்கிய தோட்டங்கள் காடாக்கப்பட்டுள்ளன.

இதற்கு அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும். சரியான நிர்வாகம் இல்லாத நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் அதனை வெறுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

நுவரெலிய மாவட்டத்தில் உள்ள காணிகளில் தேயிலைத் தான் நிரந்தரப் பயிர் . வேறு மரம் நட முடியாது. மேற்பார்வைக்கு நியமிக்கப்பட்டவர்கள் கம்பனிகளுக்கு சார்பாக மாறியுள்ளனர்.

தற்பொழுது அரசுகள் சகல உட்கட்டமைப்புகளையும் செய்கின்றன. முன்பு பாடசாலைகள் ஆஸ்பத்திரிகள் கம்பனிகளால் நிர்வகிக்கப்பட்டன. சம்பளம் வழங்கப்பட்டன. சில கம்பனிகள் வேறு நபர்களுக்கு தோட்டங்களை குத்தகைக்கு வழங்குகின்றன. அவை சட்டவிரோதமானவை.

உலகில் எங்காவது ஜனாதிபதி முடிவு எடுத்து வர்த்தமானியில் அறிவித்த முடிவுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதா? முடிவு வழங்கப்பட்டு 24 மணிநேரத்தில் தொழில் அமைச்சருக்கு எதிராக கம்பனிகள் வழக்கு தொடர்ந்துள்ளன. பல தோட்டங்களில் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது.

## பட்ஜட் விவாதம்



சபை நிருபர்கள்
லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்
























# பெருந்தோட்ட தரிசு நிலங்களை மலையக மக்களுக்கு வழங்கி காணி உரிமையாளர்களாக்க வேண்டும்

- சபையில் மருதபாண்டி ராமேஸ்வரன் எம்பி தெரிவிப்பு

அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்க முற்பட்டாலும் பெருந்தோட்ட கம்பனிகள் மக்கள் மீது எந்த அக்கறையுமின்றி அவற்றை வழங்காமல் தமது வருமானத்தை மட்டுமே நோக்காகக் கொண்டு செயற்படுவதாக இ.தொ.கா. எம். பி. மருதபாண்டி ராமேஷ்வரன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்திலேயே மலையக தோட்டப் புறங்களில் பாரிய அபிவிருத்திகள் இடம் பெற்றுள்ளன என குறிப்பிட்ட அவர்,

தோட்டங்களில் உள்ள தரிசு நிலங்களைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கி அவர்களையும் காணி உரிமையாளர்ளாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு உள்ளிட்ட 4 அமைச்சுக்களின் வரவு செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே மருதபாண்டி ராமேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்:

கூட்டு ஒப்பந்தம் நடைமுறையில் இல்லாத காரணத்தினால் தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.அரசாங்கத்தினால் 1000 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டாலும் சில கம்பெனிகளில் அதனை முறையாக வழங்கும் அதேவேளை மேலும் சில கம்பெனிகள் அதை முறையாக வழங்காமல் தோட்டத் தொழிலாளர்களுக்கான சலுகைகளையும் வழங்குவதில்லை. கூட்டு ஒப்பந்தம் நடைமுறையில் இல்லாமையும் அதற்கு ஒரு காரணம்.

கடந்த காலங்களில் கூட்டு ஒப்பந்தம் அவசியமில்லை என ஒரு தரப்பினர் கூறி வந்தாலும் அதன் அவசியம் தற்போது உணரப்பட்டுள்ளது.

நாட்டு வருமானத்திற்கு தோட்டத் தொழிலாளர்கள் பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.கொரோனா சூழ்நிலையில் நாட்டின் ஏனைய துறைகள் வீழ்ச்சியுற்ற நிலையிலும் தோட்டத் தொழிலாளர்கள் தமது உயிரையும் பணயம் வைத்து உழைத்து நாட்டின் பொருளாதாரத்திற்கான பங்களிப்பை வழங்கியதை குறிப்பிட வேண்டும்.

தோட்டங்களில் காணப்படும் தரிசு நிலங்களை உப குத்தகைக்கு வழங்காமல் அவற்றைத் தோட்டங்களில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில்களுக்காக வழங்க வேண்டும். அப்போது தான் அவர்கள் மாற்று வருமானமொன்றையும் தேடிக்கொள்ள முடியும்.

கம்பெனிகள் தேயிலையை பெற்றுக் கொள்வதையும் தேயிலைத் தோட்டங்களில் மரங்களை வெட்டிக் கொள்வதிலுமே கருத்தாய் செயற்பட்டு வருகின்றனர். அவர்களுடைய வருமானத்தை மட்டுமே குறிக்கோளாக கொண்டு அவர்கள் செயற்படுகின்றார்களேயொழிய தோட்டத் தொழிலாளர்களின் நலனில் அவர்கள் எந்தவித அக்கறையும் காட்டுவதில்லை.

தோட்டத் தொழிலாளர்களின் தேவைகளை கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என நாம் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரிடம் கேட்டுக்கொள்கின்றோம் என்றும் மருதபாண்டி ராமேஸ்வரன் எம்பி மேலும் தெரிவித்தார்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 நவம்பர் 29
திங்கட்கிழமை

# மன்னாரில் பெய்து வரும் மழையால் மக்கள் இடம்பெயர்வு

## இதுவரை 12,673 பேர் வெள்ளத்தில் பாதிப்பு

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் பெய்துவரும் மழையின் காரணமாக மன்னார் பகுதியில் அதிகமான இடங்கள் பெரும் வெள்ளக்காடுகளாக தொடர்ந்து காட்சி அளிக்கிறது.

மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகள்,நகர் பிரதேச பிரிவிலுள்ள மக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பகுதியில் கடந்த 26ந் திகதி தொடக்கம் நேற்று வரை பெய்த கடும் மழையால் பல இடங்கள் வெள்ளக் காடுகளாக காட்சி அளிக்கிறது

இதனால் மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவில் 130 குடும்பங்களைச் சார்ந்த 473 நபர்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.பேசாலை மேற்கு, தலைமன்னார் ஸ்ரேசன், துள்ளுக் குடியிருப்பு மற்றும் சிறுத்தோப்பு ஆகிய கிராம பிரிவுகளிலுள்ள மக்களே இடம்பெயர்ந்து நான்கு இடை தங்கள் நிலையங்களில் இருந்து வருகின்றனர்.

அத்துடன் இக் காலப்பகுதியில் இதுவரை மன்னார் நகரப் பிரதேச பிரிவில் 3627 குடும்பங்களைச் சார்ந்த 12673 நபர்கள் வெள்ளப்பெருக்கால் பாதிப்பு அடைந்துள்ளனர் என மன்னார் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பல கிராமங்களிலும் வீடுகளிலும் பெருக்கெடுப்பால் பலர் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொண்டு நீரை வெளியேற்றுவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

### யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் மரணம்;

# பிரதமருக்கு அவசர மின்னஞ்சல்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

பிரதமரின் உத்தரவிற்கு அமைய வடக்கு மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபரின் ஆலோசனையின் பேரில் அமைக்கப்பட்ட, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவனின் மரணம் தொடர்பிலான விசாரணைக் குழுவில் குற்றவாளிகளின் உறவினர், நண்பர்கள் இடம்பெற்று இருப்பதனால் முக்கியமான தகவல்கள் பல மறைக்கப்பட்டுள்ளதாக அவரின் சகோதரன் பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை (28) அனுப்பியுள்ள அவசர மின்னஞ்சலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலே மூன்றாம் வருட மாணவனாக கல்வி கற்று வந்த மாதாகோவில் வீதி, துன்னாலை வடக்கைச் சேர்ந்த சிதம்பரநாதன் இளங்குன்றன் கடந்த 17.11.2020 அன்று அவர் வாடகைக்கு தங்கி இருந்து கல்வி கற்று வந்த வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கில் உள்ள வீட்டில் கொலை செய்யப்பட்டு தூக்கிடப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இதனை அப்போது கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்த வீரசிங்க என்பவர் தற்கொலை என கூறி எவ்வித விசாரணைகளையும் முன்னெடுக்கவில்லை.

இது தற்கொலை அல்ல கொலை என அவரின் சகோதரனால் ஜனாதிபதி,பிரதமர், பாதுகாப்பு செயலாளர், பொலிஸ் மாஅதிபர், இராணுவத் தளபதி ஆகியோருக்கு அறிவித்ததன் விளைவாக பிரதமர் மகிந்த ராஜபக்ச இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மாஅதிபருக்கு பணித்திருந்தார்.

பொலிஸ் மாஅதிபரின் பணிப்பிற்கு அமைய வடக்கு மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபரின் கீழ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதில் நாம் தெரிவித்த பல விடயங்கள் மறைக்கப்பட்டமை தற்போது தெரியவந்துள்ளது.இதற்கு காரணம் அவ் விசாரணைக் குழுவில் கொலையாளிகளின் உறவினர், நண்பர்கள் இருக்கின்றமை தற்போது தெரியவந்துள்ளது.

எனவே அவர்களை நீக்கி விசாரணைகளை முன்கொண்டு செல்ல உதவுமாறு அவரின் சகோதரன் பிரதமருக்கு அனுப்பியுள்ள அவசர மின்னஞ்சலில் தெரிவித்துள்ளார்.





நாடு முழுவதும் அறநெறிப் பாடசாலைகளுக்கான மாதிரி நூலகம் உருவாக்குதல் என்ற செயற்றிட்டத்தின் கீழ், முதற்கட்டமாக யாழ். மாவட்டத்தில், பன்னிரண்டு அறநெறிப் பாடசாலைகளுக்கு மாதிரி நூலகத்திற்கான நூல்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம், நல்லூர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் இடம்பெற்றது,நிகழ்வில்,அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாசிரியர் ஒருவரிடம்,பிரதமரின் இணைப்புச் செயலாளர் கீதநாத் காசிலிங்கம் நூற் தொகுதியினைக் கையளிப்பதையும், அருகில் பிரதமரின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர் சிவஸ்ரீ இராமச்சந்திரக்குருக்கள் பாபு சர்மா, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன்,தினகரன்,தினகரன் வாரமஞ்சரி மற்றும் வன்னவாணவில் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் ஆகியோர் நிற்பதைக் காணலாம்.அத்தோடு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு இலங்கை வானொலியில் இடம்பெற்று வரும் அறநெறிச் சாரம் நிகழ்விலே கேட்கப்படுகின்ற கேள்விகளுக்குச் சரியான விடை எழுதி அனுப்பியமையைப் பாராட்டுமுகமாக, நூற்பொதியினை வெற்றி பெற்ற மாணவியொருவருக்கு,சிவஸ்ரீ இராமச்சந்திரக்குருக்கள் பாபு சர்மா வழங்கி வைப்பதையும் படத்திற் காணலாம்.

# கொட்டும் மழைக்கு மத்தியில் தமிழ்ச் சங்கம் நடத்திய நாவலர் நினைவரங்கம்



யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுத்த நாவலர் நினைவரங்கம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் நாவலர் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை சூட்டினார். தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டிருந்தோர் மலரஞ்சலி செலுத்தினர். தமிழ்ச் சங்கப் பெருந் தலைவர் பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதியர் மங்கள விளக்கேற்றினார். விரிவுரையாளர் கு.பாலசண்முகன் கடவுள் வணக்கம் பாடினார் . தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் கருணாகரன் வரவேற்புரை ஆற்றினார்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தொடக்கவுரையையும் யாழ். மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் வாழ்த்துரையையும் வழங்கினர்.

# மன்னாரில் மேலும் 13 பேருக்கு கொரோனா

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னாரில் சனிக்கிழமை மேலும் 13 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து நவம்பர் மாதம் தொற்றாளர்களின் எண்ணிக்கை 505 ஆக உயர்ந்துள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிக்கை வெளியிட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் பரவலாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.மற்றும்அன்டிஜென்பரிசோதனைகளில் கடந்த சனிக்கிழமை 13 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் 6 பேருக்கும். பெரிய பண்டிவிரிச்சான் வைத்தியசாலையில் 3 நபர்களுக்கும். முருங்கன் மற்றும் வங்காலை வைத்தியசாலைகளில் தலா இருவருக்குமே இவ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது வரைக்கும் இவ் நவம்பர் மாதம் 27 ந் திகதி வரை 505 நபர்கள் கொவிட் 19 தொற்றாளர்களாக பதிவாகியுள்ளனர்.

# 5 கிராமங்களில் நானோ தொழில்நுட்பத்துடன் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**


யாழ் மாவட்டத்தில் ஐந்து கிராமங்களில் முதற்கட்டமாக நானோ தொழில்நுட்பத்துடன் கூடிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற மற்றும் பிராந்திய குடிநீர் விநியோக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 'செழிப்பான பார்வையில் அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர்' எனும் தொனிப்பொருளில் யாழ். மாவட்டத்தில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனின் தெரிவில் முதற்கட்டமாக ஐந்து கிராமங்களில் தலா 4 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் குறித்த சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் இடைக்குறிச்சி கிராமத்திலும்,கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அச்செழு கிராமத்திலும்,தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் அளவெட்டி தெற்கு மற்றும் வறுத்தலைவிளான் கிராமங்களிலும்,உடுவில் பிரதேச செயலர் பிரிவில் உடுவில் வடக்கு கிராமம் ஆகியவற்றில் பாதுகாப்பான குடிநீர் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.



பாராளுமன்ற உறுப்பினரும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் கொழும்பில் உள்ள தனது இல்லத்தில் சனிக்கிழமை மாவீரர் தின அஞ்சலி செலுத்திய போது,...
(யாழ்.விசேட நிருபர்)



வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் யாழ். தனது இல்லத்திற்கு முன்பாக தீபம் ஏற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகையில்....

# இரணைமடுகுளத்தின் 4 வான் கதவுகள் திறப்பு



**கிளிநொச்சி குறூப், முல்லைத்தீவு குறுப் நிருபர்கள்**

வடமாகாணத்தில் பாரிய நீர்ப்பாசனக்குளமான இரணைமடுக் குளத்தின் நான்கு வான் கதவுகள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் ராஜகோபால் ஆகியோரால் திறந்து விடப்பட்டன.

அதிக மழைவீழ்ச்சி காரணமாக இரணைமடு குளத்திற்கு அதன் நீரேந்து பகுதிகளிலிருந்து அதிக நீர் வரவு காரணத்தினால் நேற்று அதிகாலை 6 மணி அளவில் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டன.இரண்டு வான்

கதவுகள் 6 அங்குலத்திற்கும், இரண்டு வான் கதவுகள் 12 அங்குலத்திற்கும் திறக்கப்பட்டுள்ளன.

இதன் பின்னர் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் ராஜகோபு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது,...

குளத்திற்கு நீரேந்து பகுதிகளிலிருந்து அதிக நீர் வருகின்றமையால் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. எனவே தற்போது வெளியேறுகின்ற நீர் காரணமாக மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

# ஊடகவியலாளர் தாக்கப்பட்டமையை கண்டித்து அறிக்கை சமர்ப்பிப்பு

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**



முல்லைத்தீவு மாவட்ட ஊடகவிலயலாளர் தாக்கப்பட்டமையினை கண்டித்து நேற்று முல்லைத்தீவு நகர்பகுதியில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தின் போது முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவர் ச.தவசீலனால் கண்ட அறிக்கை வாசிக்கப்பட்டது.

அந்த அறிக்கைகள் அங்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், வேலன் சுவாமிகள் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியகட்சருக்கும் அறிக்கை ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

# ஊடகவியலாளர் தாக்கப்பட்டமை தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழு விசாரணை

**யாழ்.விசேட நிருபர்**

முல்லைத்தீவில் ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு தலைமை பொலிஸ் பரிசோதகரிடமும் 59 வது படைப்பிரிவின் கட்டளை தளபதியிடமும் அறிக்கை கோரப்பட்டுள்ளதாக இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் வடபிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் சுயாதீன ஊடகவியலாளர் விஸ்வச்சந்திரன் தாக்கப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்திகளை அடிப்படையாக கொண்டு 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இழக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரிவு 14 கீழ் சொந்த பிரேரணையாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# ஓமந்தையில் 12வயது மாணவி கர்ப்பம்: குடும்பஸ்தர் சந்தேகத்தில் கைது

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, ஓமந்தை, குஞ்சுக்குளம் பகுதியினை சேர்ந்த 12 வயதும் 6 மாதங்களுக்கு ஆன பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகி கர்ப்பம் தரித்துள்ள நிலையில், 32 வயது குடும்பஸ்தர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த மாணவிக்கு வயிற்றுவலி ஏற்பட்ட நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். வைத்தியர்கள் மாணவியினை சிகிச்சைக்குட்படுத்திய போது மாணவி கர்ப்பம் அடைந்த விடயம் தெரியவந்துள்ளது.

அதனையடுத்து வைத்தியர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தனர். மாணவியிடம் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த சமயத்தில் தன்னை ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாகியுள்ளதாக மாணவி வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த நபரை கைது செய்வதற்குரிய நடவடிக்கையினை பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

இதனடிப்படையில், ஓமந்தை மாதர் பனிக்கர்மகிழங்குளம் பகுதியைச் சேர்ந்த 32 வயதான இளம் குடும்பஸ்தர் ஒருவர் சந்தேகத்தில் ஓமந்தைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிசார் விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தனர். இதேவேளை,மாணவி வவுனியா வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகிறார்.




# ஐயப்பன் மகிமை

காலவ மகிஷியின் மகளான லீலாவதி, ஒரு சாபத்தின் விளைவாக மகிஷியாக பிறந்தாள். தனது சகோதரன் மகிஷாசுரனை ஆதிபாராசக்தி அழித்ததால் பிரம்மனை நோக்கி கடும் தவம் இருந்தாள். வரம் பெற்ற அவள் தேவர்களையும் முனிவர்களையும் துன்புறுத்தினாள்.பிரம்மாசுரனை அழிக்க மோகினி அவதாரம் எடுத்த விஷ்ணுவை கண்டு சிவபெருமான் மோகம் கொண்டார். இதன் விளைவாக ஐயப்பன் அவதாரம் நிகழ்ந்தது. அரிகர புத்திரனாக மணிகண்டன் அவதரித்தார். குழந்தையின் கழுத்தில் மணிமாலை இட்டுவிட்டு அவர்கள் இருவரும் மறைந்தனர். காட்டுக்கு வேட்டையாட வந்த பந்தள நாட்டு மன்னன் ராஜசேகரன் குழந்தையை கண்டெடுத்து அதற்கு மணிகண்டன் என்று பெயரிட்டு சீரும் சிறப்பாக வளர்த்தான் இந்த நிலையில் ராணி, ராஜராஜன் என்ற மகனை பெற்றெடுத்தாள்.



மந்திரியின் துர்போதனையால் அவள் மதிமயங்கினாள். சதி திட்டம் தீட்டப்பட்டது. ராணி தலைவலியால் துடித்தாள் ராணியைக் குணப்படுத்த வைத்தியர் புலிப்பால் வேண்டும் என்றார். மன்னன் அதிர்ச்சி அடைந்தான். புலிப்பாலை கொண்டுவர 12 வயது ஆன மணிகண்டன் புறப்பட்டார். பம்பை ஆற்றங்கரையில் மணிகண்டனுக்கும் மகிஷிக்கும் இடையே கடும்யுத்தம் நடந்தது. முடிவில் மகிஷி வீழ்ந்தாள். லீலாவதியாக அவள் சாப விமோசனம் பெற்றாள். அய்யனை தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு திருவடி பணிந்து நின்றாள். அய்யன் தான் நித்ய பிரம்மசாரி என்றைக்கு தன்னைத்தேடி கன்னி அய்யப்பன்மார் வராமல் இருக்கிறார்களோ அன்று அவளை மணந்து கொள்வதாக கூறி தமது இடப்பக்கத்தில் மாளிகைப்புறத்து மஞ்சள்மாதாவாக வீற்றிருக்க அருள்பாலித்தார்.

இந்திரன் புலிவடிவம் தாங்கிட ஐயப்பன் அதன்மீதேறி நாடு திரும்பினார். அதை கண்டு மிரண்ட ராணி, தன்னை மன்னிக்குமாறு வேண்டினாள். ஐயப்பன் தமது அவதார நோக்கினை எடுத்துக்கூறி தர்மசாஸ்தாவான தனக்கு விடை கொடுக்குமாறு வேண்டினார்.

இதைக்கேட்டதும் ராஜசேகர மன்னன் மனம் உடைந்தார். அவர் திருப்திக்காக ஐயப்பன் சபரிமலையில் தங்கி இருக்க சம்மதித்தார். பம்பை நதிக்கரையில் மணிகண்டன் அம்பு எய்தார்.

அந்த இடத்தில் பந்தள மன்னன் கோவில் கட்டினான். பரசுராமர் அங்கு ஐயப்பன் விக்ரகத்தை பிரதிஷ்டை செய்தார். சபரி என்ற யோகியின் நினைவாக அந்த இடம் சபரிமலை என்றழைக்கப்படுகிறது. இருமுடிகட்டி தம்மை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு ஆண்டுதோறும் மகரசங்கராந்தி அன்று ஐயப்பன் ஜோதிவடிவில் இன்றும் அருள்பாலித்துக்கொண்டிருக்கிறார்.

## மானுடவியல்

(தொடர்)

### ஐயடிகள் காடவர்கோன் நாயனார்



59

திருத் தொண்டராகிய ஐயடிகள் காடவர்கோன் நாயனார் வரலாற்றுண்மை இத்தேவார வாய்மைக்கு உருவந் தீட்டியவாறாக அமைந்திருக்கும் நயங்குறிப்பிடத்தகும்.

ஐயடிகள் காடவர்கோன் நாயனர் (காலம் கி.பி. 670 இல் இருந்து கி.பி. 685).

பெயர் விளக்கம்:

காடர் என்பது பல்லவ மன்னர் குலத்தினரைக் குறிக்கும் பொதுப்பெயர். ஐயடிகள் என்பது ஐயனடிகள் என்பதன் மரூவாகும். ஐயடிகள் காடவர்கோன்



என்னும் பெயர் ஐயனடிகளாகிய பல்லவ மன்னர் என்ற பொருள் தரும் பெயராகும்.இவர் குறுநில மன்னராகக் காஞ்சிபுரத்தில் அரசாட்சி செய்து வந்தார். துறவுள்ளம் மன்னரெல்லாம் தம் ஆணைவழி நிற்கவும் வடமொழி தமிழ் மொழிகளின் கலைத் தொண்டுகள் சிறக்கவும் ஆட்சிசெய்த இம்மன்னர் அரசுரிமையை தன் சிவனடித் தொண்டிற்கு இடையூறாகும் என உணர்ந்து அதனைத் தன் புதல்வன்பால் ஒப்புவித்து தலயாத்திரை மேற்கொண்டார் அவர் துறவு கொள்ள காரணம்:

1. அரச வாழ்விலும் அடியாராய் வாழ்தல் மேலானது
2. திருத்தல தரிசனம் திருவடிப் பேறு நல்கும்

சிதம்பரம் முதலான அனைத்துச் சிவதலங்களையும் வழிபட்டு ஓரோர் வெண்பாவால் அத்தலங்களைப் போற்றிப்பாடினார்.

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**

# சிவபார்வதியை நினைந்து 16 திங்கள் வழிபட்டால் சித்தி

16 திங்கட் கிழமைகள் சிவ பார்வதியை நினைந்து விரதமிருந்து பிரார்த்தனை செய்தால் எவ்வளவு மன கஷ்டங்களும் உங்களிடம் இருந்து சுலபமாக நீங்கி விடும்.

திங்களன்று சிவனை வணங்குவோர் விரதம் இருந்து அப்பனை காலையில் வீட்டில் நித்ய பூஜையிலும் மாலையில் கோயிலுக்கு சென்று சிவனை வணங்குவோருக்கு மறுபிறவியே இல்லை...

அந்த அளவுக்கு சிவனுக்குப் பிடித்த நாள் திங்கட்கிழமை...

விரதம் என்றால் சாப்பிடாமல் இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை...

அசைவம் தொடாமல் வேறு ஏதும் தவறான பழக்கங்களை செய்யாமலும் அன்றைய தினம் திருநீறு அணிந்து சிவனை வணங்கிணாலே போதும்....

அதே போல் தங்கம் வைரம் இவற்றால் பயமே தவிர பாதுகாப்பு இல்லை...

ஆனால் கழுத்தில் அணியும் ருத்திராட்சம் இருக்கிறதே அதற்கு உள்ள சக்தி உலகத்தில் எதற்கும் இல்லை.

32 ருத்திராட்சம் கொண்ட ஐந்து முகம் கொண்ட ருத்திராட்ச மாலையை அணிந்தால் எதிரியும் உன்னைப் பார்த்து வணங்குவான்.

தினமும் தவறாது நெற்றில் திருநீறு பூசுபவர்களுக்கு நான் என்ற அகந்தை முற்றிலும் அழிக்கப்பட்டு அன்பே வடிவாய் வாழ்வார்கள்.

சோமவாரம் என்பது திங்கட் கிழமையை குறிக்கிறது. 16 திங்கட் கிழமைகள் சிவபார்வதியை நினைந்து விரதமிருந்து பிரார்த்தனை செய்தால் எவ்வளவு மன கஷ்டங்களும் உங்களிடம் இருந்து சுலபமாக நீங்கி விடும்.



சோமவார விரதத்தை மேற்கொள்பவர்கள் எப்போது வேண்டுமானாலும் எந்த திங்கட் கிழமையிலும் துவங்கலாம். திங்கட்கிழமை அன்று அதிகாலையில் நீராடி மாலை வரை உபவாசம் இருந்து சிவபார்வதி பூஜைகள் மேற்கொள்ள வேண்டும். ரொம்பவே எளிமையான விரதமுறை தான் இது. ஆனால் பலனை பார்த்தால் அதிசயிக்கும் வண்ணம் பெரிதாகவே இருக்கும். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் சூழ்நிலைகளை இந்த விரதம் மேற்கொள்பவர்களுக்கு நிச்சயம் உருவாக்கித் தருவார்.

அன்றைய நாளில் சிவபெருமான் பார்வதி தேவியுடன் இணைந்த படத்திற்கு வில்வ அர்ச்சனை செய்து லிங்காஷ்டகம் படிக்கலாம். அல்லது சிவபெருமான் மற்றும் பார்வதி தேவிக்கு உரிய மந்திரங்களை ஜபிக்கலாம். முழுமையாக விரதம் இருக்க முடியாதவர்கள் நீர் ஆகாரத்தை உணவாக எடுத்துக் கொள்ளலாம். பழச்சாறுகள், பால், பழம் போன்றவற்றை உட்கொண்டு விரதம் மேற்கொள்ளலாம். வில்வ இலைகள் கிடைக்காதவர்கள் தோஷம் போக்கும் செவ்வரளி மலர்கள், சங்கு பூக்கள் அல்லது உங்கள் வீட்டில் பூக்கும் சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்ய உகந்த மலர்கள் எதுவாயினும் அர்ச்சனை செய்ய பயன்படுத்தலாம்.

நைவேத்தியமாக பழங்களையும் உங்களால் முடிந்த பாயாசம், சர்க்கரைப் பொங்கல் போன்ற ஏதாவது ஒரு நிவேதனத்தையும் படைக்கலாம். அன்றைய நாளில் சிவன் கோவிலுக்கு சென்று அர்ச்சனை செய்து வரலாம்.

மாலை வரை சிவ ஸ்லோகம் மனதிற்குள் உச்சரித்து வரவேண்டும். பின்னர் மாலையில் விளக்கேற்றி துப, தீப ஆரத்தி காண்பித்து விரதத்தை முடித்துக் கொள்ளலாம். இது போல் தொடர்ந்து 16 திங்கட்கிழமைகள் விரதம் மேற்கொண்டு சிவ பார்வதியை வணங்கினால் நிச்சயம் உங்களுடைய வேண்டுகோள்கள் நிறைவேறும். இந்த விரதத்தை நீங்கள் முடிப்பதற்குள் கணவன் மனைவிக்குள் நல்ல புரிதல் உண்டாகும், அன்னோன்யம் அதிகரிக்கும்.

## ஹம்ஸ யோகம் - 49



சாதகனால் அதீத தெய்வ ஆற்றல்களை நுகரமுடியும் தேவதைகளது ஆற்றலையும், செயலையும் உணர்ந்துகொள்ள முடியும். ஆகவே இந்த தன்மாத்திரை விழிபடைந்தவன் அதீத நுண்ணுணர்வுடன் கூடிய அறிவினைப் பெறுகிறான். இது சாதாரண மனித அறிவிற்கு அப்பாற்பட்ட ஒரு அறிவாகும். ஸோஹம் சாதனையின் சித்திகளில் ஒன்று கந்த தன்மாத்திரை விழிப்படைதலாகும்.

ஸோஹம் சாதனை நாத ஸ்வர யோகத்துடனும் தொடர்புடையது. மூச்சு உருவாக்கும் நாதத்தினை உணர்வதன் மூலம் ஸோஹம் சாதனையை நாத யோகமாக மாற்ற முடியும். உடலானது சூரிய, சந்திர கலை எனும் இரண்டு பிராண ஓட்டத்தின் மூலம் ஆளப்படுகிறது. இந்த இரண்டு பிராண ஓட்ட த்தினையும் மூச்சின் மூலம் சமப்படுத்தி இந்த சூரிய, சந்திர கலைப் பிராண ஓட்டத்தினைக் கட்டுப்படுத்த முடியும்.

உயர் பிராணாயாம சாதனையான ஸோஹம் சாதனை சாதகனில் மகா பிராண ஆற்றலை அதிகமாக கவர்ந்து தருவதால் சாதகன் தனது அக ஆற்றல்களை உணர்ந்து தான் யார் என்பதை அறியும் நிலைக்கு உயர்கிறான். இதன் மூலம் ஒருவன் அக உணர்வு மிகுந்தவனாகவும், எதை எப்போது செய்ய வேண்டும், எப்படிச் செய்தால் சரியான பலனைப் பெறலாம் என்ற நுண்ணுணர்வு ஆற்றலைப் பெறுகிறான். அவன் தனது பிராணனை நுண்மைப் படுத்திக்கொள்வதனால் சாதாரண புலன்களுக்குத் தெரியாத நுண்மையான தகவல்களை அறிந்து அதிக நன்மையடைகிறான்.

எந்தவொரு உபாசனையும் ஜெபம், தியானம், பாவனை ஆகிய இந்த மூன்றும் இன்றி பூரணமடைவதில்லை. நாம் தெய்வீக சக்தியுடன் தகுந்த தெய்வீக உணர்ச்சியினை ஏற்படுத்தி தொடர்புபடுவதுதான் உபாசனையின் நோக்கம். உபாசனை எனபதன் பொருள் அருகில் இருத்தல் என்பதாகும். விக்கிரகத்திற்கு அருகில் அமர்ந்து பூக்கள், நீர், சந்தன, குங்குமம், அக்ஷதை வைத்துக்கொண்டு மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு செய்யப்படும் உபாசனை உண்மையில் மனதிற்கு தெய்வ சக்தியை ஏற்கும் நிலையை உருவாக்குகிறது.

ஆனால் இப்படிச் செய்வதனால் மாத்திரம் உண்மையான பலன் கிடைப்பதில்லை. தெய்வசக்தி ஒன்று இருக்கிறது என்ற நம்பிக்கையுடன், அது வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் எனக்கு அருள் புரிகிறது என்ற நம்பிக்கையுடன் எமது ஆளுமையை வளர்த்துக்கொண்டு எமது பண்புகளை உயர்த்தி, தர்மத்தைக் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் நிலைக்கு உயர்ந்து, தெய்வீக வாழ்க்கை வாழ்வதே உபாசனையின் நோக்கம்.

**(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

18735) சிவன் வீற்றிருக்கும் இடம் எது? **கயிலாயம்**

18736) கயிலாயம் எந்த திசையில் இருக்கிறது? **வடக்கில்**

18737) கயிலாயம் வடக்கில் இருக்கும் போது, தென்னாடுடைய சிவனே போற்றி என்று கூறுவது ஏன்?

**வடக்கில் இருப்பது பூலோக கயிலாயம். சிவன் வீற்றிருக்கும் கயிலாயம் என்பது எல்லா உலகங்களுக்கும் மேலான இடம். மோட்சம் எனப்படும் வீடுபேறு அங்கே தான் உள்ளது.**

18738) வடக்கு, தெற்கு பிரச்சினை வழிபாட்டில் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் மாணிக்கவாசகர் என்ன செய்தார்?

**"எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்று பாடினார்.**

18739) சிவனுக்கு எத்தனை கண்கள்? **மூன்று கண்கள்.**

18740) இவற்றில் நெற்றிக்கண் என்ன வடிவமானது?

**நெருப்பு. இந்தப் பார்வை நன்மை அளிக்காது.**

18741) மற்ற இரு கண்களும் என்ன வடிவானவை?

**சூரியசந்திர. இவை நன்மை தருபவை.**

18742) இறைவனது அருள் கிடைக்க நமக்கு தேவையானது என்ன பார்வை?

**கடைக்கண் பார்வை**

18743) இந்த கடைக்கண் பார்வையை என்னவென்று சொல்லுவார்கள்? **"கடாக்ஷம்' என்பர்.**

18744) "கடாக்ஷம்' என்ற சொல்லை எப்படி பிரிப்பார்கள்?

**"கட+அக்ஷம்' என பிரிப்பார்கள்.**

18745) இதில் "கட' என்றால் என்ன? **கடைசி.**

18746) "அக்ஷம்' என்றால் என்ன?

**கண். அதாவது கண்களின் கடைப்புறப் பார்வை என்று பொருள்.**

18747) இந்த கடைக்கண் பார்வை எத்தகையது?

**இது கருணையே வடிவானது.**

18748) கடவுளை நேருக்கு நேர் நின்று வழிபடக்கூடாதாமே ஏன்?

**கடைக்கண் பார்வையே சகல ஐஸ்வர்யங்களையும் தரவல்லது. அதற்காகத் தான் நேருக்குநேர் நின்று தரிசிக்காமல், ஒரு பக்கமாக நின்று வழிபட வேண்டும் என்று சொல்லப்படுகிறது.**

18749) பூஜையறையில் எத்தனை விளக்குகள் ஏற்றலாம்?

**இரண்டு**

## கொழும்பு துர்க்கையம்மன் ஆலய தேர்த்திருவிழா







கொழும்பு 12, தட்டாரத்தெரு சில்வர் ஸ்மித் ஒழுங்கையில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா அண்மையில் நடைபெற்றது. (படங்கள்: கே.ஈஸ்வரலிங்கம்)

# கிழக்கின் குரல்



# திருமலையில் இராணுவத்தினரால் உற்பத்தி செய்யப்பட்ட 91 ஆயிரம் கிலோ சேதன உரம்

## இராணுவ தளபதியினால் லக்பொஹர நிறுவனத்திற்கு கையளிப்பு

**றொட்டவெவ குறூப் நிருபர்**

இலங்கை இராணுவத்தின் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு படை பிரிவினரால் உற்பத்தி செய்யப்பட்ட 91 ஆயிரம் கிலோகிராம் சேதனப் பசளை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

அரசாங்கத்தினால் சேதன விவசாய உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் அரச மட்டத்தில் சேதனப் பசளை உற்பத்தி நடைபெற்று வருகின்றது.

அதனடிப்படையில் இலங்கை இராணுவத்தின் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு படை பிரிவினரால் உற்பத்தி செய்யப்பட்ட 91 ஆயிரம் கிலோ பசளை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

திருகோணமலையில் அமைந்துள்ள 22 ஆவது படைப் பிரிவில் சனிக்கிழமை (27) இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவினால் லக்பொஹர நிறுவனத்திற்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.



சேதனப் பசளை உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கை இராணுவம் மூலம் 25,000 மெற்றிக்தொன் சேதனப் பசளை உற்பத்தியை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் இந்த கூட்டெரு உற்பத்தி இலங்கை இராணுவத்தின் மூலம் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருவதாக இதன்போது இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கடந்தமூன்று மாதங்களுக்கு முன்னர் இலங்கை இராணுவத்தினால் சேதனப் பசளை உற்பத்தி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

முதல் கட்டமாக 8,800 ஆயிரம் கிலோ வரை உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ச்சியாக வேலை திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் ஆரோக்கியமான சமூகம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக இவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்நிகழ்வில், லக்பொஹர நிறுவனத்தின் கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் ஆர்.எம்.தம்பிக்க ரத்னாயக்க, கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சன்ன வீரசூரிய, 22 வது கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சனத் அலுவிகாரே மற்றும் 23 வது கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நளீன் கொஸ்வத்த மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# திருமலை மாவட்ட செயலகத்தினால் ஆறுமுகநாவலருக்கு குரு பூசை விழா



**கந்தளாய் தினக்கரன் நிருபர்**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மாவட்ட செயலகத்தினால், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குரு பூசை விழா ஸ்ரீ. நாகம்மாள் அறநெறி பாடசாலையில் சனிக்கிழமை (27) இடம்பெற்றது.

இவ்விழா மாவட்ட செயலாளர் சமன் தர்சன பாண்டிக்கோரலவின் தலைமையில் நடைபெற்றது. இதன்போது நினைவு சொற்பொழிவுகளும்,விசேட பூசையும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம கணக்காளர் மாவட்ட செயலகம் எஸ்.பரமேஸ்வரன், பட்டிணமும் சூழலும் பிரதேச செயலாளர், தவத்திரு அகஸ்தியர் அடிகளார், திருமூலர் அடிகளார், பால கிருஷ்ண குருக்கள், கிராம சேவக நிர்வாக உத்தியோகத்தர்,ஆசிரிய ஆலோசகர் வலய கல்வி, வைத்தியர் சதீஷ்குமார், மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர், கிண்ணியா இந்து கலாசார உத்தியோகத்தர், மாவட்ட செயலக கலாசார ஊத்தியோகத்தர் பட்டிணமும் சூழலும் கலாசார உத்தியோகத்தர், அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் சமூகநலன் விரும்பிகள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# மூதூர் தாருல் ஜன்னாஹ் வித்தியாலயத்தில் பிரார்த்தனை

**மூதூர் தினகரன் நிருபர்**

கிண்ணியா குறிஞ்சாக்கேணி ஆற்றில் படகு கவிழ்ந்து மரணமடைந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களினது ஈடேற்றத்திற்காக மூதூர் தாருல் ஜன்னாஹ் வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் விசேட துஆப் பிரார்த்தனை வெள்ளிக்கிழமை (26) இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.எஸ். ஹில்மியின் ஏற்பாட்டில் பாடசாலை ஆராதனை மண்டபத்தில் ஒன்று கூடி நடாத்திய இவ்விசேட துஆப் பிரார்த்தனையில் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என கலந்து கொண்டு பிரார்த்தனை செய்தனர்.

# 'சுழியம்' குறும் திரைப்படம் இன்று வெளியீடு




ஸ்ரூடியோ 96 தயாரிப்பில் வழங்கும் 'சுழியம் 'குறுந்திரைப்படம் இன்று திங்கட்கிழமை ( 29 ) மாலை 7 மணியளவில் YouTube ல் வெளியிடவுள்ளதாக திரைப்படக் குழுவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்திரைப்படத்தின் முன்னோட்டம், கடந்த மாதம் வெளியாகி மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இக் குறுந்திரைப்படத்தினை நகைச்சுவையுடன் கூடிய திரில்லர் கதையமைப்பில் சமூகத்தில் நடக்கும் பிரச்சினைகளை அடிப்படையாக கொண்டு அழகாக படமாக்கியுள்ளனர்.

இரண்டு பாகங்களாக வெளிவர இருக்கும் இக்குறுந்திரைப் படத்தின் இரண்டாம் பாகம் எதிர்வரும் புதன்கிழமை வெளியாகும் என்பதை படக்குழுவினர் உறுதிப்படுத்தினர்.

இத்திரைப்படத்தில் கல்முனை பிராந்தியத்தில் முதல் முறையாக Cartoon animation தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இருப்பது பார்வையாளர்களுக்கு புதிய அனுபவத்தை தருவதுடன், கல்முனை பிரதேச குறுந்திரைப்பட எதிர்கால பாதைக்கு புதிய பரிமாணத்தை தரும் எனவும் படக்குழுவினர் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

## கிழக்கு மாகாணத்தில் மீண்டும் கொவிட் தொற்று

# பாடசாலைகளில் சுகாதார நடைமுறையை கடைப்பிடிக்குமாறு சுகாதார பணிப்பாளர் பணிப்பு

**ஒலுவில் விசேட நிருபர்**

கிழக்கு மாகாணத்தில் மீண்டும் கொவிட்19 வைரஸ் தொற்று பரவல் அதிகரித்து காணப்படுவதால், பாடசாலைகளில் இறுக்கமான சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்குமாறு, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர். எம். தௌபீக் தெரிவித்தார்.

ஏனைய சில மாகாணங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு கொவிட்19 தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு காய்ச்சல், இருமல், தொண்டை நோவு போன்ற நோய் அறிகுறி தென்படுமாயின் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாமென பெற்றோர்களைக் கேட்டுள்ளார்.

மாணவர்களும், ஆசிரியர்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளி என்பவற்றை பேண வேண்டும். இதற்கு ஒவ்வொரு ஆசிரியரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

பாடசாலை உணவகங்கள் மூடப்படவேண்டும். மாணவர்களும், ஆசிரியர்களும் வீடுகளிலிருந்து தங்களுக்குத் தேவையான உணவு மற்றும் குடிநீர் என்பவற்றை கொண்டு வருதல் வேண்டும். உணவு, நீர் என்பவற்றை பகிர்வதை தவிர்த்தல் வேண்டும்.

வகுப்பறைகளில் மாணவர்களுக்கு திடீரென காய்ச்சல், இருமல் ஏற்பட்டால் பாடசாலையில் பிரத்தியேகமான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மாணவரை வைத்தல் வேண்டும். இதற்கென ஆசிரியர் ஒருவரை நியமிக்க வேண்டுமென கேட்டுள்ளார்.

அடிக்கடி கை கழுவுவதோடு, மலசல கூடங்களை துப்புரவாக வைத்திருப்பதோடு, போதியளவு நீர் மற்றும் சவர்க்காரம் என்பன வைக்கப்படல் வேண்டுமெனவும், அறிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் எப்போதும் மாணவர்களின் சுகாதார நடைமுறைகள் தொடர்பாக நாளாந்தம் கண்காணிப்பில் ஈடுபடுவதோடு, பாடசாலையை பரிசோதனை செய்வதற்காக வரும் சுகாதார அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

# அடைமழையினால் தாழ் நில பிரதேசங்களில் வெள்ள அபாயம்

**பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்**



அம்பாறை மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக பெய்து வரும் மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் உள் வீதிகளில் நீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்து செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பாலமுனை, திராய்க்கேணி, ஜலால்தீன் புரம், உதுமா புரம், ஹுஸைனியா நகர் மீள்குடியேற்ற தாழ் நில பிரதேசங்களிலுள்ள வீதிகள் நீரில் மூழ்கி காணப்படுவதுடன், வீடுகளுக்குள்ளும் நீர் புகுந்துள்ளதால் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அடைமழையினால் தாழ் நிலப் பிரதேசங்களில் வெள்ள அபாயமும் ஏற்பட்டுள்ளதோடு, மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதோடு, பல்வேறு அசௌகரியங்களையும் எதிர் கொண்டுள்ளனர். கடல் கொந்தளிப்பாக இருப்பதனால் அதிகமான மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. இதனால் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

நன்னீர் மீன்பிடித் தொழிலும் பாதிப்படைந்துள்ளதுடன். விவசாயிகள் மற்றும் அன்றாட கூலித் தொழிலாளர்களின் நாளாந்த தொழில் நடவடிக்கைகளும் பாதிப்படைந்துள்ளன.

சீரற்ற காலநிலையினால் கடல் மீனுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், கடல் மீனின் விலையும் மரக்கறிகளின் விலையும் என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதை கண்டித்து மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்





**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

வட, கிழக்கில் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதை கண்டித்தும் நீதி கோரியும் மட்டக்களப்பில் ஞாயிற்றுக்கிழமை (28) கண்டன ஆர்ப்பாட்டமொன்று இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம், மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் என்பன இணைந்து இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

மட்டக்களப்பு நகரிலுள்ள காந்திப் பூங்காவுக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களில் அன்மையில் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை கண்டித்ததுடன், தாக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி வலியுறுத்தப்பட்டது.

ஊடகச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும், கிண்ணியாவில் தாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியைக் கொடு, சிறைப்படுத்தப்பட்டுள்ள ஊடகவியலாளரை உடன் விடுதலை செய், ஊடகவியலாளர்களை சுதந்திரமாக செயற்பட அனுமதி என்பன போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தாங்கியிருந்தனர்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் (ஜனா), முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறீநேசன், பி.அரியநேந்திரன், முன்னாள் மாகாண சபை பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி முதல்வர், மாநாகர சபை உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரமகர்கள் முக்கியஸ்தர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பெரியகல்லாற்றில் டெங்கு பரிசோதனை



**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட பெரியகல்லாற்றில் வீடு வீடாக டெங்கு பரிசோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் எஸ். இராஜெந்திரன் வழிகாட்டலில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் ஒழுங்கமைப்பில் பிராந்தியத்தில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டு, அவற்றை இல்லாதொழிப்பதற்கான செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய ஞாயிற்றுக்கிழமை (28) பெரியகல்லாறு கிராமத்தில் வீடு வீடாகச் சென்று டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டுவருவதுடன், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்காதோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

பெரியகல்லாற்றில் அனேகமான வீடுகளில் டெங்கு நுளம்பு கூடம்பிகள் பெருகும் இடங்கள் பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் டெங்கு ஒழிப்பு கட்டுப்பாட்டு செயலணிக்குழுவினர் ஆகியோரினால் இனங்காணப்பட்டுள்ளன. இதனையடுத்து இங்குள்ள வீடுகளில் பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்கு செயலணிக்குழுவினர், பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து டெங்கு பரிசோதனைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# கிழக்கில் வெற்றிடமாகவுள்ள கல்வி உத்தியோகத்தர்களை நிரப்ப நடவடிக்கை

**காரைதீவு குறூப் நிருபர்**

கிழக்கு மாகாண பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரியர் ஆலோசகர் பதவிகளுக்கு தற்காலிகமாக பணியாற்ற பொருத்தமானவர்களை தெரிவுசெய்து நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்குமாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்தின் ஏற்பாட்டில் இச்செயற்பாடு வலயரீதியில் நடைபெற்றுவருகிறது. ஆசிரியர் ஆலோசகர் வெற்றிடத்திற்கு 'வளவாளர்' (Resource Person)என்றும், உதவிக்கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்திற்கு 'இணைப்பாளர்' (Coordinator) என்றும் தற்காலிக நியமனம் வழங்கப்படுகிறது. அந்தந்த வலயங்களில் காணப்படும் வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்களை நியமிப்பதற்கான தெரிவை, வலயக்கல்விப்பணிப்பாளர்கள் மேற்கொண்டுமாகாணக்கல்விப்பணிப்பாளரிள் அங்கீகாரத்தை பெறுமாறு கூறப்பட்டள்ளது. கிழக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் பொருத்தமான தரம்பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் இதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுவருகிறார்கள். இவர்கள் பாடசாலை மேற்பார்வை கல்விஅபிவிருத்தி போன்ற செயற்பாடுகளில் ஏனைய நிரந்தரஆளணியினருடன் ஈடுபடுத்தப்படுவார்கள்.

# பெறுகை அறிவித்தல்

## மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின் சக்தி எரிசக்தி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை - மத்திய மாகாணம்

இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான கேள்விகோரல்

**கேள்விச் சுருக்கம்**

| தொடர் இல. | விபரம் | தேவைப்படும் அளவு | மீளளிக்கப்படாத கேள்விப் பிணை வைப்பு (ரூ) | கேள்விப் பிணையின் பெறுமதி (91 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்) | |
|---|---|---|---|---|---|
| | | | | காசாக ரூ. | வங்கிப் பிணை |
| 1. | இயந்திரங்கள் கொள்வனவு செய்தல் Engire - Four Strock/ Size-24" | 09 | 1,000.00 | 15,000.00 | 30,000.00 |
| 2. | Asphalt/ Concrete Cutter இயந்திரம் 5Hp - 13 Hp | 01 | 1,000.00 | 15,000.00 | 30,000.00 |
| 3. | வாகனம் தூக்கும் இயந்திரம் (Hoist) | 04 | 1,000.00 | 15,000.00 | 30,000.00 |
| 4. | டிஜிட்டல் கெமரா உபகரணங்கள் கொள்வனவு செய்தல் | 15 | 1,000.00 | 10,000.00 | 20,000.00 |
| 5. | கணனி இயந்திரம் | 30 | 1,000.00 | 30,000.00 | 60,000.00 |
| 6. | Uninterruptible Power Supply (UPS) | 40 | 1,000.00 | 3,500.00 | 6,000.00 |
| 7. | லெப்டொப் (Laptop) | 12 | 1,000.00 | 15,000.00 | 30,000.00 |
| 8. | Portable Hard Disk | 20 | 1,000.00 | 3,500.00 | 6,000.00 |

2. மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான திம்புல பனத்த கைத்தொழில் உத்தியோகபூர்வ இல்லத்தை குத்தகைக்கு விடல்.

மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 30 பேர்ச் மட்டில் பரப்பளவுடைய காணியுடன் அங்கு அமைந்துள்ள 1695 சதுர அடி கட்டிடத்திற்கு தேவையான பழுதுபார்த்தல்களை மேற்கொண்டு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு போசனசாலை (கொபி சென்டர்) ஆக நடத்திச் செல்வதற்காக வாடகை அடிப்படையில் 3 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு கேள்வி கோரப்படுகின்றது.

- இங்கு காணப்படும் கட்டிடத்தின் பழுதுபார்த்தல் மற்றும் வீட்டுத்தோட்ட அலங்காரம் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடலுக்கு அமைவாக அல்லது கேள்வியை பெற்றுக்கொள்ளும் இறுதித் தினம் மூலம் முன்மொழியப்படும் திட்டமிடலுக்கு அமைவாக நிறைவேற்றலாம்.
- பழுதுபார்த்தலுக்காக செலவழிக்கப்படும் தொகையை அறவிட வேண்டிய மாதாந்த குத்தகை தொகையில் கழித்துக் கொள்வதற்கு வாய்ப்பு.

| தொடர் இல. | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பிணை வைப்பு (ரூ) | கேள்விப் பிணையின் பெறுமதி 91 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும் |
|---|---|---|---|
| 1. | தொழில்நுட்ப அதிகார உத்தியோக பூர்வ இல்லம் II (PF) பகுதியை குத்தகைக்கு விடல் | 1,000.00 | 25,000.00 |

3. வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்ளல். மத்திய மாகாண, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கண்டி, மாத்தளை நுவரெலியா மாவட்டங்களில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக விலைமனுக் கோரப்படுகின்றன.

வாடகை அடிப்படையில் டபள் கெப் வண்டி, டிப்பர் வண்டி மற்றும் சிங்கள்கெப் வழங்கும் போது சாரதியுடன் வாகனங்களை பராமரிக்கும் செலவு உற்பட எரிபொருள் செலவு, சாரதியின் சம்பளம் மற்றும் ஏனைய சகல செலவுகளும் வாகன உரிமையாளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும். உற்பத்தி ஆண்டு 2005 இற்கு பின்னராக இருப்பதுடன் கெப் வண்டி வளிச்சீராக்கப்பட்டு மற்றும் 4WD செயற்பாட்டு நிலையில் உள்ள வாகனமாக இருத்தல் வேண்டும்.

| தொடர் இல. | விபரம் | மீளளிக்கப்படாத கேள்வி பிணை வைப்பு ரூ. | கேள்விப் பிணையின் பெறுமதி (120 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்) | |
|---|---|---|---|---|
| | | | காசாக | வங்கிப் பிணை |
| 1. | வாடகை அடிப்படையில் டபள் கெப் வண்டிகள் 04 ஐ பெற்றுக்கொள்ளல் | ரூ. 2,000.00 | ரூ. 45,000.00 | ரூ. 90,000.00 |
| 2. | வாடகை அடிப்படையில் டிப்பர் 05 ஐ பெற்றுக்கொள்ளல் (01 கியூப்) | ரூ. 2,000.00 | ரூ. 45,000.00 | ரூ. 90,000.00 |
| 3. | வாடகை அடிப்படையில் சிங்கள் கெப் வண்டிகள் 08ஐ பெற்றுக்கொள்ளல் | ரூ. 2,000.00 | ரூ. 45,000.00 | ரூ. 90,000.00 |

4. கம்பளை நான்கு மாடி பல்நோக்கு கட்டிடத்திற்கு மின் உற்பத்தியை பொருத்துவதற்கு விலைமனுக்கோரல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான கம்பளையில் நிர்மாணிக்கப்படுகின்ற நான்கு மாடி பல்நோக்குக் கட்டிடத்திற்கு 08 நபர்களுக்கு ஒரே முறையில் செல்லக்கூடிய மின் உயர்த்தியை பொருந்துவதற்கான விலைமனுக்கோரல்.

| தொடர் இல. | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பிணை வைப்பு (ரூ) | கேள்விப் பிணையின் பெறுமதி (91 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்) | |
|---|---|---|---|---|
| | | | காசாக | வங்கிப் பிணை |
| 1 | 1000 kg கொள்ளலவுடைய பயனிகள் மின் உயர்த்தியை நிறுவுதல் | ரூ. 3,500.00 | ரூ. 20,000.00 | ரூ. 40,000.00 |


➢ மேற்படி ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் இவ் அலுவலகத்தில் விநியோகிக்கப்படும் மாதிரிப் பத்திரங்களில் மாத்திரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்துடன் அதற்கான கேள்வித் தொகுதியை 2021.11.29 முதல் 2021.12.17 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை அலுவலக நேரங்களில் விநியோகிக்கப்படும். மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணத்தை மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளரின் பெயரில் மக்கள் வங்கியின் இல. 158100110000022 கணக்கு இலக்கத்திற்கு செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டை அதிகார சபையின் நிலைய பிரதம பொறியியலாளர் இடம் சமர்ப்பித்து கேள்வி மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

➢ குறித்த உருப்படிக்கு முன்னால் தரப்பட்டுள்ள குறித்த பெறுமதியுடைய கேள்விப் பிணையொன்றை பொது முகாமையாளர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது மக்கள் வங்கியின் இலக்கம் 158100110000022 கணக்கு இலக்கத்திற்கு செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டு அல்லது அரசு அனுமதித்த வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் பிணையொன்றை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

➢ இரு பிரதிகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் இரண்டாம் பிரதியென வேறுவேறாக கடித உறைகளில் உள்ளிடல் வேண்டும். அத்துடன் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த கேள்விப் பத்திரத்தின் பெயரை குறிப்பிட்டு 2021.12.20ம் திகதி மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன் தலைவர், பெறுகைக் குழு, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல. 09, எஹலேபொல குமாரி ஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது தலைமையகத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படும் குறித்த நேரத்தின் பின்பு கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

➢ எந்தக் கேள்விப் பத்திரத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது மேலதிக விபரங்கள் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களில் தொ.பே. இல. - 081-31599905 மூலம் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைமையக பொறியியலாளர் அல்லது 081-3159906 மூலம் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கணக்காளரை அழைத்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**இல. 09, எஹலேபொல குமாரிஹாமி மாவத்த,**
**போக்கம்பர, கண்டி.**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT


Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.
கம்பனியின் பெயர்:
**ஓர்கானிக் ப்ளனட் (பிவீடீ) எல்டீடி**
பதிவிலக்கம்: PV00248069
கூட்டிணைப்புத் திகதி:
**2021.11.09**
பதிவு முகவரி :
Thachchadampan, Mankulam

**கம்பனி செயலாளர்கள்**
Maheswaran Branavan
BBK Partnership (PVT) Ltd
Company

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.
கம்பனியின் பெயர்:
**ரோயல் பிளசிங் சேர்விசஸ் (கரண்டி) லிமிட்டட்**
பதிவிலக்கம்: GL 00244342
கூட்டிணைப்புத் திகதி:
**2021.08.26**
பதிவு முகவரி :
**இல. 05, புனித ஜூட் ஒழுங்கை, அரியாலை யாழ்ப்பாணம்**
**கம்பனி செயலாளர்கள்**
Maheswaran Branavan
BBK Partnership (PVT) Ltd
Company

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.
கம்பனியின் பெயர்:
**ரைட் ஃபோர் சிலோன் (கரண்டி) லிமிட்டட்**
பதிவிலக்கம்: GL00243288
கூட்டிணைப்புத் திகதி:
**2021.08.08**
பதிவு முகவரி :
**லெவல் 28, மேற்குக் கோபுரம் உலக வர்த்தக மையம் எச்சிலன் சதுக்கம் கொழும்பு -01**
**கம்பனி செயலாளர்கள்**
Maheswran Branavan
BBK Partnership (PVT) Ltd
Company

### 2022ஆம் ஆண்டில் சபைக்கு உரித்தான ஆதனங்களைக் குத்தகைக்கு விடுதல்

## மெதிரிகிரிய பிரதேச சபை

மெதிரிகிரிய பிரதேச சபைக்கு உரித்தான ஆதனங்களின் (மீன் தட்டு/ வார சந்தை/ வாகனத்தரிப்பிடம்) வர்த்தக உரிமையை 2022.01.01 முதல் 2022.12.31 வரை (2022ஆம் ஆண்டிற்கு) குத்தகைக்கு விடுவதற்காக ஏற்கனவே குத்தகைக்கு வழங்கப்படாது உள்ள கடை அறைகளை 2022.01.01 முதல் 2029.12.31 வரை (08 வருடங்கள்) குத்தகைக்கு விடுவதற்காக என்னால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**விலைமனுப்படிவங்களை வழங்கல்** : 2021.12.02 முதல் 2021.12.13 அன்று பி.ப. 1.00 வரை

**விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல்** : **2021.12.14 அன்று மு.ப. 10.00 வரை**

**விலைமனுத்திறத்தல்** : 2021.12.14 அன்று மு.ப. 11.00 இற்கு

மேலதிக விபரங்களை, வார வேலை நாட்களி அலுவலக நேரங்களில் அலுவலகத்திற்கு நேரில் விஜயம் செய்து அல்லது இல. 0272248842 என்ற தொலைபேசி மூலம் அல்லது www.medirigiriya.ps.gov.lk என்ற இணையத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**எம்.ஜீ.யூ.எஸ்.கே. விக்ரமாரச்சி**
**தலைவர்**

**2021 ஒக்டோபர் 26ஆம் திகதி**
**மெதிரிகிரிய பிரதேச சபையில்**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2022ஆம் வருடம்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**(நீர்ப்பாசன அமைச்சு)**

சிவில் பொறியியல், கட்டிடங்கள், நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு முறைமைகள் ஆகியன தொடர்பான வேலைகளுக்காக 2022ஆம் வருடத்தில் நிர்மாணம்/ புதுப்பித்தல்/ பராமரிப்பு ஆகியவற்றிற்காக நீர்ப்பாசன திணைக்களத்துடன் தம்மை பதிவு செய்ய விரும்பும் **C-6, C-7, C-8** அல்லது **C-9** தர **CIDA** பதிவைக் கொண்டுள்ள அரசாங்க உரிமையுள்ள வியாபார நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் உரிமையுள்ள புகழ் வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

விலைமனுக்கோரல்களை அழைப்பது இதன் பின்னர் நஷனல் ஷொப்பிங் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள பதிவு செய்தல் நடைமுறை ஊடாக பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களின் பட்டியலிலிருந்து மேற்கொள்ளப்படும். மேற்கூறப்பட்ட விலைமனுக்கோரல்களை கோருவது நீர்ப்பாசன திணைக்களத்தின் வருடாந்த தேவைப்படுத்தல்களில் தங்கியுள்ளது. இருப்பினும், தேவைப்படுமிடத்து தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் அல்லது ஏனைய வளங்களிலிருந்தும் விலைமனுக்கோரல்களை அழைப்பதற்கான உரிமையை நீர்ப்பாசனத் திணைக்களமானது கொண்டுள்ளது.

**01. பொதுவானது:**

1.1. தம்மை பதிவு செய்ய விரும்பும் அனைத்து விண்ணப்பதாரிகளும் 200.00 ரூபாவை செலுத்திய பின்னர், உருமாதிரி விண்ணப்பத்தை ரேன்ஜ் நீர்ப்பாசன பணிப்பாளர்களின் அலுவலகத்திலிருந்து/ நீர்ப்பாசன திணைக்களத்திலிருந்து அல்லது மாற்று வழியாக விண்ணப்பபடிவமானது **www.irrigation.gov.lk** என்ற நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு அவர்களின் விண்ணப்பத்தை உருமாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.2. ஒவ்வொரு பிராந்திய பதிவு செய்தலுக்கும் 500.00 இலங்கை ரூபாவை மீளளிக்கப்படாத பதிவு செய்தல் கட்டணமாக 6 மாத செல்லுபடியாகும் தன்மையிலுள்ள காசோலை மூலம் செலுத்தப்படல் வேண்டும் அல்லது ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டும். தீவு முழுவதிலும் கொவிட்-19 தொற்று சூழ்நிலை காரணமாக ஏற்பட்டுள்ள தடங்களை கருத்திற் கொண்டு, நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் தப்பரபேன் இலங்கை வங்கி கிளையின் 7042385 என்ற கணக்கிலக்கத்திற்கு ரொக்கப் பணத்தில் வரவு வைக்கப்பட்டு வரவு பணத்துண்டின் பிரதியை விண்ணப்பத்துடன் எமக்கு சமர்ப்பிக்குமாறு நாம் ஆலோசனை வழங்குகின்றோம்.

1.3. தேவைப்படுமிடத்து ஏற்புடையதாக கோரப்படுமிடத்து மாத்திரம் வேறேதாவது ஆவணங்களை சமர்ப்பிக்காமல் விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.
- அ. வியாபார பதிவு செய்தல்/ கம்பனி பதிவு செய்தலின் பிரதி.
- ஆ. CIDA பதிவின் பிரதி
- இ. அரசாங்க உரிமையுள்ள நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், சபை போன்றவைகளில், நிறுவனத்தின் தலைப்புக் கடிதத்தில் நிறுவக தலைவர் விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
- ஈ. விண்ணப்ப படிவத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள வேறேதாவது ஆவணங்கள்.

1.4. விண்ணப்பம், காசோலை அல்லது பணவரவுத் துண்டின் பிரதி மற்றும் உரித்தான ஆவணங்கள் ஆகியன பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''2022ஆம் வருடத்திற்கான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்" (..................... பிராந்தியம்) என குறிப்பிடப்படல் வேண்டும்.

1.5. இறுதித் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தல்/விசாரணையுமின்றி நிராகரிக்கப்படும். மேலும், தேவைப்படுத்தப்படும் பதிவு செய்தல் கட்டணம், மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் அல்லது போதுமானளவு செல்லுபடியாகும் தன்மையிலில்லாத (06 மாதங்கள்) காசோலைகள் ஆகியவற்றுடன் பெற்றுக் கொள்ளும் எந்தவொரு விண்ணப்பமும் எவ்வித அறிவித்தல்/விசாரணையுமின்றி நிராகரிக்கப்படும்.

1.6. இந்த பதிவு செய்தலுக்கு அபகீர்த்தியானோர் பட்டியலிலுள்ள அமைப்புக்களுக்கு தகுதியில்லை. அபகீர்த்தியானோர் அமைப்பென பின்னர் அடையாளம் காணப்படும் எந்தவொரு அமைப்பும் பதிவு செய்தல் கட்டணத்தை மீள்செலுத்தப்படாமல் இருப்பதற்கான காரணம் இருக்கின்றதென உணரப்பட்டால், நீர்ப்பாசன பணிப்பாளரினால் எவ்வேளையிலும் நிராகரிக்கப்படும்.

1.7. எந்தவொரு, தனியொரு அல்லது அனைத்து விண்ணப்பங்களையும் தனது சுயவிருப்பத்தில் நிராகரிப்பதற்கான அதிகாரத்தை உரித்தான பிராந்திய நீர்ப்பாசன பணிப்பாளர் கொண்டுள்ளார்.

1.8. விலைமனுக்கோரல்களை கோரல் மற்றும் ஒப்பந்தங்களை வழங்கல் ஆகியன அரசாங்க பெறுகை வழிகாட்டி – 2006, அரச நிதி சுற்றறிக்கை இல.: 04/2006 மற்றும் 03/2020 அதன் பின்னரான திருத்தங்கள் ஆகியவற்றின் பிரகாரம் நடாத்தப்படும்.

**02. பதிவு செய்தல்**

பின்வரும் நீர்ப்பாசன பிராந்தியங்களுடன் பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான காசோலையுடன் அல்லது பணவைப்புத் துண்டின் பிரதி மற்றும் அனைத்து உரித்தான ஆவணங்களையும் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக 2021 டிசம்பர் 28ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரியை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். காசோலையானது பின்வரும் அட்டவணையின் 04ஆம் நிரலில் உள்ளவாறு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| தொ. இல. | பிராந்தியம் | தபால் முகவரி | காசோலை வரையப்படும் நபர் | தொடர்பு இலக்கம் |
|---|---|---|---|---|
| (01) | (02) | (03) | (03) | (05) |
| 01 | அம்பாறை | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - அம்பாறை பிராந்தியம், 78, புதிய நகரம், அம்பாறை. | நீர்ப்பாசனப் பணிப்பாளர், அம்பாறை பிராந்தியம் | 063-2222276 |
| 02 | அனுராதபுரம் | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - அனுராதபுரம் பிராந்தியம், விமான நிலைய வீதி, அனுராதபுரம். | நீர்ப்பாசனப் பணிப்பாளர், அனுராதபுரம் பிராந்தியம் | 025-2222499 |
| 03 | பதுளை | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - பதுளை பிராந்தியம், பிரதேச பணிப்பாளர் அலுவலகம், பண்டாரவளை. | நீர்ப்பாசனப் பணிப்பாளர், பதுளை பிராந்தியம் | 057-2222527 |
| 04 | மட்டக்களப்பு | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - மட்டக்களப்புப் பிராந்தியம், அம்மன் கோயில் வீதி, த.பெ. 02, கல்லடி, மட்டக்களப்பு. | நீர்ப்பாசனப் பணிப்பாளர், மட்டக்களப்புப் பிராந்தியம் | 065-4929357 |
| 05 | கொழும்பு | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - கொழும்புப் பிராந்தியம், கொனிஸ்டன் பிளேஸ், கொழும்பு - 05. | நீர்ப்பாசனப் பணிப்பாளர், கொழும்பு பிராந்தியம் | 011-2584965 |
| 06 | காலி | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - காலி பிராந்தியம், 481, பெலிகஹ சந்தி, காலி | நீர்ப்பாசனப் பணிப்பாளர், காலி பிராந்தியம் | 091-2234845 |
| 07 | ஹம்பாந்தோட்டை | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - ஹம்பாந்தோட்டை பிராந்தியம், தெபரவெவ, திஸ்ஸமஹாராம | நீர்ப்பாசனப் பணிப்பாளர், ஹம்பாந்தோட்டை பிராந்தியம் | 047-2237070 |
| 08 | கண்டி | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - கண்டி பிராந்தியம், குண்டசாலை, கண்டி. | நீர்ப்பாசனப் பணிப்பாளர், கண்டி பிராந்தியம் | 081-2420423 |
| 09 | குருநாகல் | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - குருநாகல் பிராந்தியம், த.பெ. 44, கண்டி வீதி, குருநாகல் | நீர்ப்பாசனப் பணிப்பாளர், குருநாகல் பிராந்தியம் | 037-2223161 |
| 10 | மொனராகலை | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - மொனராகலை பிராந்தியம், ஹுலந்தாவ, மொனராகலை | நீர்ப்பாசனப் பணிப்பாளர், மொனராகலை பிராந்தியம் | 055-2276017 |
| 11 | பொலன்னறுவை | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - பொலன்னறுவை பிராந்தியம், புதிய நகரம், பொலன்னறுவ | நீர்ப்பாசனப் பணிப்பாளர், பொலன்னறுவை பிராந்தியம் | 027-2222215 |
| 12 | புத்தளம் | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - புத்தளம் பிராந்தியம், அனுராதபுரம் வீதி, புத்தளம் | நீர்ப்பாசனப் பணிப்பாளர், புத்தளம் பிராந்தியம் | 032-2265362 |
| 13 | திருகோணமலை | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - திருகோணமலை பிராந்தியம், ஓரிஸ் ஹில், திருகோணமலை | நீர்ப்பாசனப் பணிப்பாளர், திருகோணமலை பிராந்தியம் | 026-2222108 |
| 14 | மன்னார் | நீர்ப்பாசனப் பணிப்பாளர் - மன்னார் பிராந்தியம், மன்னார் வீதி, முருங்கன் | நீர்ப்பாசனப் பணிப்பாளர், மன்னார் பிராந்தியம் | 023-2050251 |

(அ) மேலேயுள்ள பதிவு செய்தல் நடைமுறையின் கீழ் பதிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர் செல்லுபடியாகும் CIDA பதிவு செய்தலை (குறிக்கப்பட்ட CIDA தரம்) எந்தவொரு ஒப்பந்த வழங்கலையும் பரிசீலனை செய்யும் போது கொண்டிருத்தல் வேண்டும்.

மேலதிக தகவலுக்காக தயவு செய்து நீர்ப்பாசன பணிப்பாளரை (ஒப்பந்தம் மற்றும் பெறுகை) அவருடைய தொடர்பிலக்கமாகிய 011-2582897 என்பதன் ஊடாக அல்லது பிரதேச உதவியாளரை (ஒப்பந்தம்) 011-2583305 என்பதன் ஊடாகத் தொடர்பு கொள்ளவும்.

**பொறியியலாளர் கே.டி.என். சிரிவர்தன,**
**நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம்,**
**நீர்ப்பாசன திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07.**

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 199, மெதரவும வீதி, சரசவி அஸபுவ, ஹுபுகல, காலி இல் வசிக்கும் **கித்சிரி போபே கொடிதுவக்கு** ஆகிய நான், இத்தால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்வது யாதெனில் 2017.04.18ஆம் திகதி காலி பிரசித்த நொத்தாரிசு **திரு. காரியவசம் ஜயலத் தன்த்ரி லால் நந்தன** என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 11505 இலக்கமுள்ள அற்றோணித் தத்துவமானது இன்று முதல் செயல்வலுப்பெறும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இதன் பின்னர் இவ் அற்றோணித் தத்துவத்தின் கீழ் என் சார்பில் மேற்கொள்ளப்படும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்புதாரியல்ல எனவும் அறிவித்துக் கொள்கின்றேன்.

26.11.2021

**கித்சிரி போபே கொடிதுவக்கு**

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் இலக்கம் யு.ஜி. 93-97 பீப்பல்ஸ் பார்க், பெட்டா, கொழுமபு 11 இல் வசிக்கும் **செல்லமுத்து பிள்ளை ராமனாதன்** ஆகிய நான் இலக்கம் 86/49 துடுகெமுனு மாவத்தை, பேலியகொட எனும் இடத்தில் வதியும் **கன்தையா பிரபா** மற்றும் ராமகிருஸ்னன் கிரிஷான்தன் என்பவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மற்றும் இலங்கையின் கொழும்பு பதிவாளர் நாயகம் திணைக்களத்தல் 2004ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8ஆம் திகதி உறுதிப்படுத்தப்பட்ட அட்டோர்ணி தத்துவத்தை செல்லுபடியற்றதாக்கி இரத்துச் செய்வதாக இத்தால் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கத்திற்கும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**செல்லமுத்துபிள்ளை ராமனாதன்**

## அற்றோணி தத்துவத்தை இல்லாது ஒழித்தல்

நீர்கொழும்பு, கிரின்ஸ் வீதி, 30ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவரும் 321682480X என்ற தேசிய அடையாள இலக்கத்தைக் கொண்டவருமான yee shiousen ஆகிய நான் அமெரிக்க ஐக்கிய நாடுகள், கலிபோர்னியா சிஏ 91307, வெஸ்ட் ஹில்ஸ், 23614 வனோவென் தெரு என்ற முகவரியை சேர்ந்த விரஹென்னதிகே கித்சிரி ரியன்சி அந்தோணி பெர்னாண்டோ என்பவரின் 67660 என்ற இலக்கமுடைய அற்றோணித் தத்துவத்தினாலும் பிரசித்த நொத்தாரிஸ் ஐயசேகர கங்கொடயாராச்சிலாகே அபேருவன் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு என்னை அவரது அற்றோணித் தத்துவக்காரராக நியமிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட 67660 என்ற இலக்க அற்றோணித்தத்துவமானது 2021 நவம்பர் 25ஆம் திகதியன்று செயல் வலுப்பெறும் வகையில் இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்டு, ஒழிக்கப்பட்டு வெற்றும் வெறிதாக்கப்பட்டதுடன் இதன் பின்னர் வீரஹென்னதிகே கித்சிரி ரியன்சி அற்றோணி பெர்னான்டோவின் அற்றோணித்தத்துவகாரராக விடுபட்டு மற்றும் தவிர்க்கப்பட்டுள்ளதெனவும் அல்லது அவரது சார்பாக அவரது பெயரில் அல்லது அவரது சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என இலங்கை சனநாயக சோஷசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் அதனது பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

**YEE SHIOUSEN**
**அற்றோணித்தத்ததுவக் காரர்**

**2021 நவம்பர் 25ம் திகதி**

## நிர்ணயிக்கப்பட்ட மூலதனத்தை குறைப்பதற்கான அறிவித்தல்

இலங்கையில் முறையாக கூட்டிணைக்கப்பட்டு பி வி 16110 ஐ பதிவிலக்கமாகவும் இல. 261/1, பமுனுவ வீதி, மஹரகம வை பதிவு செய்யப்பட்ட காரியாலயமாகவும் கொண்ட ROYALI POWER (PRIVATE) LIMITED எனும் கம்பனியானது, 2007 ஆம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59வது பிரிவிற்கமைவாக, 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ம் திகதி இல. 261/1, பமுனுவ வீதி, மஹரகமவில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ள அங்கத்தவர்களின் விசேட பொதுக் கூட்டத்தில் பின்வரும் விசேட தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் தனது மூலதனத்தை குறைக்கவுள்ளது என்பதனை இப் பொது அறிவித்தல் மூலம் அறியத்தருகின்றது.

"கம்பனியின் நிர்ணயிக்கப்பட்ட மூலதனமானது, மூன்று மில்லியன் (3,000,000) சாதாரண பங்குகளை ஒரு பங்கு பத்து ரூபா (10/-) படி ரூபா. முப்பது மில்லியன் (30,000,000/-) பெறுமதியான பங்குகள் கம்பனியால் வாங்கப்படுவதன் மூலம் ரூபா நாற்பது மில்லியன் முப்பதிலிருந்து (40,000,030/-) ரூபா பத்து மில்லியன் முப்பது (10,000,030/-)ஆக குறைப்பதிற்கான தீர்மானமானது இத்தால் நிறைவேற்றப்படுகின்றது.

**சபையின் கட்டளைப்படி,**
**ஏசியன் கோப்பரேட் செக்கரட்டறிஸ் (பிவிடி) எல்டிடி. காரியதரிசிகள்.**

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரிக்கும் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டவாறான காணி சுவீகரித்தல் சட்டததின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

**எனது இல. 10/3/1/3/75**
**காணி அமைச்சின் குறியீட்டு இல. 4-3/9/2018/WS/48**

இங்கு கீழ் குறிப்பிடப்படும் உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் பாரிய மாத்தளை நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் இறத்தோட்டை நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணப்பணிக்கு அரசாங்கம் சுவிகரிக்க ஏற்பாடுகளைச் செய்கின்றது மேலதிக விபரங்கள் தொடர்பாக இல. 2250/30 கொண்ட 2021.10.21 திகதி இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதி விஷேட கசாட் பத்திரிகையைப் பார்க்கவும்.

| | |
|---|---|
| மாவட்டம் | : மாத்தளை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : இரத்தொட்டை |
| கிராம சேவை அலுவலர் பிரிவு | : மாஉச்சாகொல்ல |
| ஊர் பெயர் | : மாஉச்சாகொல்ல |
| காணியின் பெயர் | : அச்வெத்துமே வத்த |
| அளவு | : 0.0681, 0.0531 ஹெக்டயார் |
| துண்டு இலக்கம் | : 1, 3 |
| திட்டமிடல் இலக்கம் | : ஆரம்ப வரைபட இல. மா 1824 |
| முகவரி | : பிரதேசச் செயலகம், இரத்தோட்டை |

திகதி: 2021.11.16

**பிரதேச செயலாளர்,**
**இரத்தோட்டை.**

# அரசாங்க அறிவித்தல்

## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சா.தரப் பரீட்சை - 2020 (2021)

## அழகியற் பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சை

மேற்படி பரீட்சையின் செய்முறைப் பரீட்சை 2021 12.01ஆம் திகதியிலிருந்து 2021.12.11ஆம் திகதி வரை 169923 பரீட்சார்த்திகளுக்காக 1483 பரீட்சகர் குழுக்கள் நாடு பூராகவும் செயற்படும். 41 - சங்கீத (மேலைத்தேய) பாடத்தின் கேட்டற் பரீட்சை 2021.12.05ஆம் திகதி உரிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.

1. 40 - சங்கீதம் (கீழைத்தேய)
2. 41 - சங்கீதம் (மேலைத்தேய)
3. 42 - சங்கீதம் (கர்நாடகம்)
4. 44 - நடனம் (சுதேச)
5. 45 - நடனம் (பரதம்)
6. 50 - நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)
7. 51 - நாடகமும் அரங்கியலும் (தமிழ்)
8. 52 - நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்)

02. மேலே குறிப்பிடப்பட்ட பாடங்களில் இறுதிப் பெறுபேற்றைத் தீர்மானிப்பதற்காக எழுத்துப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை ஆகிய இரு பகுதிகளின் புள்ளிகளும் பயன்படுத்தப்படும். எனவே அவ்விரு பகுதிகளுக்கும் தோற்றுதல் கட்டாயமானதாகும். செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்திகளுக்கு அப் பாடத்திற்கான பெறுபேறு வழங்கப்படமாட்டாது.

03. பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதியட்டைகளும் நேர அட்டவணையும் குறித்த பாடசாலை அதிபர்களுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதியட்டைகள் அவர்கள் தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

04. பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் கிடைக்கப்பெற்ற அனுமதியட்டைகளில் குறிப்பிட்டுள்ள பாடம், மொழிமூலம் என்பவற்றில் திருத்தங்கள் இருப்பின் உடனடியாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கு அவற்றை சமர்ப்பித்து திருத்தம் செய்து கொள்ள முடியும்.

05. அனுமதியட்டைகள் கிடைக்கப்பெறாத அதிபர்கள் தமது பாடசாலை எண், பாடசாலையின் பெயர், முகவரி மற்றும் உரிய விவரங்களுடனும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பெயர், முகவரி, பரீட்சைச் சுட்டெண், அழகியல் பாடம் முதலிய விவரங்களுடனும் பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ. இலக்கம் 1503, கொழும்பு எனும் முகவரிக்கு தபால் மூலமோ அல்லது நேரில் சமுகமளித்தோ சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் பாடசாலை அதிபர்களும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இது தொடர்பாக விசேட கவனத்தைச் செலுத்த வேண்டுமென்பதை இத்தால் அறியத் தருகின்றேன். மேலும் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்திற்குள் www.doenets.lk நுழைந்து பரீட்சை சுட்டெண்ணை உள்ளிடுவதன் மூலம் அனுமதி அட்டையை தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

06. தற்போதுள்ள கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக தனிப்பட்ட வகையில் வாத்தியங்கள் வைத்திருப்பவர்கள் அதனைப் பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்படுவதுடன் இல்லாதவிடத்து பரீட்சைக் குழுவிலுள்ள வாத்திய உபகரணங்களை பயன்படுத்த முடியும்.

**ஒரு பரீட்சார்த்திக்குப் பதிலாக வேறொருவர் பரீட்சைக்குத் தோற்றுதல் பரீட்சை விதிகளின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.**

**விசாரணை -**
**தொலைபேசி :- 011-2784208, 011 2784537**
**தொலைநகல :- 2784422**

**பி. சனத் பூஜித**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

**எனது எண்:** 6/8/OL/PRC./2020
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்.**
**பெலவத்த, பத்தரமுல்ல.**

**2021.11.29**

## வ/ப தபால் மற்றும் டெலிகொம் ஊழியர் கூட்டுறவு வங்கிச் சங்கம்

### மகா சபையின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு – 2022

### வாக்களிக்கும் தகைமையுள்ள அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல் காட்சிப்படுத்தல்

இக் கூட்டுறவுச் சங்கத்தின் 2022 - 2024 காலத்திற்காக மகாசபை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான பிராந்திய வாக்கெடுப்புக்களிற்காக பின்வரும் வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்நிலையங்களிற்கு இணைக்கப்பட்டுள்ள வாக்களிக்கத் தகைமை பெற்றுள்ள அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல் பின்வரும் நிலையங்கள் மற்றும் அந்நிலையங்களுக்கு இணையான சேவை நிலையங்களில் 2021.11.29 முதல் நிலையத்தின் வாக்களிப்பு நடாத்தும் வரை காட்சிப்படுத்தப்படும். அப்பட்டியல் தொடர்பான ஏதேனும் முறையீடுகள் அல்லது எதிர்ப்புக்கள் இருப்பின் 2021.12.28 அன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், வ/ப தபால் மற்றும் டெலிகொம் ஊழியா கூட்டுறவு வங்கிச் சங்கம் த.பெ.569, லோட்டஸ் வீதி, கொழும்பு -01 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

வாக்கெடுப்பு நடைபெறும் திகதி மற்றும் நேரம் கூடிய காலத்தில் அறிவிக்கப்படும்.

| நிலைய இலக்கம் | வாக்கெடுப்பு நிலையம் | நிலைய இலக்கம் | வாக்கெடுப்பு நிலையம் |
|---|---|---|---|
| 1 | கண்டி அஞ்சல் அலுவலகம் | 31 | களனி அஞ்சல் அலுவலகம் |
| 2 | பேராதெனிய அஞ்சல் அலுவலகம் | 32 | மீரிகம அஞ்சல் அலுவலகம் |
| 3 | கம்பளை அஞ்சல் அலுவலகம் | 33 | நீர்கொழும்பு அஞ்சல் அலுவலகம் |
| 4 | நாவலப்பிட்டிய அஞ்சல் அலுவலகம் | 34 | வேயன்கொட அஞ்சல் அலுவலகம் |
| 5 | நுவரெலியா அஞ்சல் அலுவலகம் | 35 | வவுனியா அஞ்சல் அலுவலகம் |
| 6 | ஹட்டன் அஞ்சல் அலுவலகம் | 36 | பதுளை அஞ்சல் அலுவலகம் |
| 7 | மாத்தளை அஞ்சல் அலுவலகம் | 37 | மஹியங்கனை அஞ்சல் அலுவலகம் |
| 8 | அநுராதபுரம் அஞ்சல் அலுவலகம் | 38 | வெலிமடை அஞ்சல் அலுவலகம் |
| 9 | பொலன்னறுவை அஞ்சல் அலுவலகம் | 39 | பண்டாரவெல அஞ்சல் அலுவலகம் |
| 10 | கேகாலை அஞ்சல் அலுவலகம் | 40 | மொனராகல அஞ்சல் அலுவலகம் |
| 11 | மாத்தறை அஞ்சல் அலுவலகம் | 41 | காலி அஞ்சல் அலுவலகம் |
| 12 | தங்காலை அஞ்சல் அலுவலகம் | 42 | பத்தேகம அஞ்சல் அலுவலகம் |
| 13 | அக்குரஸ்ஸ அஞ்சல் அலுவலகம் | 43 | அம்பலாங்கொட அஞ்சல் அலுவலகம் |
| 14 | ஹக்மன அஞ்சல் அலுவலகம் | 44 | ஹோமாகம அஞ்சல் அலுவலகம் |
| 15 | திஸ்ஸமகாராம அஞ்சல் அலுவலகம் | 45 | கல்கிசை அஞ்சல் அலுவலகம் |
| 16 | மட்டக்களப்பு அஞ்சல் அலுவலகம் | 46 | பொரளை அஞ்சல் அலுவலகம் |
| 17 | அம்பாறை அஞ்சல் அலுவலகம் | 47 | சிறி ஜயவர்தனபுர அஞ்சல் அலுவலகம் |
| 18 | திருகோணமலை அஞ்சல் அலுவலகம் | 48 | அவிசாவெல அஞ்சல் அலுவலகம் |
| 19 | களுத்துறை அஞ்சல் அலுவலகம் | 49 | அஞ்சல் தலைமையகம் |
| 20 | மதுகம அஞ்சல் அலுவலகம் | 50 | ஹவ்லொக் டவுன் அஞ்சல் அலுவலகம் |
| 21 | ஹொரண அஞ்சல் அலுவலகம் | 51 | மத்திய அஞ்சல் பரிமாற்ற நிலையம் |
| 22 | குருநாகல் அஞ்சல் அலுவலகம் | 52 | டெலிகொம் தலைமையகம் (அஞ்சல் மற்றும் டெலிகொம் சங்க அலுவலகம்) |
| 23 | கல்கமுவ அஞ்சல் அலுவலகம் | 53 | டெலிகொம் நாரஹேன்பிட |
| 24 | பொல்கஹவெல அஞ்சல் அலுவலகம் | 54 | டெலிகொம் பாணந்துறை |
| 25 | சிலாபம் அஞ்சல் அலுவலகம் | 55 | டெலிகொம் கம்பஹா |
| 26 | புத்தளம் அஞ்சல் அலுவலகம் | 56 | டெலிகொம் மாத்தறை |
| 27 | இரத்தினபுரி அஞ்சல் அலுவலகம் | 57 | கிளிநொச்சி அஞ்சல் அலுவலகம் |
| 28 | பலாங்கொடை அஞ்சல் அலுவலகம் | 58 | பாணந்துறை அஞ்சல் அலுவலகம் |
| 29 | அம்பிலிப்பிடிய அஞ்சல் அலுவலகம் | 59 | சிரேஷ்ட பரிசோதகர் பிரிவு |
| 30 | கம்பஹா அஞ்சல் அலுவலகம் | | |

**அநுஜா நயோமி தசநாயக்க,**
**வாக்கெடுப்பு அலுவலர்,**
**கூட்டுறவு அபவிருத்தித் திணைக்களம்,**
**இலக்கம் 330, யூனியன் பிளேஸ், கொழும்பு -02**

# மஹரகம நகரசபை

## பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குநர் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்தல் – 2022

2022ஆம் ஆண்டுக்குள் மஹரகம நகரசபைக்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வழங்குநர்கள், சேவை வழங்குநர்கள் பதிவு செய்தல் 2021.11.29 ஆம் திகதி தொடக்கம் 2021.12.12 ஆம் திகதி வரை வார நாட்களில் மேற்கொள்ளப்படும்.

தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி பதிவினை மேற்கொள்ள முடியும் என்பதோடு அந்தக் கட்டணத்தை காசோலை மூலம் செலுத்துவதாயின் "தலைவர், மஹரகம நகர சபை" பெயருக்கு எழுதி அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் மற்றும் காசோலை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்கள் பதிவு செய்தல் - 2022" என்று குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

| வரிசை இலக்கம் | பொருட்கள் மற்றும் சேவை வழங்கல் உருப்படிகள் | பதிவுக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 01 | அலுவலக எழுதுபொருட்கள் வழங்கல் | 1500/- |
| 02 | அசல் டோனர், ரிபன், காட்ரிஜ் வகைகள் வழங்கல் | 1500/- |
| 03 | கணினி பற்றுச்சீட்டுகள் மற்றும் அனைத்து வகையான கணினி எழுதுபொருட்கள் வழங்கல் | 1500/- |
| 04 | கணினி, அச்சு இயந்திரங்கள் வழங்கல் மற்றும் கருவிகள் வழங்கல் | 1500/- |
| 05 | கணினி இயந்திரம் மற்றும் அச்சு இயந்திரம் பழுதுபார்த்தல் | 1500/- |
| 06 | கணினி வலையமைப்பு மற்றும் வலையமைப்பை பராமரித்தல் | 1500/- |
| 07 | நிழற்பிரதி இயந்திரம், டுப்ளோ இயந்திரம், பணம் கணக்கிடும் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், ஸ்கேனர் இயந்திரம் உட்பட அனைத்து அலுவலக இயந்திரங்கள் வழங்கல் | 1500/- |
| 08 | நிழற்பிரதி இயந்திரம், டுப்ளோ இயந்திரம், பணம் கணக்கிடும் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், ஸ்கேனர் இயந்திரம் உட்பட அனைத்து அலுவலக இயந்திரங்களுக்கான உதிரிப் பாகங்கள் வழங்கல் மற்றும் பராமரித்தல் | 1500/- |
| 09 | அச்சிடப்பட்ட ஆவணங்கள், புத்தகங்கள், ரசீது புத்தகம், அச்சிடப்பட்ட எழுதுபொருட்கள், அச்சிட்டு வழங்கல் | 1500/- |
| 10 | அலுவலக மேசை, கதிரை, சிற்றலுமாரி ஆகிய அனைத்து பொருட்களும் (பலகை, உருக்கு, பிளாஸ்டிக்) வழங்கல் | 1500/- |
| 11 | அலுவலக மேசை, கதிரை, சிற்றலுமாரி ஆகிய அனைத்து பொருட்களும் (பலகை, உருக்கு, பிளாஸ்டிக்) பழுதுபார்த்தல் | 1500/- |
| 12 | புத்தகம் கட்டல் | 1500/- |
| 13 | பாடசாலைப் பை, புத்தகங்கள், பாதணி, காலுறை ஆகியன வழங்கல் | 1500/- |
| 14 | ட சேர்ட், பொட்டம், சீருடை துணி வகைகள், உட்பட தைக்கப்பட்ட ஆடைகள் மற்றும் துணி வகைகள் வழங்கல் | 1500/- |
| 15 | உத்தியோகபூர்வ அடையாள அட்டைகள் தயாரித்து வழங்கல் | 1500/- |
| 16 | தார்/ கோலாஸ்/ ப்ரிமிக்ஸ்/ கொங்றீற்/ ரெடிமிக்ஸ் ஆகியன வழங்கல் | 1500/- |
| 17 | வீதிக்கு தேவையான ஹியூம் குழாய் மற்றும் கொங்றீற் உற்பத்திகள் வழங்கல் | 1500/- |
| 18 | சரளை கொண்ட மண் வழங்கல் | 1500/- |
| 19 | வீதி பராமரிப்பு மற்றும் நிர்மாணப் பணிகளுக்கு தேவையான பொருட்கள் (1/4''x1/2'' சிப்ஸ் கற்கள், ஆற்று மணல், கலவை கற்கள் (ஏபிசி) கருங்கல் (6''x4'', 3'' x 4'', 1 1/2, ¾'', ½'') | 1500/- |
| 20 | மின் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கல் (வீதி ஒளியூட்டல் மற்றும் வீடு) | 1500/- |
| 21 | அலுவலக மின்பொருட்கள் மற்றும் கருவிகள் வழங்கல் | 1500/- |
| 22 | அனைத்து மின் உபகரண மோட்டார் பழுதுபார்த்தல் | 1500/- |
| 23 | அனைத்து கட்டிட பொருட்கள், வண்ணப்பூச்சு வகைகள், நீர் குழாய் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கல் | 1500/- |
| 24 | ஜீ.ஐ. குழாய்/கல்வனைஸ் குழாய் கருவிகள் மற்றும் அனைத்து இரும்பு வகைகள் வழங்கல் | 1500/- |
| 25 | சுகாதார உபகரணங்கள் (விளக்குமாறு, தும்புத்தடி, பின்னப்பட்ட கூடை, கம் பூட்ஸ், குப்பை தள்ளுவண்டி, மழை அங்கி, வாகனங்களை மூடும் துணி ஆகிய அனைத்து சுகாதார உபகரணங்கள் வழங்கல் | 1500/- |
| 26 | கிருமி நாசினிகள் (பைனோல், விம், சவர்க்காரம், ஹாபிக், லைசோல் போன்றவை) அனைத்து சுகாதார பாதுகாப்பு பொருட்கள் வழங்கல் | 1500/- |
| 27 | துர்நாற்றத்தை நீக்கும் சுற்றுச்சூழல் பாதிப்பற்ற இரசாயனங்கள் | 1500/- |
| 28 | வாகன மின்கல வகைகள்/ டயர்/ ட்யூப்/ கொலர்/ ரிம் வகைகள் வழங்கல் (டிரக்டர், டிப்பர், கெப், மோட்டர் கிரேடர், முச்சக்கர வண்டி, லோடர் ஆகியன) | 1500/- |
| 29 | டயர்கள் மீண்டும் நிரப்பல் | 1500/- |
| 30 | டிப்பர் டிரக், டிரக்டர், டேலர், பெக்கோ இயந்திரம், உட்பட கட்டுமானத்திற்கு தேவையான உபகரணங்கள் இயந்திரங்கள் ஆகியன வழங்கல் | 1500/- |
| 31 | கடைசல் வேலை | 1500/- |
| 32 | ஹைட்ரோலிக் ஹோஸ் மற்றும் ஹெட் பழுதுபார்த்தல் | 1500/- |
| 33 | இங்ஜெக்டர் பம்பி, இங்ஜெக்டர் முனை பழுதுபார்த்தல் | 1500/- |
| 34 | வீல் அலைன்மன்ட செய்தல் | 1500/- |
| 35 | வாகனப் பழுதுபார்த்தல் வேலை (மோட்டார் வாகனம், கெப், டிப்பர் டிரக், டிரக்டர், பெக்கோ இயந்திரம் ஆகியன) எஞ்சின் உட்பட அனைத்து பழுதுபார்த்தல்கள் | 1500/- |
| 36 | வாகன மின் கட்டமைப்பு பழுதுபார்த்தல் செயற்பாடு (மோட்டார் வாகனம், கெப், டிப்பர் டிரக், டிரக்டர், பெக்கோ இயந்திரம் ஆகியன) | 1500/- |
| 37 | முச்சக்கர வண்டி பழுதுபார்த்தல் செயற்பாடு மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்கல் | 1500/- |
| 38 | வாகன உதிரிப்பாகங்கள் வழங்கல் (மோட்டார் வாகனம், கெப், டிப்பர் டிரக், டிரக்டர், பெக்கோ இயந்திரம் ஆகியன) | 1500/- |
| 39 | டிப்பர் ட்ரக், டிரக்டர், டேலர், பெகோ இயந்திரம், லொறி, முச்சக்கர வண்டி, கெப் வண்டி ஆகிய அனைத்து வாகனங்களின் நன்னிலைப்படுத்தல் | 1500/- |
| 40 | அனைத்து வாகன டிங்கரின் செய்தல், வர்ணம் பூசுதல், குஷன் வேலை, முச்சக்கர வண்டிக்காக ரெக்சின் துணி இடல் | 1500/- |
| 41 | குப்பை மற்றும் மண்ணை தள்ளி மெல்லியதாக்குவதற்காக கெடபிளர் இயந்திரம், பெக்கோ இயந்திரம், வீதி செப்பனிடும் இயந்திரம், டிப்பர் வண்டி வாடகை அடிப்படையில் வழங்கல் | 1500/- |
| 42 | முச்சக்கர வண்டி, கெப் வண்டி, கார், வேன் வாடகை அடிப்படையில் வழங்கல் | 1500/- |
| 43 | வளிச்சீராக்கி இயந்திரம் வழங்கல் (கட்டிடம், மோட்டார் வாகனம்) | 1500/- |
| 44 | வளிச்சீராக்கி மற்றும் குளிர்சாதனப் பெட்டி பழுதுபார்த்தல் | 1500/- |
| 45 | மின்னியலாளர் சேவைகள். | 1500/- |
| 46 | மின் உபகரணங்கள், ஒலி பெருக்கி இயந்திரம் ஆகியன வழங்கல் | 1500/- |
| 47 | மின் உபகரணங்கள், ஒலி பெருக்கி இயந்திரம், மின்பிறப்பாக்கி ஆகியன வாடகைக்கு வழங்கல் | 1500/- |
| 48 | தகனக்கூட பராமரிப்பு மற்றும் நன்னிலைப்படுத்தல் | 1500/- |
| 49 | பலகை வகைகள் வழங்கல் (உள்நாட்டு/ வெளிநாட்டு) | 1500/- |
| 50 | இறப்பர் முத்திரை தயாரித்தல் | 1500/- |
| 51 | பெயர்ப்பலகை தயாரித்து வழங்கல்/சுவரொட்டி வரைதல், விளம்பரப் பலகை வரைதல் | 1500/- |
| 52 | இலக்க தகடு வகை (வரி/ விலங்கு/ மிதிவண்டி) | 1500/- |
| 53 | மரம் மற்றும் கிளைகளை வெட்டுவதற்காக | 1500/- |
| 54 | பாட்டிசன் வேலைகளுக்கு தேவையான அலுமினியம் மற்றும் ஏனைய கருவிகள் வழங்கல் மற்றும் தயாரித்தல் | 1500/- |
| 55 | அனைத்து வகையான உருக்கியொட்டல் வேலை | 1500/- |
| 56 | சமைத்த உணவு வழங்கல் (உணவு, சிற்றுண்டி) | 1500/- |
| 57 | சட்டத்தரணி சேவை | 1500/- |
| 58 | அளவையாளர் சேவை | 1500/- |
| 59 | கட்டமைக்கப்பட்ட சிவில்/ மின் பொறியியல் ஆலோசனை சேவை வழங்கல் | 1500/- |
| 60 | பட்டயக் கட்டிடக்கலை ஆலோசனை சேவை | 1500/- |
| 61 | அழுக்குத் துணிகளை துவைத்தல் | 1500/- |
| 62 | திரைச்சீலை வழங்கல் | 1500/- |
| 63 | எரிவாயு/ ஒட்சிசன்/ எசட்லின் வழங்கல் | 1500/- |

**ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்தல்**

| | | |
|---|---|---|
| 01. | ரூபா 100000.00 வரை | ரூபா 1500/- |
| 02. | ரூபா 100000.00 தொடக்கம் ரூபா 500000.00 வரை | ரூபா 1500/- |
| 03. | ரூபா 500000.00 தொடக்கம் ரூபா 1000000.00 வரை | ரூபா 1500/- |
| 04. | ரூபா 1000000.00 தொடக்கம் ரூபா 2000000.00 வரை | ரூபா 1500/- |
| 05. | ரூபா 2000000.00 இற்கு மேல் | ரூபா 1500/- |

**ஏனைய நிபந்தனைகள்**

01. மேலுள்ள இலக்கம் 01 தொடக்கம் 63 வரை பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்வதற்காக ஒவ்வொரு பொருட்களுக்கும் ஒரு விண்ணப்பப்படிவமாக குறித்த கட்டணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. வழங்கலுக்காக பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுவதோடு, தேவையான சந்தர்ப்பங்களில் வெளி வழங்குநர்களிடம் இருந்தும் கூறுவிலைகள் கோருவது மற்றும் கொள்வனவு செய்யும் உரிமை சபை வசமானதாகும்.
03. விலைமனுக்கள் பொதுவாக 06 மாத காலத்திற்குள் மாற்றப்படாது நிலையாக வைத்திருத்தல் வேண்டும்.
04. முறையான வகையில் விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கு மற்றும் நேரத்திற்கு பொருட்களை வழங்கத் தவறுகின்ற மற்றும் கோரலுக்கான விபரம் மற்றும் மாதிரிக்கு அமைய சிறந்த தரத்துடன் பொருட்கள் மற்றும் வழங்கலை மேற்கொள்ளத் தவறுகின்ற வழங்குநர்களின் பெயர்கள் பதிவு ஆவணத்தில் இருந்து நீக்கப்பட்டு, அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.
05. பொருட்கள்/ சேவை மற்றும் ஒப்பந்தம் வழங்கும்போது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரி வடிவங்கள்/ நிபந்தனைகளுக்கு மற்றும் சபையின் சட்டதிட்டங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.
06. 05 இலட்சத்திற்கு அதிகமான ஒப்பந்ததாரர்களை பதிவு செய்வதற்காக 2021/2022 ஆம் ஆண்டுகளுக்கு தொடர்பான ICTAD சான்றிதழை பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு வெளியால் தொழில்துறைகளுக்காக கேள்விமனுக்கள் கோரும் உரிமை சபை வசமானதாகும்.
07. ஏதேனும் தெளிவு பெறல் வேண்டுமாயின் 0112850265 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து நகர சபை வழங்கல் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**டிராஜ் லக்ருவன் பியரத்ன**
**தலைவர்**
**மஹரகம நகர சபை**
**2021.11.25 அன்று மஹரகம நகரசபை அலுவலகத்தில்.**

# தெதுரு ஓயா உள்ளிட்ட மூன்று நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளத்தில் தெதுரு ஓயா உள்ளிட்ட மூன்று நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் நேற்று (28) திறக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களாக தொடர்ச்சியாக பெய்துவரும் மழையினால் குறித்த நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு அதிகரித்துள்ளமையால் இவ்வாறு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதன்படி, தெதுரு ஓயா நிர்த்தேக்கத்தின் எட்டு வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

ஆறு வான் கதவுகள் நான்கு அடி வரையும், இரண்டு வான் கதவுகள் ஒரு அடி வரையும், தப்போவ நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகள் ஐந்து அங்குலம் வரையும், இங்கினிமிட்டிய நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் ஒரு அடி வரையும் திறக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய கடமை நேர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எனவே, குறித்த நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால், தெதுரு ஓயா, இங்கினிமிட்டிய மற்றும் தப்போவ நீர்த்தேக்கங்களுக்கு அண்டிய தாழ்நிலப் பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு கிரம உத்தியோகத்தர்கள் ஊடாக பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த சில நாட்களாக புத்தளம் மாவட்டத்தில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சிலாபம் மற்றும் ஆலங்குடா ஆகிய பகுதிகளில் வெள்ளநீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதாகவும், அவ்வாறு தேங்கி நிற்கும் வெள்ளநீரை வெளியேற்றும் நடவடிக்கைகள் பிரதேச செயலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக புத்தளம் மாவட்ட செயலாளர் கே.ஜி.விஜேசிறி தெரிவித்தார்.

# டிப்பருடன் மோ. சைக்கிள் மோதி விபத்து; இளைஞன் பலி

அநுராதபுரம் தினகரன் நிருபர்

யாழ்பாணம் கண்டி ஏ 9 பிரதான வீதியின் ரம்பாவ பகுதியில் டிப்பர் வண்டியொன்றுடன் மோட்டார் சைக்கிளொன்று நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற 19 வயது இளைஞனொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு 9.45 மணியளவில் ஏ 9 பிரதான வீதியின் வாசனா ஹோட்டலுக்கு அருகில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர். ரம்பாவ தொறமடலாவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட 19 வயதுடைய அகலங்க நிரோஷன் எனப்படும் இளைஞனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. விபத்து சம்பவத்துடன் தொடர்புடைய டிப்பர் வண்டியின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# அநுராதபுரம் வீடொன்றிலிருந்து ரூ. 38 இலட்சம் கொள்ளை

அநுராதபுரம் தினகரன் நிருபர்

மாவட்டம் : கேகாலை
பிரதேச செயலாளர் பிரிவு : தெஹியோவிட்ட
சிறு பிரிவு : அட்டுலுகம கோரலய மேற்கு
கிராம நிலதாரி பிரிவு : இல. 117 தயிகல
கிராமத்தின் பெயர் : தயிகல
வரைபட இலக்கம் : கே/3650
துண்டு இலக்கம் : 01-10 (10 துண்டுகள்)
விஸ்தீரணம் : 7.4155 ஹெக்டயார்

**யூ.பி. சந்தன அநுருத்த பியதாச,**
**பிரதேச செயலாளர்,**
**தெஹியோவிட்ட.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**தெஹியோவிட்ட.**



## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல. 28இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது**
**இல. டீஎச்ஓ/எல்ஏஎன்/ஏசீகியூரீஎன்/ஏ3/2/10**
**காணி அமைச்சின் குறிப்பு**
**இல. 4-3/5/2013/எச்டப்ளிவ்/482(1)**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங் களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2021.11.15ஆம் திகதிய 224/05 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாகாணம் : சப்பரகமுவ
மாவட்டம் : கேகாலை
பிரதேச செயலாளர் பிரிவு : தெஹியோவிட்ட
சிறு பிரிவு : பனாவல கோரலய மேற்கு
கிராம நிலதாரி பிரிவு : இல. 122பீ மடகம்மன
கிராமத்தின் பெயர் : மடகம்மன
வரைபட இலக்கம் : கே/3789
துண்டு இலக்கம் : 01-03 (03 துண்டுகள்)
விஸ்தீரணம் : 0.0187 ஹெக்டயார்

**யூ.பி. சந்தன அநுருத்த பியதாச,**
**பிரதேச செயலாளர்,**
**தெஹியோவிட்ட.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**தெஹியோவிட்ட.**



## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

108
**நிஸான் கார்** விற்பனைக்கு

18 8402 Nissan Sunny, 1991, Car, . கூடிய விலைக் கோரிக்கைக்கு, வெலிபல் பினான் ஸ் பிஎல்சு, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 07145 42958. 075388

### வேலைவாய்ப்பு

320
**வெற்றிடங்கள்** ஹோட்டல்கள், பேக்கரிகள்

புதிதாக ஆரம்பிக்கப்படும் உணவகத்திற்கு சகல வகையான சைவ உணவு தயாரிக்கக் கூடிய சைவர் பாஸ் மற்றும் கொத்து பாஸ் டி மேக்கர், வெயிட்டர், இடியப்பம் தயாரிப்போர் தேவை. உணவு தங்குமிடம் இலவசம். அன்றாட சம்பளம் அன்றே இருக்கும். சம்பளத்தில் இருந்து நிறுவனத்திற்கு வைப்புத் தொகை இல்லை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். சிங்களத்தில் கதைக்கவும். 071 9653418, 075 6605008 076258

### பொது

428
**டியூஷன் தேவை**

தெஹிவளைக்கு விஜயம் செய்து, (கேம்பிரிஜ் பாடத்திட்டம்), கணிதம், ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆசிரியை (பெண்) தேவை. அழைக்கவும். 07 7 3619909. 074684

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# அபிவிருத்தி லொத்தர் சபை

## நிதி அமைச்சு

## கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல்

### கேள்வி இல: DLB/PRO/2021/34

இந் நிறுவனத்தில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கீழ்க்காணும் கழிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்காக இது பற்றி ஆர்வம் காட்டுகின்றவர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| லொட் இல | உருப்படிகள் | மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகை |
|---|---|---|
| 01 | கழிக்கப்பட்ட இரும்பு (வாகன உதிரிப் பாகங்கள், தகடு மற்றும் இரும்புத் துண்டுகள் போன்றவை) | ரூ. 4000.00 |
| 02 | கழிக்கப்பட்ட பிளாஸ்டிக் (அலுவலக உபகரண பகுதிகள்/ கணனி துணைப்பாகங்கள் போன்றன) | ரூ. 2000.00 |
| 03 | கழிக்கப்பட்ட வளிச்சீராக்கி இயந்திரம் (Indoor 12, Outdoor 10) | ரூ. 3000.00 |
| 04 | அச்சு இயந்திரங்களில் பாவிக்கப்பட்ட காட்ரிஜ் (மை உள்ள மற்றும் அற்ற காட்ரிஜ்) | ரூ. 2000.00 |

02. இப் பொருட்களை பரீட்சித்துப் பார்த்தல் 2021.11.29 முதல் 2021.12.14 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அபிவிருத்தி லொத்தர் சபை, இல. 356, கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா மாவத்த, யூனியன் பிளேஸ், கொழும்பு -02 இல் அமைந்துள்ள இவ் அலுவலகத்தில் இடம்பெறும்.

03. இதற்கான பெறுகை ஆவணத் தொகுதியை மீளளிக்கப்படாத ரூ. 216.00 (8% வெட் வரியுடன்) படிவக் கட்டணத்தை காசாகச் செலுத்தி 2021.11.29 முதல் 2021.12.14 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை விண்ணப்பதாரியின் எழுத்து மூல வேண்டுதலின் அடிப்படையில் அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகளை சமர்ப்பிக்கும் போது ஒவ்வொரு லொட் இலக்கத்திற்கும் வேறுவேறாக மீளளிக்கப்படும் பிணை வைப்பை வைத்தல் வேண்டும்.

04. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணத் தொகுதிகள் தலைவர், சிறிய பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை, இல. 356, கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா மாவத்த, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு 2021.12.15 பி.ப. 2.30 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அம்முகவரியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவில் இதற்காக உள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடலாம்.

05. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுவதற்கான விலைமனுக்கள்' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

06. கேள்விகளை திறத்தல் 2021.12.15 பி.ப. 2.30 இற்கு இடம் பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**சிறிய பெறுகைக்குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**இல. 356, கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா மாவத்த**
**யூனியன் பிளேஸ், கொழும்பு - 02**
**011-4824824**
**2021.11.26**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு உரிமையானதும் பெய்ர வாவிக்கு (Beira Lake) முகப்பாகவுள்ளதுமானதுமானதொரு வர்த்தகரீதியிலான காணியொன்றை நீண்டகால குத்தகை அடிப்படையில் பல்வகையான அபிவிருத்தி செயற்றிட்டமொன்றிற்கு வழங்குவதற்கான விலைமனுவிற்கான முன்தகைமைக்கான ஆர்வ வெளிப்பாட்டிற்கான அழைப்பு

### (ICB No: SLPA/EOI/LANDS/2021-01)

1. அபிவிருத்தி, பராமரிப்பு, இயக்கம் மற்றும் துறைமுகம் மற்றும் ஏனைய சேவைகளை கொழும்பு துறைமுகத்தில் (துறைமுகம் என அழைக்கப்படுவது) மற்றும் இலங்கையிலுள்ள கப்பற்சரக்கை கையாளும் ஏனைய கடல் துறைமுகங்கள் என திருத்தப்பட்டவாறான 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை சட்டத்தினால் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கத்தின் துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சினால் (அமைச்சு என அழைக்கப்படுவது) இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது (SLPA) தாபிக்கப்பட்டுள்ளது.
2. இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது பெய்ர வாவிக்கு முகப்பாக பல காணித்துண்டுகளை உரிமையாக கொண்டுள்ளதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் Beira Lake Intervention Area Guide Plan இன் வழிகாட்டிகளை பின்பற்றி அப்படியான காணிகளை அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கின்றது. இந்த ஆர்வ வெளிப்பாட்டு அழைப்பானது முன்தகைமை நிலையில் இருப்பதுடன் பல்வகையான அபிவிருத்தி செயற்றிட்டமொன்றை தாபிப்பதற்கு பெய்ர வாவிக்கு முகப்பாகவுள்ள வர்த்தகரீதியிலுள்ள காணியொன்றை (125 பேர்ச்சுக்கள்) நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக அபிவிருத்தியாளரொருவரை தெரிவு செய்யும் செயற்பாட்டிற்கான முதலாம் படிநிலையாகும்.
3. ஆர்வமுள்ள சாரார்கள் ஆர்வ வெளிப்பாட்டிற்கான ஆவணத்தை கீழேயுள்ள குறிப்பு-01 இலுள்ள முகவரியில் 2021 நவம்பர் 30 ஆம் திகதியிலிருந்து 2022 சனவரி 10 ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 10 மணிக்கும் பி.ப. 4 மணிக்குமிடையில் இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. கீழே நிருணயிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒரு இலட்சம் இலங்கை ரூபாவை (100,000 இ.ரூபா) செலுத்திய பின்னர், கீழேயுள்ள குறிப்பு -01 இலுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆர்வ வெளிப்பாட்டிற்கான ஆவணங்களின் அழைப்பிற்கான முழுமையான தொகுதியொன்று எந்தவொரு ஆர்வமுள்ள சாராரினாலும் கொள்வனவு செய்யப்படலாம்.
5. ஆர்வ வெளிப்பாட்டு செயற்பாட்டின் அட்டவணையானது பின்வருமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

| | நிகழ்வு | திகதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|
| அ. | ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத்திற்கான அழைப்பு வழங்கல் | 2021 நவம்பர் 30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணியிலிருந்து 2022 சனவரி 11 ஆம் திகதியன்று மதியம் 12 மணி வரையும் | குறிப்பு-01 |
| ஆ | ஆர்வ வெளிப்பாட்டு முன்கூட்டம் | 2021 டிசம்பர் 15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு | குறிப்பு-01 |
| இ. | ஆர்வ வெளிப்பாட்டு ஆவண அழைப்பு தெளிவுறுத்தலுக்காக ஆர்வமுள்ள சாரார்களின் விண்ணப்பிக்கும் இறுதி திகதி | 2021 டிசம்பர் 15 ஆம் திகதியன்று | |
| ஈ. | ஆர்வ வெளிப்பாட்டு ஆவணங்களின் அழைப்பு தெளிவுறுத்தல்களை வழங்கும் இ.து.அ. இன் இறுதி திகதி | 2022 சனவரி 04 ஆம் திகதியன்று | |
| உ. | ஆர்வ வெளிப்பாடுகளை வழங்கும் இறுதி திகதி | 2022 சனவரி 11 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு | குறிப்பு-02 |
| ஊ. | ஆர்வ வெளிப்பாடுகளை திறத்தல் | 2022 சனவரி 11 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு | குறிப்பு-02 |

**குறிப்பு -01:** பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி), இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01, இலங்கை.
தொலைபேசி இல.: +94(0)112483456. தொலைநகல் இல.: +94(0)112323055.
மின்னஞ்சல் முகவரி: **cepd@slpa.lk**

**குறிப்பு -02:** பணிப்பாளர் (அபிவிருத்தி), இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01, இலங்கை.

6. ஆர்வ வெளிப்பாடுகளின் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக ஆர்வமுள்ள சாரார்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கு இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர்,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை.**

# பெறுகை அறிவித்தல்

## வளிச்சீராக்கி பழுதுபார்த்தல், சேவை மற்றும் பராமரித்தல் - 2022ஆம் ஆண்டு

## கொழும்பு கிழக்கு தள வைத்தியசாலை

கொழும்பு கிழக்கு தள வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவரால் 2022 ஆண்டிற்காக இவ் வைத்தியசாலையில் உள்ள வளிச்சீராக்கி இயந்திரத்தை பழுதுபார்த்தல், சேவை மற்றும் பராமரிப்பு ஒப்பந்தத்தின் கீழ் நடத்திச் செல்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

அதற்காக வளிச்சீராக்கி பழுதுபார்த்தல் பற்றி குறைந்த பட்சம் தொடராக 05 வருட அனுபவம் மற்றும் 2007 - இல. 07 எனும் கம்பனிகள் பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் மற்றும் அபகீர்த்தியானோர் பட்டியலிடப்படாத கேள்விதாரர்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

கீழ்க்காணும் ஆவணங்களை சமர்ப்பித்த பின்னர் 2021.11.30 முதல் 2021.12.19 வரை வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.30 வரை குறித்த கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் தேவைப்படின் மேற்படி காலத்திற்குள் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

1. கொழும்பு கிழக்கு தள வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு வேண்டுதல் கடிதம்

2. ரூ. 3000.00 மீளளிக்கப்படாத வைப்பு

தமது தகைமைகளை உறுதி செய்யும் சான்றுகள் மற்றும் கேள்விக் கட்டணத்தை செலுத்துதல் சார்பாக இவ் வைத்தியசாலையின் கணக்காளரால் விநியோகிக்கப்படும் பற்றுச் சீட்டு மற்றும் வேண்டுதல் கடிதத்தை சமர்ப்பித்து தலைமையகத்தில் கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் விண்ணப்பத்தை உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வளிச் சீராக்கிகளை பழுது பார்த்தல் சேவை மற்றும் பராமரித்தல் - 2022ம் ஆண்டு' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

இரு பிரதிகளுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து பணிப்பாளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் பணிப்பாளர் பணிமனையில் 2021.12.20ம் திகதி மு.ப. 10.00 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் மு.ப. 10.00 இற்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இவ் வேளைக்காக கேள்விதாரர் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பணிப்பாளர் கொழும்பு கிழக்கு தள வைத்தியசாலை (தொ.பே.இல. 011-2578226 ஐ அழையுங்கள். கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**கொழும்பு கிழக்கு தள வைத்தியாசலை,**
**முல்லேரியாவ.**

# இலங்கை திரிபோஷ லிமிட்டட்

## 2022ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2022ஆம் வருடத்தில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் பொருட்கள, சேவைகள் மற்றும் ஒப்பந்தங்களை வழங்குவதற்காக இலங்கை திரிபோஷ கம்பனியில் பதிவுசெய்வதற்கு எதிர்பார்க்கும் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழக்காணும் நிபந்தனைகளின் கீழ் 2021 டிசம்பர் 20ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கும் அட்டவணையில் குறிப்பிடப்படும் உருப்படிகள் மற்றும் இலக்கங்களை சரியாக உள்ளடக்கி எழுத்துமூல வேண்டுதலுடன் ஒரு வகுதி விண்ணப்பப்படிவத் தொகுதியொன்றிற்கு 500.00 ரூபா மீளளிக்கப்படாத வைப்புத்தொகையை ரொக்கப் பணமாக இலங்கை திரிபோஷ லிமிட்டட்டினால் பேணப்படும் இலங்கை வங்கியின் ஜா-எல கிளையின் 71324617 எனும் நடைமுறைக் கணக்கிற்கு வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை (Bank slip) thriposha.finance@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது தொலைபேசி வழியாக 071-2798911 எனும் வட்ஸ்அப் (Whatsapp) இலக்கத்திற்கு 2021 டிசம்பர் 17ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான காலத்திற்குள் அனுப்புவதன் பின்னர் குறித்த பதிவுசெய்யும் ஆவணத்தொகுதி மின் அஞ்சல் (Email) ஊடாக உங்களுக்கு வழங்கப்படும்.

02. பூர்த்தி செய்யப்பட்ட சகல விண்ணப்பப்படிவத் தொகுதிகளை 2021 டிசம்பர் 20ஆம் பி.ப. 2.00 மணிக்கு முன் thriposha.finance@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அனுப்புதல் வேண்டும் அல்லது இலங்கை திரிபோஷ லிமிட்டட் நிறுவனத்தின் பாதுகாப்பு பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகள் உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையை பொறியிட்டு, அதன் இடதுபக்க மேல் மூலையில் "2022ஆம் வருடத்திற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

03. ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் நபர்களால் தமது தகுதியை எழுத்து மூல சான்றுகள் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

04. மேல் மாகாணத்திற்குள் உள்ள வழங்குநர்கள் விடயத்தில் விசேட கவனம் செலுத்தப்படும்.

பின்வரும் தொ.பே இலக்கத்தின் ஊடாக இது பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

- தொ.பே. 0112236588 / 0112237418 தொலைநகல் இல. - 0112237363

**தலைவர்,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்**
**த.பெ - 17, கப்புவத்த, ஜா-எல.**

### அட்டவணை

2022ஆம் வருடத்தில் இலங்கை திரிபோஷ லிமிட்டட்டில் பதிவுசெய்துகொள்ளும் வழங்கல் உருப்படிகள் மற்றும் அதற்காக அறவிடப்படும் பதிவுக்கட்டணங்கள்

| இலக்கம் | வழங்கல் உருப்படிகள் | பதிவுக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 1 | All types of Hardware | 500.00 |
| 2 | All types of Electrical items, Equipment & Spares | 500.00 |
| 3 | பெயாரிங் Bearings & V Belts | 500.00 |
| 4 | Electronic components including Computers, Computer Parts, Toners | 500.00 |
| 5 | காகிதாதிகள் Stationery | 500.00 |
| 6 | அச்சு வேலைகள் Printing | |
| 7 | உராய்வு நீக்கி எண்ணெய்கள் Lubricants | 500.00 |
| 8 | கன்வெயார் பெல்ட் Conveyor Belts | 500.00 |
| 9 | பொறியியல் உபகரணங்கள் Engineering Equipment | 500.00 |
| 10 | சீருடைகள் Uniforms, T-Shirts & Shoes & Safety Shoes | 500.00 |
| 11 | உணவுப் பொருட்களை பதப்படுத்தும் இயந்திராதிகள் Food Processing Machinery | 500.00 |
| 12 | பாதுகாப்பு உபகரணங்கள் Safety Equipment | 500.00 |
| 13 | அலுவலக உபகரணங்கள் (மரச் சாமான்கள், உருக்கு, பிளாஸ்டிக் பொருட்கள்) Office Equipment | 500.00 |
| 14 | துப்பரவேற்பாட்டு உபகரணங்கள் Sanitary Equipment | 500.00 |
| 15 | ஆய்வுகூட உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் சேவைகள் Laboratory Equipment, Chemicals & Services | 500.00 |
| 16 | கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துதல் Sweeping(விலங்குணவுகளுக்குத் தகுதியான கழிவுப் பொருட்கள்/ Used Polythene/ Waste Paper etc) | 500.00 |
| 17 | தொலைபேசி / இணையதள சேவைகள் Telephone & Internet Services & Related Services | 500.00 |
| 18 | தீயணைப்பு உபகரணங்கள் Fire Equipment | 500.00 |
| 19 | உயர்அழுத்த வாயு மற்றும் பராமரிப்பு சேவைகள் (ஒட்சிசன், ஆகன், எஸிட்லின்) Air Compressors & Repairing Services | 500.00 |
| 20 | போக்குவரத்துச் சேவைகள் Transportation & Related Services | 500.00 |
| 21 | போக்குவரத்து நடவடிக்கைகள் Advertising & Related Services | 500.00 |
| 22 | Labour Outsourcing (Manpower on Contract Basis) | 500.00 |
| 23 | கொதிகலன் பாகங்கள் Boiler Parts | 500.00 |
| 24 | பீடைக் கட்டுப்பாட்டுச் சேவைகள் Pest Control & Related Services | 500.00 |
| 25 | Consultancy Services IT & Taxation | 500.00 |
| 26 | Domestic & International Courier Services | 500.00 |
| 27 | Security Services | 500.00 |
| 28 | Translator Services (Sinhala, Tamil & English) Relating Government Cabinet Papers & Others | 500.00 |
| 29 | Health Insurance | 500.00 |
| 30 | Shopping Bags & Garbage Bags (Polysack bags & Eco-Friendly | 500.00 |
| | **BUILDING MATERIALS, MAINTENANCE ITEMS & TOOLS** | |
| 31 | Fire Extinguishing Equipment & Safety Equipment | 500.00 |
| 32 | All kinds of Building Materials, Construction. (fine-sand, coarse sand, metals & related items) | 500.00 |
| 33 | Machinery tools & spares | 500.00 |
| 34 | Timber | 500.00 |
| 35 | Plastic, Plastic Pallets & Fiberglass Products | 500.00 |
| 36 | Aluminum Fitting Glass, Glassware & Related | 500.00 |

| இலக்கம் | வழங்கல் உருப்படிகள் | பதிவுக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 37 | Bathroom fittings, Wall & floor tiles | 500.00 |
| 38 | Steam Line Installation | 500.00 |
| 39 | Steam Line Parts Suppliers | 500.00 |
| 40 | Fire System Supply & Installation | 500.00 |
| 41 | All types of Balance Supply & Repairing | 500.00 |
| 42 | Sewage treatment plant supply & maintenance item supply. | 500.00 |
| 43 | Diesel Steam Boiler Repairing | 500.00 |
| 44 | Water treatment plant material supply. | 500.00 |
| | **ELECTRICAL ITEMS & SERVICES** | |
| 45 | IT Hardware & Software Supply, Service & Maintenance | 500.00 |
| 46 | Telephone Equipment | 500.00 |
| 47 | Supply & Installation of Network Cabling & Equipment (CCTV) | 500.00 |
| | **ENGINEERING SERVICES** | |
| 48 | Repairs to Electric Motors, Water Pumps, Fans, including Re-Winding | 500.00 |
| 49 | Repairs to Generators | 500.00 |
| 50 | Repairs & Servicing to Air Conditioners | 500.00 |
| 51 | Construction and repairs to Buildings/ Roads/ Other Structures | 500.00 |
| 52 | Electrical services Wiring, | 500.00 |
| 53 | Repairs to Water Supply, Sewerage and Sanitary Plumbing | 500.00 |
| 54 | Fabrication and Installation of Iron / Aluminum fixtures related to Buildings | 500.00 |
| 55 | Consultancy Service for Buildings / Building Services / Related Machinery & Equipment | 500.00 |
| 56 | Consultancy Service for Electrical Services | 500.00 |
| 57 | Supplying and Fixing Fixed Timber Furniture / Carpentry Works | 500.00 |
| 58 | Drafting / Blue Printing Drawing, Auto Cad Drawings & Preparation of Bill of Quantity (BoQ) for Maintenance Work | 500.00 |
| 59 | Hiring of Machineries (JCB, Excavator, Compressor, Forklift, Boom truck crane, etc.) | 500.00 |
| 60 | Mechanical engineering works (fabricating, milling, machining, welding, etc.) | 500.00 |
| | **VEHICLE SERVICE** | |
| 61 | Body Repair & Painting (Tinkering) | 500.00 |
| 62 | Electrical Works (Auto) | 500.00 |
| 63 | Batteries, Tyres & Tubes | 500.00 |
| 64 | Vehicle Spare Parts (Body parts) | 500.00 |
| 65 | Vehicle Repairing (Running Repairs - Engine & Gear Box) | 500.00 |
| 66 | Cushion Works (All Interior works) | 500.00 |
| 67 | Air Conditioning | 500.00 |
| 68 | Engine Tuning (E.F.R) | 500.00 |
| 69 | Auto Vehicle Repairing | 500.00 |
| 70 | Electrical Engineering Works (Installations) | 500.00 |
| 71 | Civil Engineering Works | 500.00 |
| 72 | Mechanical Engineering Works | 500.00 |

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை

### பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டம் – கடன் இல –P163305

**மீன் சந்தை, இறைச்சிக்கடை மற்றும் கருவாட்டுக்கடை அமைத்தல் சத்தியக்காடு – சுழிபுரம்**

**LDSP/NP/JAF/ VWPS/2021/02**

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு, உலக வங்கியிடமிருந்து பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்திற்காக கடனைப் பெற்றுள்ளதுடன், இக்கடனின் ஒரு பகுதி மீன் சந்தை, இறைச்சிக்கடை மற்றும் கருவாட்டுக்கடை அமைத்தல் சத்தியக்காடு - சுழிபுரம். கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், யாழ்ப்பாணம் வடமாகாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர் / செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் யாழ்ப்பாணம், (தொலைபேசி: 0212250144 fax :- 0212250144, email:-valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 15:00 மணி வரை 24.12.2021 வரையான காலப் பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் கேள்வி தரவு மற்றும் ஒப்பந்த தரவு (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் நிதி அமைச்சு அல்லது உலக வங்கி, அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு எந்த நிறுவனங்களாலும் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், மற்றும் உள்நாட்டு ஒப்பந்ததாரர்கள் கட்டிட கட்டுமானத்துறையில் கீழேயுள்ள அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்திற்கான நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA). பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தலைவர் / செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் யாழ்ப்பாணம், எனும் இடத்தில் 2021.11.27ஆம் திகதியிலிருந்து 2021.12.24 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 09:00 மணிக்கும் 15:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000.00 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2021.12.25 ஆம் திகதி 14:30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 2021.12.10 திகதி பி.ப 13:00 மணிக்கு வலிகாமம் மேற்கு பிரதேசபை தலைமை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| இல. | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லு படியாகும் காலம் |
| 01 | LDSP/NP/ JAF/ VWPS/ 2021/02 | மீன் சந்தை இறைச்சிக்கடை மற்றும் கருவாட்டுக்கடை அமைத்தல் சத்தியக்காடு சுழிபுரம் | 9.15Mn | 90 Days | C7 or above (Building) | 77 Days | 92,000.00 | 09.04.2022 |

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,**
**வடக்கு மாகாணம்.**

27.11.2021

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**

**வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகள் நிர்மாணித்தல் உட்பட பாதுகாப்பு வேலை விடயங்கள் மற்றும் வன மீள் பயிர் செய்கை வன வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

## வனசீவராசிகள் திணைக்களம்

# கேள்வி அழைப்பு

01. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வேலைகளுக்கு முன் தகைமையுடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இலக்கம் | பெறுகை இலக்கம் | வேலையின் பெயர் | பொறியியல் மதிப்பீட்டுப் பெறுமதி (வெட் இன்றி) (ரூ. மில்லியன்) | CIDA நிறுவன சான்றிதழ் | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப் பப்படிவக் கட்டணம் (ரூ) | கேள்விப் பிணையின் பெறுமதி (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20-B-17-2021 | மொனராகல அடவி பாதுகாப்பு அலுவலகத்தை பழுதுபார்த்தல் | 5.9 | C5/ C6/ C7 (கட்டிடங் கள்) | 2000.00 | 89000/- 2022.04.03 வரை செல்லுபடியா தல் வேண்டும் |

02. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் இடம்பெறும்.
03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களை 2021.12.17வரை அரச வேலை செய்யும் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை பத்தரமுல்ல, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.
04. கேள்வி ஆவணங்களை ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை 2021.12.17 வரை வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெயரில், குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் மேற்கொள்ளப்படும் எழுத்துமூல வேண்டுதல் மற்றும் CIDA பதிவுப் புத்தகத்தின் மூலப் பிரதியை, மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்திய பின்பு பெற்றுக்கொள்ளலாம்.
05. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் குறித்த செயற்றிட்ட வளாகத்தை பரீட்சித்துப் பார்த்து கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
06. மேற்படி கேள்விப் பிணை வங்கிப் பிணை மூலம் சமர்ப்பிப்பதாயின் தரப்பட்டுள்ள பெறுமதியை தரப்பட்டுள்ள திகதிவரை செல்லுபடியாகுமாறு அரசு அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அதனை காசாக செலுத்துவதாயின் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணையை சமர்ப்பித்திராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் 5 மில்லியன் அல்லது அதற்கு மேல் ஒப்பந்தங்களுக்காக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்த PCA 03- சான்றிதழ் கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்து இருப்பதுடன், அவ்வாறலலாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
07. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறாக உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2021.12.20 பி.ப. 2.30 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடலாம் அத்துடன், தாமதமாகக்கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகளை திறத்தல் அன்றே (2021.12.20) பி.ப. 2.30 இற்கு இடம்பெறுவதுடன், அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
08. கேள்விப் பத்திரங்கள் பற்றிய மேலதிக விபரங்களை 0112871537 தொ.பே இலக்கத்தின் மூலம் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் (நிதி) ஐ அழைத்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் உரிமை திணைக்களத்தின் பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன், இவ் அறிவித்தலில் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்படும் அல்லது குறிப்பிடப்படாத இப் பெறுகை செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தாகும்.
09. கேள்விப் பத்திரங்கள் தயாரிக்கப்படுதல் சம்பந்தமாக ஏற்படும் ஏதேனும் செலவுகளுக்காக தலைவர் திணைக்கள பெறுகைக் குழு பொறுப்புக்கூறாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்ல.**

## உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு
## மருத்துவ உபகரணத்தின் வழங்கலுக்கான பெறுகை அறிவித்தல்

1. கீழ் குறிப்பிடப்பட்ட இறுதித் திகதியில் மு.ப. 10.00 வரை பெறுகை, தலைவர், சுகாதார அமைச்சு, குழு மூலம் கீழ் குறிப்பிடப்பட்ட மருத்துவ உபகரணத்தின் பெறுகைக்கு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

| | உருப்படி | விலைமனு ஆவணங்களை பெற முடியுமான காலம் | | இறுதித் திகதி | BES அலுவலகத்தில் மேற்கொள்வதற்கு மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | மதிப்பிடப்பட்ட செலவு (ரூபா) (மில்லியனில்) |
|---|---|---|---|---|---|---|
| | | இருந்து | வரை | | | |
| 1 | 1 No. C-Arm X-Ray Machine | 2021.11.29 | 2021.12.27 | 2021.12.28 | 12,500.00 | 45 |

2. இலங்கை சந்தைக்காக மருத்துவ உபகரணங்களை வழங்கும் உற்பத்தியாளர்களின் பரிந்துரைக்கப்பட்ட ஏக பிரதிநிதி/ அங்கீகரிக்கப்பட்ட முகவர் மாத்திரமே இந்த பெறுகையில் பங்கேற்க தகுதி பெறுவர்.
3. எந்த ஒரு ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர் மூலமும் கொள்வனவு செய்யப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றிலேயே முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
4. மேல் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00க்கு இடையே பணிப்பாளர் (நிதி), உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு - 10 என்ற முகவரியில் இருந்து விலைமனு ஆவணங்களை பெற முடியும். (தொலைபேசி இல.: 011-2691916, 2694479 – தொலைநகல் இல.: 011-2698317)
5. கொழும்பு – 10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளரின் (நிதி) அலுவலகத்தில் விலைமனுக்கள் ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
6. விலைமனு ஆவணங்களை கொழும்பு – 10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளரின் (நிதி) அலுவலகத்தில் கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம்.
7. விலைமனு ஆவணத்துடன் கம்பனி பதிவாளரினால் வழங்கப்பட்ட சரியான பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கவும்.
8. மேலதிக விபரங்களை 2684732 என்ற தொலைபேசி இலக்கத்தில் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்/ பெறுகைக் குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு**
**27, டி சேரம் பிளேஸ், கொழும்பு – 10.**

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**

**அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சு**

## குண்டசாலை பிரதேச சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**செயற்றிட்டம்: தற்போதுள்ள கூட்டெரு பொறித்தொகுதியில் உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைகள்**

1. கீழே விபரிக்கப்பட்டவாறு தற்போதுள்ள கூட்டெரு பொறித்தொகுதியில் உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து குண்டசாலை பிரதேச சபையின் சார்பாக திணைக்கள பெறுகை குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| | |
|---|---|
| **விலைமனு இலக்கம்** | KUPS/COMPOST/03 |
| **ஒப்பந்தப் பெயர்** | கூட்டெரு பதனிடுதல் அலகு மற்றும் களஞ்சியசாலைக்கான விஸ்தரிப்பு நிர்மாணம் |
| **பொறியியலாளரின் மதிப்பீடு** | 35 மில்லியன் |
| **ஒப்பந்தக் காலப்பகுதி** | 217 நாட்காட்டி நாட்கள் |
| **விலைமனுவின் செல்லுபடியாகும் காலம்** | 91 நாட்காட்டி நாட்கள் |
| **விலைமனுப்பிணையின் பெறுமதி (இ.ரூபா)** | 700,000.00 |
| **விலைமனுப்பிணை செல்லுபடியாகும் காலம்** | விலைமனுவை மூடும் திகதியிலிருந்து 119 நாட்கள் |
| **மீளளிக்கப்படாத கட்டணம் (இ.ரூபா)** | 9,000.00 |
| **தகுதித்தன்மை தகவுத்திறன்** | I) தேவைப்படும் CIDA பதிவு<br>நிபுணத்துவம்: கட்டிட வேலைகள்<br>தரம்: சி-5, சி-4 இலிருந்து (பதிவானது விலைமனு செல்லுபடியாகும் காலம் வரை செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்)<br>II) இலங்கையின் கம்பனிகளின் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழின் பிரதியொன்று.<br>III) **www.dre.gov.lk** என்பதன் ஊடாக இலங்கையின் கம்பனிகளின் பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட ஒன்லைன் பதிவு சான்றிதழின் பிரதியொன்று. இந்நோக்கத்திற்காக இந்த குறிப்பிட்ட விலைமனுவிற்காக விலைமனுதாரர் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் ஒப்பந்தக்காரர்களின் பதிவாளருடன் பதிவு பெற்றுள்ளாரென சான்று பகருவதற்காக கணினி அச்சுப் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும். |
| **ஒப்பந்தச் சுருக்கம்** | வேலைகள், அகழ்தல், மண் நிரப்புதல் மற்றும் தற்போதுள்ள கட்டிடத்தை விஸ்தரிப்பதற்காக வலுவூட்டப்பட்ட கற்கலவை நிர்மாணம் மற்றும் உருக்கு கட்டமைப்பு, Zn/AL கூரை (AZ 150.047 mm) உருக்கு சட்டமைப்பு வடிவத்தில் புதியதொரு கட்டிடத்தை நிர்மாணித்தல். |
| **நிதியிடல் நிலைமை** | கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி பெறுமதி ஆகக் குறைந்தது 14 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும். |
| **நிதியிடல் வளங்கள்** | ஏனைய ஒப்பந்தரீதியிலான கடப்பாடுகள் நீங்கலாக ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும்/அல்லது கடன் வசதிகள் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முன்பணக்கொடுப்பனவு நீங்கலான பணக்கொடுப்பனவு 5 மில்லியனுக்கு குறைவாக இருத்தல் ஆகாது. |
| **நிர்மாண அனுபவம்** | கடந்த 5 வருடங்களில் நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மையில் பிரதான ஒப்பந்தக்காரராக ஆகக் குறைந்தது 01 செயற்றிட்டத்தையாவது விலைமனுதாரர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் (இந்த தேவைப்பாட்டிற்கு அமைந்தொழுகுவதற்காக சான்று பகரும் வேலையானது ஆகக் குறைந்தது 70% பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். |
| **விலைமனு முன்னோடிக் கூட்டம் மற்றும் தள விஜயத்தின் திகதி மற்றும் நேரம்** | 2021.12.06 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு. |
| **விலைமனு முன்னோடிக் கூட்டத்தின் இடம்** | கூட்டெரு திறந்தவெளியில் (வேலைத்தளத்தில்) |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை மெனிக்ஹின்ன குண்டசாலை பிரதேச சபையிடமிருந்து 081-3993627 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் 081-2375624 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாகவும் பெற்று 081-2375409 என்ற இலக்கத்தினூடாக குண்டசாலை பிரதேச சபை அலுவலகத்தில் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2021.11.29 ஆம் திகதியிலிருந்து 2021.12.13 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2021.12.17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**குண்டசாலை பிரதேச சபை,**
**மெனிக்ஹின்ன.**
**திகதி: 30.11.2021**

# பெறுகை அறிவித்தல்

**வர்த்தக அமைச்சு**

## கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்

### 10 வாடிகள் கொண்ட மின் உயர்த்திகள் இரண்டை அகற்றி தகுதியான இடமொன்றில் களஞ்சியப்படுத்தல்

கொழும்பு 02, வொக்ஷோல் வீதி, கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்தின் 10 மாடி மின் உயர்த்திகள் 02ஐ அகற்றி தகுதியான அமைவிடமொன்றில் களஞ்சியப்படுத்துவதற்காகத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. இலக்கம் 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு விஜயம் செய்து பரீட்சித்துப் பார்த்து, இம்மின் உயர்த்திகள் இரண்டை அகற்றுவதற்கான செலவினம் மற்றும் அதற்கான சிவில் வேலைகளிற்கான செலவினம் என்பன தனித்தனியாகக் குறிப்பிட்டு, இக்கருமத்திற்கான உங்கள் பிரேரணைகளைக் குறிப்பிட்டு உங்கள் கடிதத்தலைப்பில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. வார வேலை நாட்களில் மு.ப. 09.00 - 3.00 வரை மின் உயர்த்திகளை நேரில் பரீட்சித்துப் பார்க்கலாம். சுயமாகத் தயாரித்துப் பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள், 2021.11.26 முதல் 2021.12.10 வரை, கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்தின் 07ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். 2021.12.13 அன்று நண்பகல் 12.00 மணிக்கு விலை மனுக்கள் மூடப்பட்டு உடனடியாகவே அவை அவ்வேளையில் சமூகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

03. அனைத்து விலைமனுக்களுடனும் ரூபா 20,000/- இற்கான பிணையமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04. பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**இலக்கம்: 27, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு-02.**
**இலங்கை.**

---

**கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

## கட்டிடங்கள் திணைக்களம்

# கேள்விகளுக்கான அழைப்பு

**சேனபுர, மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி பயிற்சி நிலையத்தில் ஆலோசனை அலகை (Counseling Unit) நிர்மாணித்தல்**

**(ஒப்பந்த இலக்கம்: 04-03-13-2021/CT47)**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் 22.4 மில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவுடையதுமான ''சேனபுர, மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி பயிற்சி நிலையத்தில் ஆலோசனை அலகை நிர்மாணித்தல்'' எனும் வேலைகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் கோருகிறார்.

   நிர்மாணக் காலம் 119 நாட்கள்.

2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (iii) மற்றும் 03/2020ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரம் முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.

3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறையில் C6 அல்லது C5 தரப் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

   பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை (Original Certificate of PCA 03) கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். PCA 03 பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்பட மாட்டாது

4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மட்டக்களப்பு, மண்முனை வடக்கு வளவுகள், பிரதேச செயலகம், கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 4), பிரதம பொறியியலாளர் அலுவலகம், பிரதம பொறியிலாளரிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம். தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 065-2229801 தொலைநகல்: 065-2229807

5. மீளளிக்கப்படாத ஆறாயிரம் ரூபா (ரூபா 6,000.00) கட்டணத்தை 2021.11.26ஆம் திகதி முதல் 2021-12-09ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மட்டக்களப்பு, மண்முனை வடக்கு வளவுகள், பிரதேச செயலகம், கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 4), பிரதம பொறியியலாளர் அலுவலகம், பிரதம பொறியிலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. கேள்விகளை 2021-12-10ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடங்கள் திணைக்களம், 2ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பத்தரமுல்ல, செத்சிறிபாய, 2ம் மாடி, கட்டிடங்கள் திணைக்களத்தின் ஒப்பந்தக் கிளையில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் கேள்வியில் பங்குபற்ற தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.

7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது நீடிக்கப்பட்ட காலத்திலிருந்து 77 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.

8. அனைத்துக் கேள்விகளுடனும்
   * கேள்வி ஆவணத்தின் 09ம் பிரிவில் உள்ளடங்கும் படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * 300,000.00 ரூபா தொகைக்கு
   * 2022 மார்ச் 24ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித் தரவின் 16.2ம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. விலைகூறல் முடிவடைவதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்துக்குக் குறைந்த பட்சம் ஒரு மணித்தியாலத்துக்கு முன்னரே பாதுகாப்புச் சோதனைகளின் நிமித்தம் ''செத்சிறிபாய'' வளவுக்குள் வந்துவிடுமாறு விலைகூறுநர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**பொறி. எம்.எச்.எம். இஸ்மயில்,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2ம் மாடி, ''செத்சிறிபாய'', பத்தரமுல்லை.**
**www.buildings.gov.lk**

---

The Housewives' companion
Classifieds on
Daily News

---

**மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு**

## வளர்ச்சி பெறும் பிராந்தியங்களில் JICA நிதியிடப்பட்ட கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டம்

**(கடன் இலக்கம்: SL-P 116)**

**செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை, ஊவா மாகாணம்**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**திகதி: 29-11-2021**
**கடன் ஒப்பந்த இலக்கம்: SL-P 116**
IFB No: SL -P116/UVA/RR/2019/01
IFB No: SL- P116/UP2/AW/2020/05
IFB No: SL- P116/UVA/WS/2020/03
IFB No: SL- P116/UVA/WS/2020/08

1. வளர்ச்சிபெறும் பிராந்தியங்களில் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான நிறுவனத்திடமிருந்து (JICA) இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது வளர்ச்சிபெறும் பிராந்தியங்களில் கிராமிய உட்கட்டமைப்பு செயற்றிட்ட ஆகுசெலவிற்காக கடனொன்றைப் பெற்றுள்ளது. இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை ஊவா மாகாணத்திலுள்ள மீகஹகிவுல பிரதேச சபையிலுள்ள கிராமிய வீதிகளை மேம்படுத்துதல் மற்றும் மீகஹகிவுல கிராம சேவையாளர் பிரிவிலுள்ள நீர்ப்பாசன முறைமையை மேம்படுத்துதல் மற்றும் மியன்கந்துர உப திட்டம், பேரமெத வாசனாகம உப திட்டம் நீர் வழங்கல் திட்டத்தை நிர்மாணித்தல் போன்ற பணி ஒப்பந்தத்தின் கீழான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. விலைமனுக்கோரலானது ஜப்பானின் ODA கடன்களின் கீழான பெறுகைக்கான ஏற்புடையதான வழிகாட்டிகளுக்கமைவாக நடைமுறை மூலம் நடாத்தப்படுவதுடன் கடன் உடன்படிக்கையில் வரையறுக்கப்பட்டவாறு தகுதியுள்ள வளநாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் இதில் பங்குபெற்றலாம்.

3. பின்வரும் ஒப்பந்தங்களுக்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஊவா மாகாணத்தின் சார்பில் மாகாண பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

   i. **பொதி இலக்கம்:** SL -P116/UVA/RR/2019/01

